பக்கங்கள் : பதினாறு + 16
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 28 ஞாயிற்றுக்கிழமை (13.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 269

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து

## வடமராட்சி மீனவர்களால் நாளை மௌன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதனால், மீனவர்களது வாழ்வாதாரம் பாதிப்பு, தொழில் உபகரணங்கள்நாசம், இதனைக் கண்டித்து வடமராட்சி மீனவர்கள் மௌன கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நாளை முன்னெடுக்கவுள்ளனர்.

வடமராட்சிக் கடற்பரப்பில் கடந்த சில தினங்களாக இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடியில் 16

20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு

## அரசாங்கம் நாட்டு மக்களிடம் அபிப்பிராயம் கோருவது அவசியம்

ஜயம்பதி விக்ரமரத்ன எம்.பி வலியுறுத்து



(கொழும்பு)

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் மக்களிடம் அபிப்பிராயம் கோரப்படாமல் நிறைவேற்றப் பட்டமையால், மக்களிடம் அபிப்பிராயம் கோராமலேயே அதில் திருத்தங்களைச் செய்யமுடியும் என்று முன்வைக்கப்படுகின்ற தர்க்கம் நியாயமானதாகும்.

ஆனால் இறையாண்மையைப் பலப்படுத்துவ 15

## ஆசிரியையின் சங்கிலி அபகரிப்பு


(சாவகச்சேரி)

விடத்தற்பளைப் பகுதியில் தனிமையில் சென்ற ஆசிரியை ஒருவரின் ஒரு பவுண் நிறை கொண்ட சங்கிலி 15

உண்ணாவிரதப் போராட்டத்தால்

# தியாகி திலீபன் உயிரிழக்கவில்லை

பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ண கண்டுபிடிப்பு



(கண்டி)

உண்ணாவிரதப் போராட்டத்தால் திலீபன் உயிரிழக்கவில்லை. அவர் ஒரு நோயாளி என்பதாலேயே உண்ணாவிரதப் போராட்டத்துக்கு பிரபாகரனால் அனுப்பப்பட்டிருந்தார் என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)



தனிமைப்படுத்தலிலிருந்து

## தப்பிச் சென்றவர் மன்னாரில் கைது

(மன்னார்)

வவுனியா பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப் படுத்தல் நிலையத்தில் வெளி நாட்டிலிருந்து விசேட விமானத்தில் அழைத்து வரப்பட்டு தங்க வைக்கப்பட்டிருந்த சிலாபம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் வெள் 15

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து

## குடும்பப் பெண் மீது மீசாலையில் வாள்வெட்டு

(சாவகச்சேரி)

மீசாலை வடக்குப் பகுதியில் நேற்று சனிக்கிழமை இரவு 9 மணியளவில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த குழு ஒன்று குடும்பப் பெண் மீது சரமாரியாக வாள்வீச்சு மேற் கொண்டதாகத் தெரி விக்கப்படுகிறது. 15

போதைப் பொருட்களுடன்

## வவுனியாவில் மூவர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்களுடன் 3 பேர் நேற்று கைது செய்யப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சிதம்பரபுரம் 15

## ஆட்சிக்கு வந்தால் '20' இரத்து



எதிர்க்கட்சி உறுப்பினர் சரத் பொன்சேகா சூளுரை

10ஆம் பக்கம் பார்க்க


## யாழ்ப்பாணத்தில் சுற்றிவளைப்பு 25 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் போதைப்பொருட்கள் கைவசம் வைத்திருந்தவர்கள் உட்பட 25 பேர் கைது செய்யப் 15

## புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்கே மக்கள் ஜனாதிபதிக்கு அதிகாரமளித்துள்ளனர்

கோட்டாபயவிடம் மகா சங்கத்தினர் தெரிவிப்பு



(அநுராதபுரம்)

நாட்டுக்குப் பொருத்தமான புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவுக்கு பெரும்பான்மைப் பலத்தை வழங்கியுள்ளதாக மகா சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மக்கள் எதிர்பார்ப்பை கட்டம் கட்டமாக நிறைவேற்றி தன்னிறைவான பொருளாதாரம் ஒன்றை 15

நேற்று மட்டும்

## 26 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, நாட்டில் 15

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## கடந்த எட்டு மாதங்களில் மட்டும்
# 260 காச நோயாளர்கள் யாழில் இனங்காணப்பட்டுள்ளனர்
### மருத்துவர் யமுனாநந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் 260 காச நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் காசநோய் நிலைமைகள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வருடம் கடந்த ஓகஸ்ட் மாதம் மட்டும் 260 காச நோயாளர்கள் யாழ். மாவட்டத்தில் இனங்காணப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளார்கள். கொரோனாவிற்கு பின்னர் இருமல் அறிகுறியுடையவர்கள் வைத்தியசாலைக்கு வருவது குறைவடைந்துள்ளது.

50 பேருக்கு மேற்பட்ட காச நோயாளர்கள் இனங்காணப்படாமல் உள்ளார்கள். இவர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும்.

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிலும் காச நோய்க்குரிய சிகிச்சைகள் சளிப்பரிசோதனை செய்யக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

காச நோயாளிகளுக்கு சிகிச்சை மற்றும் காச நோயினை இல்லாது செய்வதற்கான முயற்சியை நாங்கள் முன்னெடுக்க வேண்டும். காசநோயினை கண்டறிய பி.சி.ஆர் பரிசோதனைத் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது. அது தற்போது யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள ஆய்வு கூடத்திலும் மேற்கொள்ளப்படுகிறது. கொரோனா நோயினை கண்டறிவதற்காக கொண்டு வரப்பட்ட பி.சி.ஆர் கருவி மூலமும் காசநோயை கண்டுபிடிக்கலாம்.

எனவே யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் சகல பகுதிகளிலும் கொரோனாவினை கண்டறிவதற்கு பயன்படுத்தப்படும் பி.சி.ஆர் கருவிகளை காசநோயை கண்டறிவதற்கும் பயன்படுத்தினால் காசநோயினை இன்னும் விரைவாக கண்டறிந்து குணப்படுத்துவதோடு இலங்கையிலிருந்து காச நோயை முற்றாக இல்லாதொழிக்க முடியும்.

கொரோனா நோய் தொற்றின் பின்னர் காச நோய் கண்டறிதல் வீதம் குறைந்துள்ளது. இதற்கு இரண்டு காரணங்கள் ஒன்று நோயா ளிகள் வராமல் இருக்கலாம். அடுத்ததாக முகக்கவசம் அணிவதனால் காசநோய் தொற்று குறைய டைவதற்கும் சாத்தியக் கூறு காணப்படுகிறது என மேலும் தெரி வித்தார். (ஞா-08)


**வைத்தியம்**

நாட்பட்ட வாதம், Rheumatic Arthritis, Gout, Spine, Compression, Sciatica, கால், கை விறைப்பு, இடுப்பு, கழுத்து வலிகள், நாட்பட்ட தலைவலி, Migraine, Sleep Apnea, குரட்டை, Piles, தோல் நோய்கள், குழந்தை இன்மை, மலட்டுத்தன்மை, Asthma, வலிப்பு, களைப்பு, குழந்தைச் சளி, பலவீனம் மற்றும் அனைத்துவித நோய்களுக்கான பக்க விளைவுகள் அற்ற சித்த ஆயுர்வேத ACU மூலிகைச் சிகிச்சைகள். (C-1032)

ஞாயிறு, திங்கள் வைத்தியரை யாழ்ப்பாணத்தில் சந்திக்கலாம்.

**Dr. R. Sivagurunathan / 077 730 1669**

வெள்ளவத்தை


## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த
# ஆயிரம் கிலோ மஞ்சளுடன் இராமேஸ்வரத்தில் மூவர் கைது

(இராமேஸ்வரம்)

தமிழகம் மண்டபம் அருகே கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கள்ளத் தோணியில் கடத்த முயன்ற ஆயிரம் கிலோ சமையல் மஞ்சளை கடலோர பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பாக வாகன ஓட்டுநர் உட்பட 3 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே வேதாளை கடற்கரையில் இருந்து இலங்கைக்கு மிளகு, மஞ்சள் கடத்த உள்ளதாக இராமேஸ்வரம் கடலோர காவல் ஆய்வாளர் கனகராஜ்க்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதனடிப்படையில், மண்டபம் மெரைன் காவல் நிலைய காவலர்கள் வேதாளை கடற்கரை விரைந்தனர். அப்போது குஞ்சார்வலசை பகுதியில் இருந்து வேதாளை நோக்கி கடற்கரை வழியாக சரக்கு வாகனம் ஒன்று வந்துள்ளது.

வாகனத்தை நிறுத்திய கடலோர பொலிஸார் வாகனத்தை சோதனை செய்ததில் 34 மூடைகளில் சமையல் மஞ்சள் பதுக்கி வைத்திருந்தது தெரியவந்தது.

இது தொடர்பாக சத்திய மங்களத்தை சேர்ந்த வாகன ஓட்டுநர் லோகவெங்கடேஷ் (33) மற்றும் வேதாளை பகுதியை சேர்ந்த ரியாஸ் (36), சகிபுல்ல (40) ஆகிய 3 பேரையும் கைது செய்த மெரைன் பொலிஸார் 34 பண்டல்களில் இருந்த ஆயிரம் கிலோ மஞ்சள்களை பறிமுதல் செய்தனர். (ஞா - 09.285)

# இலவச கண் பரிசோதனை

(ஆனைக்கோட்டை)

துளிகள் அமையத்தினால் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள யா/உயரப்புலம் மெதடிஸ் மிசன் வித்தியாலயத்தில் இலவச கண் பரிசோதனையும், மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளதால் பயன்பெற விரும்புபவர்கள் அதில் கலந்து கொள்ளுமாறு துளிகள் அமையத்தின் தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஞா)

# துவிச்சக்கர வண்டி நெல்லியடியில் களவு

(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியில் நேற்று முன்தினம் (11) இரவு பொருட்கள் வாங்குவதற்காக வியாபார நிலையத்திற்கு வந்தவரின் துவிச்சக்கரவண்டி களவாடப்பட்டுள்ளது. சைக்கிளை வியாபார நிலையத்திற்கு முன்னால் நிறுத்திவிட்டு பொருட்களை வாங்கிக் கொண்டு வந்து பார்க்கும் போது துவிச்சக்கரவண்டி களவாடப்பட்டிருந்தமை தெரியவந்தது.

இவ்வாறான செயற்பாடுகள் நெல்லியடி நகரப்பகுதியில தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக பொதுமக்களால் சுட்டிக்காட்டப்படுகின்றது. நெல்லியடி பஸ் நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கமரா பழுத டைந்த நிலை காணப்படுகின்றது. இத னால் இப்பகுதியில் தொடர்ந்து இவ்வாறான துணிகரமான சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக் கிறார்கள். (ஞா-08.60)

# மரண அறிவித்தல்



## சண்முகநாதன் சோமசுந்தரம்பிள்ளை

பிறப்பு 06.10.1941 இறப்பு 11.09.2020

யாழ். வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி நுணாவிலை வசிப்பிடமாகவும் கனடாவை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட சண்முகநாதன் சோமசுந்தரம்பிள்ளை நேற்று முன்தினம் (11.09.2020 ) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம்பிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியரின் இளைய மருமகனும் விமலாதேவியின் ஆருயிர்க் கணவரும் குமுதினி, அமுதினி, பாணு, கவிதா, வேணு, சுமித்தா, ஜெனித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகநாயகி, இரட்ணசபாபதி, பத்மநாதன், காலஞ்சென்ற மதிவதனி ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஷ்பரகுநாதன், ஜெயராசமூர்த்தி, விஜித்தா, உருத்திரராஜா, பிரதீப், சயந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஷால், யாதேஷ், கஜஷ்னி, மிதுஷ்னி, யாமுகி, யாழவன், டாரணி, ஷாரங்கா, விபுஷன், ஆரபி, மானஷி, ஜானஷி, அனுஷ்வி, லக்ஷ்வின், ஷானா ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை (14.09.2020) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (3868)

வேணு - மகன் : 0016479642853

அமுதினி - மகள் : 0014792443613

தகவல் :- குடும்பத்தினர்


**தேவை**

புத்தகக் கடை, போட்டோக்கொப்பி வேலை தெரிந்த / பழக விரும்பும் பெண் வேலையாட்கள் தேவை.

தொடர்பு (3869)

**077 223 1134, 077 314 4612**

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி, ஸ்ரேசன் வீதியில் சாவகச்சேரி நகரசபை கலாசார மண்டபத்துக்கு ( இலங்கை வங்கிக்கு ) மேற்குப்புறமாக (A9 வீதியிலிருந்து 50 m தூரத்தில் ) நான்கு (4) பரப்புக் காணி நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. மண்டபம் மற்றும் பெரிய அளவிலான கட்டடங்கள் அமைப்பதற்குகந்தது.

தொடர்புகளுக்கு (3856)

**077 416 2296**

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?**

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்** (3867)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

**வேலை வாய்ப்பு**

**10 வெற்றிடங்கள்**

18-30 வயதிற்கு உட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தகைமைகள் :- க.பொ. த சாதாரண தரம் (3864)


**Greater opportunity of Find employment**

வேலை வாய்ப்பைப் பெற சிறந்த வாய்ப்பு

**தொடர்புகளுக்கு : 077 157 1699**

# ஜனாதிபதியின் கைகளில் அதிகாரங்களை வழங்குவது நாட்டை அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும்

## சமூக நீதிக்கான தேசிய இயக்கம் எச்சரிக்கை



**(கொழும்பு) அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டிருக்கின்ற அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் கடந்தகால வரலாற்றுக்கு எவ்வித முன்னுரிமையையும் வழங்காமல், ஜனாதிபதியைச் சுற்றியுள்ள அதிகாரங்களை மாத்திரம் மையப்படுத்தியதாக அமைந்திருக்கிறது. இவ்வாறான மட்டுமீறிய அதிகாரங்களைத் தனியொரு நபரின் கைகளில் வழங்குவதென்பது மீளத்திருத்திக்கொள்ள முடியாத மிக மோசமான அழிவுகளுக்கு வழிவகுப்பதாக அமையும் என்று மாதுலுவாவே சோபித தேரரினால் ஆரம்பிக்கப்பட்ட சமூக நீதிக்கான தேசிய இயக்கம் எச்சரிக்கை செய்தது.**

மேலும் அரசியலமைப்பென்பது குறித்த நாட்டிற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டுமே தவிர தனிநபர்களுக்குப் பொருத்தமானதாக இருக்கத் தேவையில்லை என்று சுட்டிக் காட்டியிருக்கும் அந்த இயக்கம், "ஒரே நாடு - ஒரே சட்டம்" என்ற கொள்கையின் கீழ் நாட்டின் ஜனாதிபதி உள்ளடங்கலாக எவரும் சட்டத்திற்கு அப்பாற்பட்டவராக இருக்க முடியாது என்றும் தெரிவித்திருக்கின்றது.

20 ஆவது திருத்த யோசனையின் உள்ளடக்கங்கள் தொடர்பில் சமூக நீதிக்கான தேசிய இயக்கம் மேலும் கூறியிருப்பதாவது,

அரசாங்கம் அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலின் ஊடாக பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுள்ளது. நாட்டு மக்களால் வழங்கப்பட்ட ஆணைக்கு மதிப்பளிக்கும்.

அதேவேளை, நாடு என்ற வகையில் அனைத்து இலங்கையர்களும்பயனடைய வேண்டுமென்றால் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற மறுசீரமைப்புக்கள் அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கியதாக விரிவான கலந்தாராய்வுகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அரசியலமைப்பாக இருந்தாலும் அது அனைவருக்குமானதாக இருக்கவேண்டுமே தவிர, வெற்றி பெற்றவர்களுக்கானதாக மாத்திரம் இருக்கக்கூடாது.

தற்போது முன்மொழியப்பட்டிருக்கின்ற அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தம் கடந்தகால வரலாற்றுக்கு எவ்வித முன்னுரிமையையும் வழங்காமல், ஜனாதிபதியைச் சுற்றியுள்ள அதிகாரங்களை மாத்திரம் மையப்படுத்தியதாக அமைந்திருக்கிறது.

இந்த மறுசீரமைப்புக்கள் ஜனாதிபதியினால் நன்நோக்கத்துடனேயே முன்மொழியப்பட்டிருக்கும் என்று நம்புவதற்கே நாங்கள் விரும்புகின்றோம்.

ஆனாலும் இவ்வாறான மட்டுமீறிய அதிகாரங்கள் தனியொரு நபரின் கைகளில் வழங்கப்படுவதென்பது மீளத்திருத்திக்கொள்ள முடியாத மிக மோசமான அழிவுகளுக்கு வழிவகுப்பதாக அமையும் என்பதை மனதிலிருத்திக்கொள்வது மிகவும் அவசியமாகும்.

அரசியலமைப்பின் 17 ஆவது மற்றும் 19 ஆவது திருத்தங்கள் ஜனநாயகத்தையும் சட்டத்தின் ஆட்சியையும் மேலும் வலுப்படுத்துவதாக அமைந்திருந்தன என்பதுடன் அத்தகைய முற்போக்கான திருத்தங்கள் முன்மொழியப்பட்டதிலிருந்தே சமூக நீதிக்கான தேசிய இயக்கம் அவற்றுக்கு ஆதரவளித்தது.

அந்தவகையில் எதிர்காலத்தில் அரசியலமைப்பில் ஏற்படுத்தப்படும் மாற்றங்கள் 19 ஆவது திருத்தத்தின் மூலமான ஜனநாயக நிர்வாகத்தை மேலும் வலுப்படுத்துவதாக அமைய வேண்டுமே தவிர, அவற்றைப் பின்னோக்கித் திருப்புவதாக அமையக்கூடாது.

நாடொன்றின் நிர்வாகம் என்பது ஜனநாயகக் கட்டமைப்புக்களாலேயே முன்னெடுக்கப்பட வேண்டும். எனினும் முன்மொழியப்பட்டுள்ள 20 ஆவது திருத்தம் தனியொரு நபரின் கைகளில் அதிகாரங்களை வழங்குவதில் கவனத்தைக் குவித்திருக்கின்றது.

இந்த மறுசீரமைப்புக்கள் நாட்டில் சர்வாதிகார ஆட்சியொன்றுக்கு வழிவகுக்கக்கூடியவையாக இருப்பதுடன் இது பொருளாதார, சமூக, கலாசார ரீதியில் நாட்டை சிதைவடையச் செய்யும்.

"ஒரே நாடு - ஒரே சட்டம்" என்ற கொள்கையின் கீழ் எந்தவொரு நபரும் சட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட முடியாது. இது தற்போதைய மற்றும் எதிர்காலத்தில் வரவிருக்கின்ற அனைத்து ஜனாதிபதிகளுக்கும் பொருந்தும். ஆனால் கவலைக்குரிய விதமாக 20 ஆவது திருத்தம் ஜனாதிபதியை சட்டத்திற்கு அப்பாற்பட்டவராக நிறுத்துகின்றது. பாராளுமன்றமும் நீதித்துறையும் ஜனாதிபதிக்கு அடிபணியும் நிலையேற்படுகிறது.

அரசியலமைப்பென்பது குறித்த நாட்டிற்குப் பொருத்தமானதாக இருக்க வேண்டுமே தவிர, தனிநபர்களுக்குப் பொருத்தமானதாக இருக்கத்தேவையில்லை. ஆனால் முன்மொழியப்பட்டிருக்கும் திருத்தத்தின் ஊடாக முக்கிய பதவிகளுக்கான நியமனங்களைச் செய்வதற்கும் நீக்குவதற்கும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அதிகாரங்கள் ஜனநாயகத்தையும் இயல்பு வாழ்க்கை ஒன்றை வாழ்வதற்கான மக்களின் சுதந்திரத்தையும் பாதிப்பதாக அமையும்.

மேலும் 20 ஆவது திருத்தத்தின் கீழ் சுயாதீனமான கட்டமைப்புக்கள் எவையும் இல்லை. அரசியலமைப்புப் பேரவையை பாராளுமன்றப் பேரவையின் மூலம் பதிலீடு செய்வதற்கான முன்மொழிவொன்று செய்யப்பட்டிருக்கிறது.

எனவே எதிர்காலத்தில் சுயாதீனமானதும் நேர்மையானதுமான தேர்தல்களையோ அல்லது பொலிஸ் சேவையையோ எதிர்பார்க்க முடியாது. அத்தோடு நீதிபதிகளையும் நீதிச்சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்களையும் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

நீதித்துறையின் சுயாதீனத்துவம் இவ்வாறான வெட்கக்கேடான முறையில் பறிக்கப்படக்கூடாது. இரட்டைக்குடியுரிமையைக் கொண்டவர்கள் நாட்டின் நிர்வாகத்தில் உயர் பதவிகளை வகிப்பதற்கு அனுமதிக்கப்படக்கூடாது. கணக்காய்வு ஆணைக்குழுவின் நீக்கம் ஊழல், மோசடிகள் மேலும் அதிகரிப்பதற்கே வழிவகுக்கும்.

எனவே தற்போது முன்மொழியப்பட்டிருக்கின்ற 20 ஆவது திருத்தம் ஒரு வெள்ளைக்காகிதமாகக் கருதப்பட்டு நாட்டுமக்கள் மத்தியில் மிகவும் விரிவானதொரு கலந்தாராய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று மேலும் வலியுறுத்தியுள்ளது. (2-7)

# வனவிலங்கு பாதுகாப்பிற்கு புதிய சட்டம் மூன்று வாரங்களில் பாராளுமன்றத்தில்



(கொழும்பு)

வனவிலங்குகளின் பாதுகாப்பு தொடர்பான கடுமையான சட்டங்கள் அடங்கிய புதிய வரைவு இரண்டு மூன்று வாரங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.

மஸ்கெலியாவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர், குறித்த புதிய வரைவு உடனடியாக அமைச்சரவையில் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவித்தார்.

மேலும் சட்டவிரோதமாக வேட்டையாடினால் ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் மற்றும் ஒரு வருட சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

அத்துடன் காடுகளுக்குத் தீ வைத்தால் ஐந்து ஆண்டு சிறைத் தண்டனையை அனுபவிப்பார்கள் என்றும் வனவிலங்கு மற்றும் வனப் பாதுகாப்புத் தொடர்பான சட்டங்கள் கண்டிப்பாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் மிருகக் காட்சிச்சாலைகளிலும் சதுப்பு நிலங்களிலும் கடல் வாழ் உயிரினங்களையும் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். (ஜ-4)

### போக்குவரத்து விதிமுறைகள் மீண்டும் நடைமுறைக்கு

(கொழும்பு)

நாட்டில் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் போக்குவரத்து விதிமுறைகள் நடைமுறைக்கு வரவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை காலி அதிவேக வீதிகள் உள்ளிட்ட பல்வேறு வீதிகளில் இந்நடைமுறை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி வீதி விதிமுறைகளை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவோம் எனும் தொனிப்பொருளின் கீழ் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மாணவர்களுக்கு முட்டை வழங்க பிரதமர் மகிந்த ஆலோசனை



(கொழும்பு)

**மாணவர்களின் போசனை மட்டத்தை மேம்படுத்துவதற்காக நாளாந்தம் ஒரு முட்டையை வழங்குவது தொடர்பில் பிரதமர் ஆலோசனை வழங்கினார்.**

நேற்று முன்தினம் இடம்பெற்ற பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தினர் மற்றும் முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தினருடனான சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கினார்.

மேலும், முட்டை உற்பத்தியில் ஏற்படும் அதிக செலவீனங்கள் தொடர்பில் முட்டை உற்பத்தியாளர்கள் பிரதமரிடம் விளக்கங்களை முன்வைத்தனர்.

அத்துடன், நாட்டின் அனைத்து பேக்கரி உற்பத்தி நிறுவனங்களுக்கும் நிலையான மொத்த விலைக்கு முட்டையை பெற்றுக் கொடுப்பதற்கு முடியுமானதாக அமையும் என முட்டை உற்பத்தியாளர்களின் சங்கம் இதன்போது குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், நுகர்வோருக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் இரு சங்கங்களுக்கும் இடையே இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக் கொள்ளுமாறு, உரிய தரப்பினருக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கினார். (ஜ-2)

# அண்ணன் இன்றி தம்பியில்லை

## ராஜபக்ஷக்களை சாடிய தேரர்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையில் நிர்வாக அதிகாரி என்ற வகையில் திறமையானவர் என்றாலும் அரசியல் ரீதியான அனுபவம் அவருக்கு குறைவு என சிங்களே அமைப்பின் தலைவர் மெதில்லே பஞ்ஞாலோக்க தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவுக்கு இருக்கும் அனுபவ ரீதியான அரசியல் ஞானம் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இல்லை.

தேசிய அமைப்புகளை ஒருபுறம் ஒதுக்கித் தள்ளிவிட்டு வியத்கம போன்ற தனக்கு நெருக்கமான அமைப்புக்களுடன் செல்லும் பயணம் சிறந்த பயணமாக இருக்காது.

இப்படியான பயணத்தை ஜனாதிபதி முன்னெடுக்க மாட்டார் என நம்புகிறோம்.

20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் இல்லாவிட்டாலும் மகிந்த ராஜபக்ஷவின் நிழல் இன்றி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வெற்றிகரமான அரசியல் பயணம் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# தேசியப்பட்டியல் பிரதிநிதிகளை அறிவிப்பதில் தாமதம்; பொதுமக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்

## தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கு செல்லவிருக்கும் தேசியப் பட்டியல் பிரதிநிதிகளின் பெயரை வெளியிடுவதில் ஏற்படும் தாமதம் பொதுமக்களுக்கு இழைக்கப்படும் அநீதி என தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியும் எங்கள் மக்கள் கட்சியும் இன்னும் தங்கள் கட்சிகளுக்கான தேசிய பட்டியல் பிரதிநிதிகளின் பெயரை வெளியிடவில்லை. இந்த விடயம் குறித்துக் கருத்து தெரிவித்துள்ள தேர்தல் வன்முறை கண்காணிப்பு நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க, கட்சிக்குள் அதிகாரப் போராட்டங்கள் ஏமாற்றமளிப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் நாட்டிற்கான சேவையின் எதிர்பார்ப்புடன் பொதுமக்கள் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு வாக்களித்தனர். இதன் காரணமாகவே அரசியல் தொடர்பாக பொதுமக்களுக்கு பெருகிய ஏமாற்றம் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

## குணமடைந்தோர் 2983

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸிலிருந்து மேலும் 14 பேர் பூரணமாக குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளதாக சுகாதார அமைச்சு நேற்று சனிக்கிழமை தெரிவித்துள்ளது.

அதன்படி, இதுவரையில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 983 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் தொற்று உறுதியானவர்களில்186 பேர்தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நாட்டில் இதுவரை 3 ஆயிரத்து 169 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 12 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## தபால் திணைக்களத்தில் 1633 பதவி வெற்றிடங்கள்

(கொழும்பு)

தபால் திணைக்களத்தின் வெவ்வேறு பிரிவுகளில் 1633 வெற்றிடங்கள் காணப்படுவதாக தபால் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நிலவும் ஊழியர் பற்றாக்குறை தபால் திணைக்களத்தின் நடவடிக்கைகளில் செயற்றிறன் மற்றும் தரத்தில் பாதகமான தாக்கத்தை செலுத்தியுள்ளதாகவும் இவ் வெற்றிடங்களால் கடிதங்களை சீராக விநியோகிப்பதில் தடை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் தனியார் கடிதத் தொடர்பாடலில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தாலும் வர்த்தகக் கடிதங்கள் பொதிகள் அனுப்பல் போன்றவை தற்போது குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-6)

## தனிமைப்படுத்தலிலிருந்து 95 பேர் வீட்டிற்கு

(கொழும்பு)

முப்படையினரால் நடத்திச் செல்லப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து 95 பேர் நேற்றையதினம் வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த தனிமைப்படுத்தல் செயற்பாடுகளுக்குட்படுத்தப்பட்டவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்பதால் அவர்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ள 57 தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் மேலும் 6 ஆயிரத்து 21 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கொரோனாத் தடுப்பு தேசிய நடவடிக்கை மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் முப்படையினரால் நடத்திச் செல்லப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து இதுவரையான காலப்பகுதியில் 40 ஆயிரத்து 401 பேர் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-6)

## சரத் வீரசேகரவுக்கு எதிராக பெரமுனவுக்குள் வலுக்கும் எதிர்ப்பு

(கொழும்பு)

மாகாணசபைகள்முறையை ஒழிக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர வெளியிட்ட கருத்து சம்பந்தமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஏற்பட்டுள்ள எதிர்ப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக சரத் வீரசேகர தனது தனிப்பட்ட பிரபலத்திற்காக கட்சி, அரசாங்கம் மற்றும் நாட்டை அசௌகரியத்திற்கு உள்ளாக்கி வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் ஒன்றியத்தின் உறுப்பினரான முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் மஹேஷ் அல்மேதா, மகிந்த ராஜபக்ஷவே வடக்கு மாகாண சபையை ஏற்படுத்தி போரில் ஈடுபட்ட இளைஞர்கள் அரசியல் அதிகாரத்தை வகிக்கக் கூடிய உரிமையை பெற்றுக்கொடுத்தார்.

இந்தியாவை கவனத்தில் கொள்ளாது இதனை ஒழிக்க முடியாது என தெரிவித்தார். (ஜ-4)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்; ரணிலும் மைத்திரியும் தப்பிக்க முடியாது

(கொழும்பு)

**நாட்டில் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பொறுப்பிலிருந்து மைத்திரியும் ரணிலும் ஒருபோதும் தப்பிக்க முடியாதென முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சாட்சியமளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்.

"முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இந்தத் தாக்குதல்கள் தொடர்பாக முன் அறிவிப்புகள் கிடைத்திருப்பதை என்னால் உறுதிசெய்ய முடியும் என்றும் அதேபோன்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்தப் பொறுப்பிலிருந்து ஒருபோதும் விலக முடியாது" என்றும் தெரிவித்தார். (ஜ-4)


### காணி விற்பனைக்கு

யாழ்.கொட்டியில் 2 பரப்புக் காணி, நாவற்குழி மன்னார் வீதியில் 26 பரப்பு வெற்றுக் காணி, யாழ்.பொம்மை வெளியில் அரியாலை வீதி முகப்பாக 75 பரப்பு வெற்றுக் காணியும் விற்பனைக் குண்டு.

தொடர்புகளுக்கு:- 075 410 5230 (C-1029)


# அரசுக்கு எதிராக போராட புதிய அரசியலமைப்பு



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் நடத்த புதிய அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்க உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்புக் கொள்கையுடன் இணங்க கூடியவர்களை இணைத்துக்கொள்ள உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அமைக்கப்பட உள்ள புதிய அரசியல் அமைப்பின் ஊடாக எதிர்காலத்தில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றவுள்ளதாகவும் அரசாங்கம் கொண்டு வந்துள்ள 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்ட வரைவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி உட்பட அதற்கு எதிரான சிவில் அமைப்புகளுடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

## ஓ.எல்.பரீட்சை எழுதுவதற்கு வாய்ப்புகோரும் 11 வயது சிறுமி



(கொழும்பு)

நாட்டில் 11 வயதுடைய சிறுமி ஒருவர் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை எழுத பரீட்சைகள் திணைக்களத்திடம் சந்தர்ப்பம் கோரியுள்ளார்.

பொலநறுவை, அரலங்வில செனுலி லேஹன்ஸா என்ற 11 வயதுடைய சிறுமியே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

குறித்த சிறுமி தான் 6 ஆம் வகுப்பு கற்ற போதிலும் தன்னால் சாதாரண தர பரீட்சையில் 9 ஏ சித்தி பெற கூடிய திறன் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

"எனக்கு 6 ஆம் வகுப்பிலேயே சாதாரண தரப் பரீட்சை எழுத வேண்டும். அனைத்து பாடத்தில் ஏ சித்தி பெற முடியும். எனக்கு கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் உட்பட பல விடயங்களை செய்ய முடியும். எனக்கு உதவி செய்ய ஒருவர் இருந்தால் என்னால் நாட்டிற்காக பல்வேறு வெற்றிகளை பெற முடியும் என மேலும் தெரிவித்தார். (ஜ-4)


### வாடகைக்கு

இல.466, கண்டி வீதி, 9th வார்ட் மூன்று முறிப்பு, வவுனியாவில் 400 Perch காணியுடன் சிறிய வீடு வாடகைக்குண்டு. இதை வீடாகவோ களஞ்சியசாலையாகவோ அல்லது வாகன தரிப்பிடமாகவோ பாவிக்கலாம்.

தொடர்புகளுக்கு:-
NEIL - 077 556 6358
THEEPAN - 077 340 5893 (C-1031)

### காணி விற்பனைக்கு

பலாலி விமான நிலையம் K.K.S.துறைமுகம் என்பவற்றுக்கு மத்தியில் 9,13 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 076 755 5023 (C-1030)

### வாடகைக்கு

வெள்ளவத்தையில் Harmes Avenue யில் குறைந்த விலையில் நாள், கிழமை, மாத வாடகைக்கு.

2,3,6 Bed Rooms சுபகாரியங்களுக்கும் கொடுக்கப்படும். MARKET, Station அருகில்.

தொடர்பு:- (C-1033)
SATHIYA - 077 766 7511, 011 250 3552.


# புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சுங்க தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவதை துரிதமாக ஆரம்பிக்க உள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது பாராளுமன்றத்திற்கு முதல் முறையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 79 உறுப்பினர்களுக்கு முதலில் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதுடன் ஏனைய உறுப்பினர்களுக்கு சில வாரங்களுக்குள் வழங்கப்படும் எனத் தெரிவித்துள்ளது. (ஜ-4)


## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்

சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் நடவடிக்கைக்காக வாக்காளர் இடாப்பு 10.09.2020 முதல் கிளைகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இயங்காத நிலையில் உள்ள கீழ்க்குறிப்பிடப்படும் கிளைகளின் வாக்காளர் இடாப்பு பின்வரும் இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

காட்சிப்படுத்தும் காலம் 10.09.2020 - 30.09.2020 ஆம் திகதி வரை

| கிளை | கிளையின் பெயர் | காட்சிப்படுத்தப்படும் இடம் |
|---|---|---|
| 01 | கல்வியங்காடு | எரிபொருள் நிலையம் - கல்வியங்காடு |
| 02 | திருநெல்வேலி | கிராமிய வங்கி - திருநெல்வேலி |
| 03 | பொற்பதி | 4 ஆம் கிளை - நாகபூசணி |
| 08 | கோண்டாவில் மேற்கு | உப தபால் நிலையம் கோண்டாவில் மேற்கு |
| 12 | கொக்குவில் அரசடி | 13A கிளை கொக்குவில் மேற்கு |
| 21 | பரமேஸ்வராச் சந்தி | திருநெல்வேலி மக்கள் கடை |
| 22 | திருநெல்வேலிச் சந்தி | திருநெல்வேலி மக்கள் கடை |
| 25 | முடமாவடி | 18 ஆம் கிளை காளிகோவிலடி |

(C-304)

செயலாளர், ந.ப.நோ.கூ.ச., ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
தொலைபேசி இல.021 222 2143.

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தில் கீழ்வரும் உடனடி வேலைவாய்ப்புகள் காணப்படுகின்றன.

01.பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் - Security Guards (Males only)
(18 தொடக்கம் 60 வயதுக்குட்பட்டவர்கள் - யாழ்.மாநகர எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது) (இரவு, பகல்)
02.தையல் வேலை தெரிந்த பெண்கள் (Tailors)
03.விற்பனை உதவியாளர்கள் (ஆண் / பெண்) (Sales Assistants)
04.காசாளர் (Cashiers) பெண்கள் மாத்திரம்
(யாழ்.மாநகர எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது)
05.பொதி செய்யும் பெண்கள் (Packing Girls)

விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் முகவரிக்கு சுயவிபரக்கோவையை அனுப்பி வைக்கவும்.

(C-307)

இல.527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
மேலதிக தகவல்களுக்கு:- 077 776 3436.

# யாழ்.மாநகரப் பகுதியில் அமுலாகிறது பொலித்தீன் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பொலித்தீன் பாவனையைத் தடை செய்வதற்கு வர்த்தகர்கள் பூரண சம்மதம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பொலித்தீன் பாவனையை ஓகஸ்ட் 15 முதல் தடை செய்வது தொடர்பில் யாழ். மாநகர சபையின் கடந்த மாதா நந்தக் கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

பொலித்தீன் தடை தொடர்பில் உணவக உரிமையாளர்களுடன் சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு வர்த்தகர் சங்கம், கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தது.

குறித்த கோரிக்கைக்கு அமைவாக யாழ். மாநகர முதல்வருக்கும் வர்த்தகர் சங்கத்தினருக்கும் இடையேயான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும்குறித்த கலந்துரையாடலில் , உணவு பொதியிடப் பயன்படும் பொலித்தீன் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் இயன்றளவு முழுவதும் நிறுத்தப்படும். உணவுகளைப் பொதியிட வாழையிலை போன்ற மாற்று வழிகள் பயன்படுத்தப்படும்.

தண்ணீர்ப் போத்தல், ஒரு நாள் கப் போன்ற பிளாஸ்ரிக் பொருட்களின் பாவனையும் விரைவில் நிறுத்தப்படும். உடனடியாக பாவனையிலிருந்த நிறுத்தப்படக்கூடிய வழிகளிலுள்ள பாவனைகள் உடனடியாகவும், ஏனையவை படிப்படியாகவும் நிறுத்தப்படும் என இக் கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டது. (5-8)

# தரம் பிரிக்காது குப்பை போட்ட நான்கு பேர் மீது வழக்குத் தாக்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கச்சாய் வீதிப் பகுதியில் குப்பைகளை தரம் பிரிக்காது வீதியில் போட்ட நான்கு குடியிருப்பாளர்கள் மீது நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சாவகச்சேரி நகரசபையினர் இம் மாதம் முதலாம் திகதி முதல் உக்கும், உக்காத கழிவுகளை தரம் பிரித்து கொடுத்தால் மாத்திரமே தமது கழிவகற்றும்வாகனம்மூலம்அதனை அகற்றி வருகின்றனர்.

பெரும்பாலான மக்கள் இவ் விடயத்தை கடைப்பிடிக்கின்ற போதிலும் ஒரு சிலர் அந்த நடைமுறையைக் கடைப் பிடிக்காது வீதிகளில் குப்பைகளை போடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த வாரமும் சாவகச்சேரி பகுதியில் குப்பைகளை தரம் பிரிக்காமல் வீதியில் போட்ட 7 குடியிருப்பாளர்கள் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (5-4-30)

# ஹெரோயினுடன் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுழிபுரம் பகுதியில் ஹெரோயினுடன் பெண்ணொருவர் நேற்று முன்தினம் இரவு கைது செய் யப்பட்டுள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இளவாலை பொலிஸ் பிரிவிற் குட்பட்ட பகுதியிலுள்ள வீடொன்றில் போதைப்பொருள் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த பெண் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமிருந்து 2 கிராம் 10 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை இளவாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-8)



யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியாக பொறுப்பேற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் செனரத் பண்டார நேற்று நல்லை ஆதீன குரு முதல்வரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

# இரண்டு நாடுமில்லை; இரண்டு நிர்வாகமும் இல்லை நாம் அனைவரும் இலங்கையர்- இராணுவத் தளபதி

(யாழ்ப்பாணம்)

நாங்கள் இலங்கையர் என்ற அடிப்படையில் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டும் என மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முதல்வரை சந்தித்தபின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், நான் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாக பதவியேற்ற பின் இன்றைய தினம் (நேற்று) முதன்முதலாக இந்து மத குருவை சந்தித்து ஆசியும் பெற்றுள்ளளேன். சந்திப்பில் மிகவும் ஆக்கபூர்வமானதாக பல விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்திருக்கிறேன்.

இராணுவத்தினர் ஆகிய எமது பிரதான நோக்கம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு, நல்லிணக்கத்தை ஏற்படுத்துதலாகும். இந்த அரசாங்கமானது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பல்வேறு முன்மொழிவுகளை மக்கள் சார்ந்து மேற்கொள்ள இருக்கின்றது. இராணுவமும் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகமும் வடக்கு மக்களுக்கு உதவி செய்வதற்கும் இந்த பிரதேசத்தினை அபிவிருத்தி செய்வதற்கும் அத்தோடு இப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வேலைத்திட்டங்களை செயற்படுத்தும். அத்தோடு எமது பிரதேசத்தில் சமாதானம் முக்கியமானது. இலங்கையர் அனைவரும் ஒரு நாட்டவர்கள் தான் என்ற கொள்கைக்கு இணங்க நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இந்த நாட்டில் வசித்து வருகிறோம்.



இங்கே இரண்டு நாடுமில்லை. இரண்டு நிர்வாகமும் இல்லை. இரண்டு இராணுவ கட்டமைப்பு என்ற கதைக்கு இடமுமில்லை. நாம் அனைவரும் இலங்கையர் என்ற ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். இங்கே பிரிவினை என்ற வார்த்தைக்கு இடமில்லை.

ஆகவே நான் இராணுவ கட்டளைத் தளபதி என்ற வகையில் யாழ்.மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவேன். அத்தோடு மக்கள் சந்தோசமாக வாழ்வதற்கு உரிய வழிவகை செய்வேன் எனவும் தெரிவித்தார். (5-8-4-33)

# இருவாரத்திற்கு ஒருதடவை உப அலுவலகங்களுக்கு

(சாவகச்சேரி)

பிரதேச மக்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முகமாக சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவன் பிரதேச சபையின் உப அலுவலகங்களுக்கு இரு வாரங்களுக்கு ஒரு தடவை விஜயம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

அந்த வகையில் சாவகச்சேரி பிரதேச சபையின் கச்சாய், வரணி,நாவற்குழி, கைதடி மற்றும் சரசாலை உள்ளிட்ட உப அலுவலகங்களுக்கு இரு வாரங்களுக்கு ஒரு தடவை விஜயம் மேற்கொண்டு அவ் அவ் வட்டாரங்களில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க முடிவெடுத்துள்ளார்.

குறித்த நாட்களில் அந்தந்த வட்டார உறுப்பினர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆகியோரும் உப அலுவலகங்களுக்குச் சென்று பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக சில வட்டாரங்களில் நிலவும் கட்டட அனுமதி தொடர்பான பிரச்சினைகள், வீதி புனரமைப்பு மதிப்பீடு தொடர்பான விடயங்கள் இதன் போது நிவர்த்தி செய்ய முயற்சியெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. சாவகச்சேரி பிரதேசசபை பரந்துபட்ட பிரதேசமாக 49 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிக் காணப்படுகிறது.

இதுவரை கொடிகாமத்தில் அமைந்துள்ள பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்தில் மாத்திரமே தவிசாளரைச் சந்தித்து தமது பிரச்சினைகளைத் தெரிவித்த மக்கள் தற்போது அந்தந்த பகுதி உப அலுவலகங்களில் சந்தித்து சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-30)





சுன்னாகம் வாழ்வகத்தின் ஸ்தாபகர் அமரர் கலாநிதி-அன்னலட்சுமி சின்னத்தம்பியின் நினைவு நாளும் நினைவுப் பேருரையும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வாழ்வக நிறுவனத்தில் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடை பெற்றது.

இதில் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் செய்தி மடல் வெளியீடும் இடம் பெற்றது.

(படங்கள்-குப்பிழான் செய்தியாளர்)

## தேவை

யாழ்.மூலிகை மருத்துவ நிலையத்திற்கு ஆயுர்வேத டாக்டர் (புதிதாக பட்டம் பெற்றவர்), தாதியர் வேலை பழக ஆர்வமுள்ள இளம் வேலையாட்கள் (இருபாலாரும்) காசாளர், மூலிகை சமையல் செய்ய ஆர்வமுள்ளோர் உடனடியாகத்தேவை.

தொடர்புக்கு:- 0777701465 (C-299)

## Canada VISA

நம்பிக்கையோடு விரைவாக செய்து தருபவர்கள்

**STUDENT VISA** Study, Work & Settle

- பாடநெறி கட்டணம் ரூ. 350,000 இருந்து
- O/L உடன் விண்ணப்பிக்கலாம்
- Without IELTS
- சகல வசதிகளும் செய்து தரப்படும்

**VISIT VISA** பல்வேறு சந்தர்ப்பங்களில் கனடா செல்வதற்கு சகல ஏற்பாடுகளை செய்து தரப்படும்

**REFUSED VISA** உங்கள் மறுக்கப்பட்ட விசாக்கள் எமது தலைசிறந்த சட்டத்தரணிகளால் கூடிய விரைவில் மீண்டும் பெற்றுத்தரப்படும்.

**Sponsor Letters**
Canada வில் இருந்து பெற்றுத்தரப்படும்

வயதெல்லை இன்றி Visa கிடைப்பதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து தரப்படும்

Hotline: 0777-761 346

flex Institute
6A, Parakumba Place, Colombo 06.
E-mail: flexinstitute04@gmail.com
www.flexinstitute.lk
Flex Institute

STUDENT VISA
VISIT VISA
TOURIST VISA

USA / UK
Australia
New Zealand
Italy / France
Swiss
Germany
Romania
Norway
Finland
Poland

FLEX Graphic

10 வருட கால நம்பிக்கையான சேவை

## விற்பனை

யாழ். கரணவாய் மத்தி, கரவெட்டி குஞ்சர் கடைச் சந்திக்கு முன் உள்ள விளையாட்டு மைதானத்திற்கு பின் புறமாக 150m தொலைவில் அமைந்துள்ள வீட்டுடன் கூடிய 9 பரப்புக் காணியும் அத்துடன் 4 காணித் துண்டுகளும் விற்பன்னக்கு உண்டு. (3824)

தொடர்பு : 076 778 8845

## சேவை

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை. AAA Gold Center (C-1034)

076 568 4346

## இணைந்த கணிதம்

COMBINED MATHS
Individual and Group Classes,
Tamil and English Medium,
ஓய்வு பெற்றவரினால் கற்பிக்கப்படும்.

0718156566 (3833)


# சிறைக்குள் பறந்து வந்த தொலைபேசிகள் மீட்பு



(கொழும்பு)

மகர சிறைச்சாலையின் மதிலுக்கு மேலால் வீசி செல்லப்பட்ட நான்கு தொலைபேசிகள் மற்றும் புகையிலை பொதிகளை சிறைச்சாலை அதிகாரிகள் மீட்டுள்ளனர். (ஜ-4)


## காணி விற்பனைக்கு

சங்கரத்தை வட்டுக்கோட்டை பிரதான வீதிக்கு அருகாமையிலும் சங்கரத்தை குளம் சின்னம்மா வித்தியாசாலை, பத்திரகாளி கோயிலுக்கு அருகாமையிலும் அமைதியான சூழலில் உள்ள 4 1/4பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0752182533,
Viber-Whatsapp:- 0772516439

(3852)

## நிறைவாழ்வு மையம்

### ஆற்றுப்படுத்தற்பணி

மன அழுத்தமுடையவர்கள், பிரச்சினைகளை தீர்க்க முடியாது தத்தளிப்போர், குடும்பத்தில் உறவுச்சிக்கலுடையவர்கள், மனச்சோர்வினால் அல்லல்படுவோர், இழப்புக்களால் வருந்துவோர், மனவடுவினால் தாக்குண்டோர், தற்கொலை எண்ணம் உடையோர், வேண்டிய ஆற்றுப்படுத்தல் பணியை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:- நிறைவாழ்வு மையம்,
464, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 94-777370494

(3852)

## Vacancy Announcement

SHANTHIHAM
Association for Health & Counselling

Shanthiham is a non-profit, local Non-Governmental Organization (NGO), collaborate with the communities to improve their well-being, working in the Northern Region of Sri Lanka since 1988. Shanthiham has developed as an organization that provides both a Counselling Centre and Training Centre for Mental Health and Psychosocial Support (MHPSS) for the Northern province of Sri Lanka. Shanthiham is dedicated in improving the community well-being of individuals, families and communities.

Shanthiham is looking for a young, energetic, self-motivated and dedicated candidates to fill the following three vacancies to work for one of its donor funded projects based in Thellipalai Divisional Secretariat Division. We are interested to receive applications for the below mentioned positions from the interested candidates from Northern province.

1. Monitoring and Evaluation cum Documentation Officer – One position (Male/Female)
2. Field Counsellor – One position (Male or Female)
3. Driver – One position (Male)

• Further details on requirement to apply for the above post, please look in to our website, and face book page: http:\\shanthiham.org, http:\\facebook.com/shanthiham

Remuneration (including the employee benefits) could be negotiated based on qualification, experience and knowledge.

Duration – Initially up to 20th February 2021for short term period and subject to renewal on availability of funds.

Applications for the above posts should be sent along with the CV and the letter of motivation to the following address on or before 20.09.2020. The candidate can also send his or her application via email.

The Admin/HR Manager, Shanthiham,
No. 8, 8/1, Katpahavinayagar Lane,
Off Kachcheri Nallur Road, Jaffna.
Telephone No.: 021-222-3338
Email address: recruitment.shanthiham@gmail.com

(C-288)

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 58 செவ் 9 இல்<br>உயரம்: 180cm<br>தகைமை/தொழில்: Civil Engineering. Civil Engineer (Gov)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்.<br>தொ.இ: B/11196 | பிறப்பு: 1970 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: செவ் 7 இல்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: பட்டதாரி. விரிவுரையாளர்.<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்.<br>தொ.இ: G/9156 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>கி.பா: செவ் 3 இல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. எலக்ரோனிக் சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு: சாதாரண அரச, தனியார் உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11200 | பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: செவ் 9 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த.<br>எதிர்பார்ப்பு: படித்த மணமகன்<br>தொ.இ: G/9157 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 39 ¼ செவ் 6 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: B.Sc(UK), IT Engineer in UK.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/5616 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: செவ் 4 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த.<br>எதிர்பார்ப்பு: படித்த மணமகன்<br>தொ.இ: G/9158 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 2<br>கி.பா: 40 சூரி, செவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: M.Sc Computer Science, BIT (External). Teacher<br>எதிர்பார்ப்பு: BA தவிர்ந்த பட்டதாரி. வைத்தியர் போன்ற உத்தியோகத்தர்கள்<br>தொ.இ: B/5735 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: செவ் 9 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ.த.<br>எதிர்பார்ப்பு:. வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/9182 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

### சாரதி அனுமதிப் பத்திரம்

# மருத்துவ பரிசோதனைகளில் புதிய நடைமுறை அறிமுகம்

(கொழும்பு)

நாட்டில் சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வோரிடம் மேற்கொள்ளப்படும் மருத்துவ பரிசோதனைகளில் புதிய நடைமுறை தொடர்பில் போக்குவரத்து சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதற்கமைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு எதிர்வரும் காலங்களில் எந்தவொரு காரணத்திற்காகவும் இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்படமாட்டாது என சுட்டிக்காட்டியுள்ளது.



போக்குவரத்து சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக பிரதான கண்பரிசோதனையே மேற்கொள்ளப்படும்.

சகலருக்கும் எக்ஸ்ரே கதிர் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் இரத்தத்தில் சீனி அளவு மற்றும் இரத்த அழுத்தம் தொடர்பான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என அவர் தெரிவித்தார். (ஐ-2)

# அரசின் செயற்பாட்டில் அதிருப்தி

(கொழும்பு)


அரசாங்கம் முன்னெடுக்கும் ஒரு சில செயற்பாடுகள் அதிருப்தியளிப்பதாக தெரிவித்துள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் பேராசிரியர் குணதாச அமரசேகர, தவறுகளை அரசாங்கம் திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு எதிர்பார்ப்புகளை கொண்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அரசாங்கம் தற்போது முன்னெடுக்கும் ஒரு சில செயற்பாடுகள் அதிருப்தியளிப்பதாக அமைகிறது. குறிப்பாக அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை குறிப்பிட வேண்டும்.

மக்களுக்கும், நாட்டுக்கும் பொருந்தும் விதத்தில் அரசியலமைப்பினை திருத்தம் செய்ய வேண்டுமே தவிர இரட்டைக் குடியுரிமையினை கொண்டவர்களுக்கு சாதகமாக அமையும் விதத்தில் ஏற்பாடுகள் கொண்டு வரக்கூடாது.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் ஏற்றுக்



கொள்ளக்கூடிய பல விடயங்கள் காணப்பட்டாலும், புறக்கணிக்கும் பல ஏற்பாடுகளும் காணப்படுவதாகவும் தெரிவித்தார். (ஐ-4)

# கைதிகள் உணவுத் தவிர்ப்பு; சமரசத்திற்குத் தயாரில்லை

## சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

பூஸா சிறைச்சாலையில் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு வரும் கைதிகளுடன் எவ்வித மான சமரசத்திற்கும் தயாரில்லை என சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

பூஸா சிறைச்சாலையில் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து 40க்கும் மேற்பட்ட கைதிகள் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு வந்த நிலையில் அதில் பலர் உணவுத் தவிர்ப்பை நேற்று முன்தினம் கைவிட்டனர்.

ஆனால் கஞ்சிப்பானை இம்ரான், வெலே சுதா மற்றும் கொஸ்கொட தாரக உள்ளிட்ட பாரிய குற்றச்செயல்கள் ஈடுபட்டவர்களே அதனைத் தொடர்ந்து வருவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

அவர்களின் கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவித்தால் அது ஒழுக்க விதிமுறைகளுக்கு முரணானது.

எவ்வாறாயினும் தற்போது சிறைச்சாலைகளில் விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டு உடல் நிலை மோசமடைந்த கஞ்சிப்பானை இம்ரான் பூஸா கடற்படை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-2)

# மீண்டும் சிறைச்சாலையாகவுள்ள போகம்பரை- கமால் அறிவிப்பு

(கொழும்பு)

சிறைகளில் ஏற்பட்டுள்ள நெரிசல் சிக்கலையடுத்து, கண்டி போகம்பரையை மீண்டும் சிறைச்சாலையாக மாற்றத் தீர்மானித்துள்ளதாக பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன இதனை தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகளுடனான சந்திப்பில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

கண்டியில் சுற்றுலாவை அதிகரிக்கும் பொருட்டு போகம்பரை சிறைச்சாலையை அருங்காட்சியகம் மற்றும் கலாசார பூங்காவாக மாற்ற முன்னைய அரசு முடிவு செய்திருந்தது.

இந் நிலையில் நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்பதால் இந் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (ஐ-2)

# 59 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த 59 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

கட்டார், டோஹாவில் சிக்கித் தவித்த 54 இலங்கையர்களே நேற்றுக்காலை வந்தடைந்தனர்.

இவ்வாறு நாட்டிற்கு வந்தடைந்த 59 பேரும் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்குட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ஐ-2)

# 20ஆவது திருத்தம்; ஆராய குழு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தில் முன்மொழியப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சட்டத்தரணி நிஹால் ஜயமான்னே தலைமையில் 15 உறுப்பினர்கள் அடங்கிய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இக் குழுவில் ஜனாதிபதி சட்டத்தரணிகள் 13 பேர் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சட்ட ஆணைக்குழுவில் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ-2)

# பாராளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கும் அபாய நிலையில்

(கொழும்பு)



நாட்டின் பல இடங்களில் பெய்துவரும் அடைமழை காரணமாக தியவன்னா ஓயாவின் நீர்மட்டம் அதிகரித்த நிலையில் பாராளுமன்றம் வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் அடைமழை பெய்யுமிடத்து ஏற்படும் பேரிடரை தடுப்பதற்காக படையினர் தயார் நிலையில் உள்ளதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஐ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 90 | 70-80 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 150 | 120 | 140 | 200 |
| தக்காளி | 150 | 190 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 110 | 80 |
| கோவா | 130 | 150 | 130 | 120 |
| கரட் | 80 | 160 | 160 | 200 |
| பூசணி | 120 | 100 | 120 | 120 |
| புடோல் | 70 | 80 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 140 | 150 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 | 140 | 160 |
| பாகற்காய் | 200 | 280 | 220 | 300 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 180 | 150 | 150 |
| பயற்றங்காய் | 180 | 200 | 140 | 180 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 | 80 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 100 |
| கறிமிளகாய் | 350 | 260 | 280 | 280 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 300 | 120 |
| போஞ்சி | 280 | 300 | 280 | 320 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | -- | 60 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70-80 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 240 | 240 | -- | 240 |
| முள்ளங்கி | 100 | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | -- | -- | 80 |

# இராசிபலன்

13.09.2020
ஆவணி 28, ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 11.39 மணிவரை
புனர்பூசம் பின்னிரவு 1.50 மணிவரை
சுபநேரம் 9.03-10.33 மணிவரை
இராகுகாலம் 4.33-6.03 மணிவரை
சந்திராஷ்டமம்- மூலம்,பூராடம்
ஏகாதசி விரதம்

வளவன்


மேஷம்

சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள், செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள்,வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.


ரிஷபம்

நிதி நிலை உயரும் நாள், அலங்காரப் பொருட்களை வாங்க முற்படுவீர்கள், உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


மிதுனம்

மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று ஏற்படலாம்,வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள்.


கடகம்

சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும் நாள், உறவினர்கள் சந்திப்பு இடம்பெறலாம், சயனசுகக் குறைவான நாள்.


சிம்மம்

செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொன்னான நாள்.


கன்னி

கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர்,செல்வாக்கு மேலோங்கும் நாள், கனவு பலிதமுண்டு.


துலாம்

தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.


விருச்சிகம்

சிந்தித்து செயற்பட்டு சிறப்படையு வேண்டிய நாள்,வரவைக் காட்டிலும் செலவு கூடலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.


தனுசு

குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.


மகரம்

மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மாற்றுத் கருத்துடையோர் மனம் மாறுவர், உடல் நலன் சீராகும்,உற்சாகமான நாள், காரிய அனுகூலமுண்டு.


கும்பம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்,புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், இனிமையான நாள்.


மீனம்

உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், நண்பர்கள் நம்பிக்கைகுரியவர்களாக நடந்து கொள்வர், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

பிறர் பேசுவதை நாம் காதாலும்,இதயத்தாலும் கேட்க வேண்டும்

# பல்கலைக்கழகங்கள் நீக்கம்; ரஷ்யத் தூதரகம் கவலை

(கொழும்பு)

**ரஷ்யாவின் மூன்று பல்கலைக்கழகங்களை இலங்கை மருத்துவ சபை தமது சர்வதேச பல்கலைக்கழக பட்டியலில் இருந்து நீக்கியுள்ளமை கவலையளிப்பதாக ரஷ்ய தூதரகத்தின் கலாசாரப் பிரிவு தெரிவித்துள்ளது.**

கடந்த ஆண்டுகளில் இலங்கைக்கு வந்த இந்த ரஷ்ய பல்கலைக்கழகங்களின் அதிகாரிகளுடன் எஸ்.எல்.எம்.சி பல சந்திப்புகளை நடத்திய போதிலும் மூன்று பல்கலைக்கழகங்கள் எஸ்.எல்.எம்.சி.அங்கீகரிக்கப்பட்ட பட்டியலிலிருந்து நீக்கப்பட்டதாக சுட்டிக்காட்டியுள்ளது.

ரஷ்ய தூதரகத்தின் கலாசாரப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எஸ்.எல்.எம்.சி. இன் முடிவு எதிர்காலத்தில் இலங்கை குடிமக்களுக்கு ரஷ்ய அரசு உதவித்தொகை வழங்கும் நடைமுறையை பாதிக்காது என்றும் ரஷ்ய மையம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

ரஷ்யாவின் மூன்று பல்கலைக்கழகங்களை இலங்கை மருத்துவ சபை தமது சர்வதேச பல்கலைக்கழக பட்டியலில் இருந்து நீக்கியது. தீவிரமான ஆய்வின் பின்னரே இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை மருத்துவ சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# வரி நீக்கத்துக்குப் பிறகும் விலை குறையாத தங்கம்

(கொழும்பு)

நாட்டில் தங்க இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட 15 சதவீத வரி இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில், அதன் நன்மைகளை நுகர்வோருக்கு வழங்க இயலவில்லை என்று அகில இலங்கை தங்க நகை வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை தங்க நகை வர்த்தக சங்கத்தின் பொருளாளர் இரா.பாலசுப்பிரமணியம் இதனைத் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் தங்கத்தின் விலையேற்றம் மற்றும் அரசாங்கம் வெளியிட்ட அறிவிப்பு தொடர்பிலான முறையான திட்டம் இல்லாதது உள்ளிட்ட சில காரணங்களால் தங்கத்தின் விலையை தற்போதைக்கு குறைக்க முடியாதுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், எதிர்வரும் ஓரிரு மாதங்களுக்குள் ஓரளவேனும் தங்கத்தின் விலையை குறைப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக அவர் நம்பிக்கை தெரிவித்தார். (ஐ-4)

# பல்கலைக்கழகங்களுக்கு மேலும் எண்ணாயிரம்பேர்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு இம்முறை மேலும் எண்ணாயிரம் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உபவேந்தர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ள நிலையில் இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது

இதன் பிரகாரம் 38 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ-4)

# பூமியைநோக்கி ராட்சத விண்கல்

## நாசா தகவல்



(வோஷிங்டன்)

ராட்சத விண்கல் ஒன்று பூமியை நோக்கி மணிக்கு 38 ஆயிரத்து 624 கிலோ மீற்றர் வேகத்தில் வந்து கொண்டிருப்பதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.


சர்வதேச ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. "ஒரு சிறுகோள் தற்போது பூமியை நோக்கி வந்துகொண்டிருப்பதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இரண்டு கால்பந்தாட்ட மைதானங்களை சேர்த்தது போன்ற அளவுடையது என சுட்டிக்காட்டியுள்ளனர். இது நாளை14ஆம் திகதி பூமியைக் கடந்து செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுகோள் அளவில் பெரியது தான். ஆனால் இது பூமியின் மீது மோத வாய்ப்பில்லை. (ஐ-2)

# போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு

# 10 அடிக்கு கஞ்சாசெடி வளரும்வரை பொலிஸார் என்ன செய்கின்றார்கள்?

## பாதுகாப்பு செயலர் கேள்வி



(கொழும்பு)

பொலிஸார் தமது கடமைகளை சரியாக மேற்கொள்ளாதமையின் விளைவாகவே, போதைப் பொருட்களின் பாவனை சமூகத்தில் அதிகரித்துள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கத்தால் பொலிஸாருக்கு மிகப்பெரிய பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனால் தான் அனைவருக்கும் சீருடையும் ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பொறுப்பை உணர்ந்து செயற்படுவது பொலிஸாரின் கடமையாகும். இதனைத் தான் பொதுமக்களும் எதிர்பார்க்கிறார்கள்.

சில பிரதேசங்களில் 10 அடிக்கும் மேல் வளர்ந்த கஞ்சா செடிகள் பிடிபட்டுள்ளன. ஒரு கஞ்சாசெடி 10 அடிவரை வளரும் அளவுக்கு பொலிஸார் அசமந்தமாக இருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

விசேட அதிரடிப் படையினர் சென்று தான் அவற்றைப் பிடிக்கிறார்கள். அத்தோடு, இவ்வாறான பாரிய செய்கைகளை இலகுவாக செய்துவிட முடியாது. பெக்கோ இயந்திரம் ஊடாகத் தான் மண் நிரப்பப்பட்டு, கஞ்சா செடிகள் ஏக்கர் கணக்கில் பயிரிடப்படுகின்றன.

இதையெல்லாம் அவதானிக்காமல் பொலிஸார் என்ன செய்கிறார்கள்? குறைந்தது, தமது பிரதேசத்தில் வளரும் கஞ்சாசெடியைக்கூட கண்டு பிடித்துக்கொள்ள முடியாவிட்டால், வெட்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# ஆட்சிக்கு வந்தால் '20' இரத்து

## ஐ.ம.ச.சூளுரை

(கொழும்பு)

**நாங்கள் ஆட்சிக்கு வந்தால் 20 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா சூளுரைத்தார்.**

20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

19 ஆவது திருத்தச் சட்டம் ஜனநாயகத் திருத்தச் சட்டம் என சுட்டிக்காட்டிய அவர்,

2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த ஆட்சி முறைமையை மீண்டும் ஏற்படுத்துவதற்காகவே இந்த 20 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்படவுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

எமது அணி மீண்டும் ஆட்சிக்கு வந்த பின்னர் உடனடியாக 20ஆவது திருத்தச் சட்டம் ஒழிக்கப்படும் என அவர் மேலும் சூளுரைத்தார். (ஐ-4)

## கண்டி-திகன மற்றும் தெல்தெனிய பகுதிகளில் நில அதிர்வு

(கண்டி)

கண்டி - திகன மற்றும் தெல்தெனிய பகுதிகளில் மற்றொரு சிறிய அளவிலான நில அதிர்வு பதிவாகியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நில அதிவு ரிக்டர் அளவில் 1.79 ஆக பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி கண்டி, ஹாரகம மற்றும் அநுரகம ஆகிய பகுதிகளில் நில அதிர்வு பதிவாகியது.

குறித்த பகுதியில் பாரிய எவில் முன்னெடுக்கப்படும் சுண்ணாம்புக்கல் அகழ்வு காரணமாகவே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதென பிரதேச மக்களும் சூழலியலாளர்களும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

## இ.போ.சவின் தலைவர் வவுனியா சாலைக்கு விஜயம்



(நெளுக்குளம்)

இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் கிங்சிலி ரணவக்க இ.போ.சவின் வவுனியா சாலைக்கு நேற்று விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது இ.போ.சவின் வவுனியா சாலையின் உத்தியோகத்தர்கள், சாரதிகள் மற்றும் நடத்துநர்களுடனான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இதன்போது வவுனியா சாலை உத்தியோகத்தர்கள், சாரதிகள், காப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்ததோடு வவுனியா சாலையின் எதிர்கால நடவடிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா பொதுஜன போக்குவரத்து ஊழியர் சங்கத்தலைவர் இளஞ்செல்வன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் இ.போ.ச.சபையின் தலைவர் கிங்சிலி ரணவக்க, வட பிராந்திய முகாமையாளர், பொறியியலாளர்கள், சாரதிகள், காப்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(5-4-299)

## கோட்டாபய அரசாங்கம் சர்வாதிகார ஆட்சியில் பயணிக்கவில்லை

### ரணவீர விளக்கம்



(கொழும்பு)

அரசாங்கம் சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகரவில்லை என கிராமிய கைத்தொழில் மேம்பாடு இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்தார்,

இந்த விடயம் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய அரசியலமைப்பில்தான் ஆட்சியமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

பிரேமதாஸ, டிங்கிரிபண்டா, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ என அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளும் இந்த முறைமையில் தான் ஆட்சி செய்தார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, நாம் புதிய பயணமொன்றுக்குச் செல்ல முற்படவில்லை என்பதையும் பழைய முறையில் ஆட்சி செய்யவே முனைகிறோம் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

# ராகு-கேது பெயர்ச்சிப் பலன்கள்

## 01.09.2020 - 20.03.2022



மீன இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், செப்டெம்பர் முதலாம் திகதியிலிருந்து உங்கள் இராசிக்கு 3 ஆம் இடமான வெற்றிகள் ஸ்தானத்திற்கு வந்துள்ளார். அதேபோல கேது பகவான் அதேநாளில் உங்கள் இராசிக்கு 9 ஆம் இடம் எனப்படும் பிதுர்ரார்ஜித ஸ்தானத்திற்கு வரப்போகிறார்.

இதற்கிடையில் நவம்பர் 15 ஆம் திகதி உங்கள் இராசிநாதன் குரு, மகர இராசிக்குச் செல்கின்றார். அங்கு அவர் நீசம் பெறுகின்றார். இராசிநாதனாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் குரு, நீசம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். டிசெம்பர் 26 ஆம் திகதி சனி, பெயர்ச்சியாகி

என்றும் குறிக்கப்படும். அந்த இடத்திற்கு ராகு வரும்பொழுது வீரத்தோடும், விவேகத்தோடும் செயற்படுவீர்கள். வெற்றிக்குரிய வாய்ப்புகள் வந்து சேரும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். பங்காளிப் பகைமாறும். கூடப்பிறந்தவர்களில் ஒரு சிலர் உங்களை விட்டு விலகி இருந்திருக்கலாம். அவர்கள் இப்பொழுது தானாக தேடிவருவர். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வழக்குகள் சாதகமாக முடியும்.

இதுவரை பத்தாமிடத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான், இப்பொழுது ஒன்பதாம் இடத்திற்கு வரப்போகின்றார். பிதுர்ரார்ஜித ஸ்தானத்திற்கு கேது வரும்பொழுது பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் அகலும். பரம்பரை சொத்துக்களில் கிடைக்க வேண்டிய பங்கு முறையாகக் கிடைக்கும். பரிசீலனையில் இருந்த பதவி உயர்வு இப்பொழுது கிடைக்கும். கடன் சுமை முற்றிலும் குறையக்கூடிய வாய்ப்பு உண்டு. பழைய வாகனங்களைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு மாற்றங்கள் நன்மை தருவதாக அமையும். கால்நடை வளர்ப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பீர்கள்.

### செவ்வாய் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (1.9.2020 முதல் 4.1.2021 வரை)

மிருகசீரிட நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, நல்ல பலன்கள் உங்களுக்கு வரப்போகின்றது. கொடுத்த வாக்கைக் காப்பாற்று

னின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோகத்தில் எதிர்பார்த்த நல்ல முன்னேற்றம் உண்டு. சம்பள உயர்வு பற்றிய தகவல் வந்து சந்தோசத்தை ஏற்படுத்தும். பழைய பிரச்சினைகள் அகலும். வீடு கட்ட, வாகனம் வாங்க பணம் கேட்டு விண்ணப்பித்திருந்தால் அந்த முயற்சி கைகூடும். செலவுகள் கட்டுக்குள் அடங்கியே இருக்கும். செய்தொழிலில் புதிய பணியாளர்களை சேர்த்துக்கொள்ள விரும்புவீர்கள். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடைபெறும் நேரமிது.

### பாதசார அடிப்படையில் கேது தரும் பலன்கள்

ஒன்பதாம் இடத்தில் சஞ்சரிக்கும் கேது பகவான் 'நிழல் கிரகம்' என்று வர்ணிக்கப்பட்டாலும், நிகழ்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முன்னிற்பவர் ஆவார். பாதசார அடிப்படையில் பலன்களை அறிந்துகொண்டு செயற்படுவது நல்லது. பகைக்கிரகத்தின் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது அதற்குரிய பரிகாரங்களையும், வழிபாடுகளையும் செய்து கொண்டால் நற்பலன்கள் கிடைக்கும்.

### புதன் சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (1.9.2020 முதல் 9.5.2021 வரை)

கேட்டை நட்சத்திரக் காலில் புதன்



### குரு சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (17.1.2022 முதல் 20.3.2022 வரை)

உங்கள் இராசிக்கு அதிபதியாகவும் 10 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்குபவர் குரு. அவரது சாரத்தில் கேது வரும்பொழுது தொழில் முன்னேற்றம் உண்டு. கேட்ட இடத்

## மூன்றில் ராகு வருகிறது... முன்னேற்றப்பாதை தேடி வரும்!

மகர இராசிக்குச் செல்கின்றார். உங்கள் இராசிக்கு லாபாதிபதியாகவும் விரயாதிபதியாகவும் விளங்குபவர் சனி. 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி குரு, கும்ப இராசிக்குச் செல்கின்றார். அங்கிருந்து கொண்டு அவர் 4, 6, 8 ஆகிய இடங்களை பார்க்கப் போகின்றார்.

இவற்றை எல்லாம் அடிப்படையாக வைத்துக்கொண்டும், உங்கள் சுய ஜாதகத்தில் ராகு-கேதுக்களின் பலமறிந்தும் செயற்படுவதன் மூலம் வெற்றிக் கனியை எட்டிப்பிடிக்கலாம். கிரகங்களின் சஞ்சாரம் பலமிழந்திருக்கும் பொழுது



பரிகாரங்களும் வழிபாடுகளும் ஓரளவு கைகொடுக்கும்.

### மூன்றாமிடத்தில் ராகு! ஒன்பதாமிடத்தில் கேது!

ராகு இப்பொழுது சஞ்சரிக்கப் போகுமிடம் மூன்றாம் இடமாகும். 'வெற்றிகள் ஸ்தானம்' என்றும், 'சகோதர ஸ்தானம்'

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

வீர்கள். கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். சுபகாரியப் பேச்சுக்கள் கைகூடும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் வந்து உங்களை மகிழ்விக்கும். புகழ்மிக்கவர்களின் ஒத்துழைப்போடு புதிய திருப்பங்களைக் காண்பீர்கள். உடல் நலக் குறைபாடுகள் உங்களை விட்டு அகலும். பெற்றோருடன் இணக்கமான சூழ்நிலை உருவாகும். தொழில் முன்னேற்றமும், வருமானமும் எதிர்பார்த்ததைக் காட்டிலும் சிறப்பாகவே அமையும்.

### சந்திரன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (5.1.2021 முதல் 12.9.2021 வரை)

சந்திரனின் சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் பெருமை சேரும். பிரபலஸ்தர்களின் ஒத்துழைப்பால் ஒரு நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும். பூர்வீக சொத்துக்களைப் பிரித்துக் கொள்வதில் இருந்த பிரச்சினைகள் அகலும். தேகநலன் சிறப்பாக இருக்கும். பூர்வீக சொத்துக்களை கொடுத்துவிட்டுப் புதிய சொத்துக்கள், வீடாக வாங்கும் அமைப்பு உண்டு. பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். அவர்களின் படிப்பிற்கேற்ற வேலையும் கிடைக்கும். இக்காலத்தில் எதிர்மறைச் சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது. வருமானம் உயரவும் வழி பிறக்கும்.

### சூரியன் சாரத்தில் ராகுவின் சஞ்சாரம் (13.9.2021 முதல் 20.3.2022 வரை)

கார்த்திகை நட்சத்திரக்காலில் சூரிய

சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, கல்யாண வாய்ப்புகள் கைகூடும். செய்தொழில் சிறப்பாக இருக்கும். சேமிப்பு உயரும். ஆரோக்கியக் குறைபாடுகள் அகலும். பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன் என்பதால் சுகங்களும், சந்தோசங்களும் வந்து சேரும். தாய்வழி உறவு திருப்தி




தரும் வீடுகட்டும்முயற்சி அல்லது வாங்கும் முயற்சி கைகூடும். பெற்றோர் வழியில் ஏற்பட்ட பிரச்சினை அகலும்.

### சனி சாரத்தில் கேதுவின் சஞ்சாரம் (10.5.2021 முதல் 16.1.2022 வரை)

உங்கள் இராசிக்கு 11, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவரது சாரத்தில் கேது வரும் பொழுது தொழிலில் இலாபம் திருப்தி கரமாக இருக்கும். வெளிநாட்டு முயற்சியில் அனுகூலம் உண்டு. குடும்ப வருமானம் உயரும். உடன்பிறந்தவர்களால் சில செலவுகள் உண்டு. குறிப்பாக அவர்கள் இல்லங்களில் நடைபெறும் சுபநிகழ்வுகளை முன்னின்று நடத்து வீர்கள். எதிர்மறையாகப் பேசியவர்கள் இப்பொழுது உங்களை விட்டு விலகுவர். பணிவும், துணிவும் உங்கள் வெற்றிக்கு வித்திடும்.

தில் பணம் கிடைக்கும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் கூடும். புதிய பதவிகள் கிடைக்கும். போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள். உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றவர்களாக சமூகத்தில் விளங்குவீர்கள். சகோதரர்கள் உறு துணையாக இருப்பர். வெளிநாட்டிலிருந்து எதிர்பார்த்த நல்ல தகவல் வந்து சேரும். செல்வாக்கு உயரும் நேரமிது.

### வளர்ச்சி தரும் வழிபாடு

மூன்றாமிடத்து ராகுவால் முன்னேற்றம் கூடவும், 9 ஆம் இடத்து கேதுவால் உன்னத வாழ்க்கை அமையவும் செவ்வாய்க்கிழமை தோறும் இல்லத்துப் பூஜை அறையில் கந்தப் பெருமான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. நிலைமை சீராகும் பொழுது தேய்பிறை அஷ்டமி அன்று மார்த்தாண்ட பைரவரை பதிகம் பாடி வழிபட்டால் மகத்தான பலன்கள் கிடைக்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்த ராகு-கேது பெயர்ச்சி ஒப்பற்ற வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கப் போகிறது. பிள்ளைகள் வழியில் சுபகாரியங்கள் நடைபெறும். பெற்றோர்களும் உடன்பிறப்புகளும் உங்களுடன் பிரியமாக இருப்பர். கணவன்-மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும். உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு. பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சதுர்த்தி விரதமிருந்து விநாயகப் பெருமானை வழிபட்டால் சந்தோஷ வாய்ப்புகள் வந்து சேரும்.

(முற்றும்)

# தனிமைப்படுத்தலில் இருந்த ஒருவர் தப்பி ஓட்டம்

(நெளுக்குளம்)

வவுனியா பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் வெளிநாட்டிலிருந்து அழைத்துவரப்பட்டு தங்கவைக்கப்பட்டிருந்த சிலாபம் பகுதியை சேர்ந்த நபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு தப்பி ஓடியுள்ளார்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த வாரம் கட்டார் நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்ட 36 வயதுடைய நபரே இவ்வாறு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து தப்பி ஓடியதாக பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபரை கைது செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் இது குறித்து அவதானமாக இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரின் பரிசோதனை அறிக்கை வெளிவராத நிலையில் தப்பி ஓடியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கடந்த வாரம் குறித்த தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-4-299)

# பொலிஸ்மா அதிபர் வெளியிட்ட துண்டுப்பிரசுரம்

(நெளுக்குளம்)

இலங்கையில் ஒரேயொரு தமிழ் மொழி மூல 24 மணி நேர பொலிஸ் அவசர சேவை இயங்கி கொண்டிருப்பதாகவும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் இரகசியம் பேணப்படும் எனவும் வன்னி பிரதிப்பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்தவால் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, சிறுவர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான தகவல்கள், சட்டவிரோதமான மதுபானம், போதைவஸ்து தொடர்பான தகவல்கள், தேசிய பாதுகாப்பிற்கு பாதகம் விளைவிக்கக் கூடிய செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள், வன அழிப்பு, மண் அகழ்வு, வனவிலங்கு அழிப்பு பொலிஸ் சேவை தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளவும் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பாக அறிவித்து 076 622 4949, 076 622 6363 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிவிக்கவும் முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அறிவிக்கப்படின் உடனடியாக தீர்வு பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் தகவல்கள் தொடர்பான இரகசியத்தன்மையும் பாதுகாக்கப்படும் என வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபரால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-299)

# ஆக்கங்கள் கோரல்

(பூநகரி)

பூநகரி பிரதேச கலை கலாசார பேரவையால் வருடா வருடம் பூந்துணர் நூல் வெளியீடு செய்யப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக இவ்வருடம் வெளியிடப்படவுள்ள "பூந்துணர்நறவம X" நூலிற்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. ஆக்கங்கள் அனுப்ப விரும்புவோர் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், கலாசாரப் பேரவை பிரதேச செயலகம் - பூநகரி என்னும் முகவரிக்கு நேரடியாக அல்லது தபால் மூலமாக அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு கலாசாரப் பேரவையுடன் தொடர்புகொள்ளுமாறும் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (5-4-84)

# யானைகள் அட்டகாசம் பயிர்கள் அழிவு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம் பிரதேச சபைக்குட்பட்ட சின்னத்தம்பனை கிராமத்தில் காட்டு யானைகளின் தாக்கத்தால் சுமார் ஒரு ஏக்கர் வரையான தென்னை, வாழை மரங்கள் அழிவடைந்துள்ளன.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, நேற்று முன்தினம் இரவு குறித்த பிரதேசத்தினுள் ஐந்துக்கு மேற்பட்ட காட்டு யானைகள் நுழைந்து ஒரு ஏக்கர் அளவிலான பயன்தரு மரங்களான தென்னை மரங்கள், வாழை மரங்களை சேதமாக்கியுள்ளன.

நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய இக் கிராம மக்கள் தமது வாழ்வாதாரமாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான நிலையில் கடந்த ஐந்து வருடங்களாக காட்டு யானைகளின் தாக்குதலால் அவர்கள் வாழ்வாதாரத்தை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பிரச்சினை காரணமாக யானை வேலியினை அமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-299)

# சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட மூவர் கைது

(தருமபுரம்)

பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய தருமபுரம் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி மணல் அகழ்ந்த குற்றச்சாட்டில் ஒருவரும் உள்ளூர் துப்பாக்கியுடன் ஒருவரும் 6 லீற்றர் கசிப்புடன் ஒருவரும் தருமபுரம் பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர்பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டவரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (5-4-316)

# கேரளக் கஞ்சாவுடன் இருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் கேரளக் கஞ்சாவினை கடத்திச் சென்ற இருவரை மடுகந்தை பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

மடுகந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா - மாமடு செல்லும் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் மாமடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை வழிமறித்து சோதனை மேற்கொண்ட போது அவர்களிடமிருந்து 2 கிலோ கிராம் கேரளக் கஞ்சா மற்றும் 3 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்ததுடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (5-4-299)

# 4 மணிநேர வீதி சோதனை; 49 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா நகரப்பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று அதிகாலை வரை மேற்கொள்ளப்பட்ட 4 மணி நேர வீதிச் சோதனை நடவடிக்கையின் போது விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 49 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வவுனியா போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் இரவு 11 மணியிலிருந்து நேற்று அதிகாலை 3 மணிவரையிலும் வவுனியா நகரப்பகுதியில் விசேட வீதிச் சோதனை நடவடிக்கை போக்குவரத்துப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

இவ் விசேட நடவடிக்கையில் 28 பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திய 49 சாரதிகள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக மது போதையில் ஆறு சாரதிகளும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்திய மூன்று பேருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய 40 பேர் தலைக்கவசம் அணியவில்லை கைத்தொலைபேசிப்பாவனை, வாகன ஆவணம்இன்மை போன்ற குற்றங்களுக்காகவும் அவர்களிடம் தண்டப்பணம் அறிவிடப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்ந்தும் நகரில் முன்னெடுக்கப்படவுள்ளது.

எனவே சாரதிகள் மற்றும் பொதுமக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (5-4-299)

# பாகுபாடின்றி வீட்டுத்திட்டம் வழங்க பா.உ.திலீபன் நடவடிக்கை

(குருமன்காடு)

வவுனியாவில் பாகுபாடின்றி அனைத்து மக்களுக்கும் புதிய வீட்டுத் திட்டங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா ஏற்பாட்டில் வீடமைப்பு திட்ட இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்தவிற்கும் வன்னி பாராளுமன்ற உறுப்பினரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபனுக்கும் இடையில் கொழும்பில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்று இடம் பெற்றது.

இதன்போது, வன்னியில் வீடு அற்ற மக்களுக்கு பாகுபாடின்றி புதிய வீட்டுத் திட்டம் வழங்க வேண்டும் எனவும், கடந்த காலங்களில் கட்டப்பட்டு நிலுவையில் உள்ள வீட்டுத் திட்டங்களை கட்டி முடிக்க நடவடிக்கை எடுக்குமாறும் பாராளுமன்ற உறுப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

இதனை, ஏற்றுக் கொண்ட வீட்டுத்திட்ட இராஜாங்க அமைச்சர் விரைவில் வவுனியாவிற்கு விஜயம் செய்து வீட்டுத் திட்ட பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்தார். (5-4-250)



ஓட்டுச்சுட்டான் பிரதேச செயலாளரின் ஏற்பாட்டில் செயலகத்திற்கு முன்பாக மர நடுகைச் செயற்பாடு நடைபெற்றது. (படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

> உள்ளத்தில் ஒழுங்கு முற்றிலும் குறைந்திருந்தால் நாம் புறத்தில் எதையும் நிலைநாட்ட முடியாது.
> – ஷேக்ஸ்பியர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கட்சியையும் கந்தறுத்து பதவியையும் துறந்த கதை

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் பதவியை துரைராஜசிங்கம் இராஜினாமாச் செய்துள்ளார்.

கடந்த பொதுத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி பின்னடைவைச் சந்தித்ததன் பிற்பாடு, அந்தக் கட்சிக்குள் அக முரண்பாடுகள் வலுத்துக் கொண்டன.

இந்த அக முரண்பாட்டை ஏற்படுத்தியதில் துரைராஜசிங்கத்துக்குப் பெரும் பங்குண்டு.

ஆம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த தேசியப் பட்டியல் ஆசனத்தை வழங்குவதில் துரைராஜசிங்கம் தன்னிச்சையாகச் செயற்பட்டார் என்ற குற்றச்சாட்டு கட்சிக்குள் பெரும் பூகம்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுக்குக் கூடத் தெரியப்படுத்தாமல் தன்பாட்டில், தேசியப் பட்டியலில் கிடைத்த பாராளுமன்ற உறுப்பினர் பதவியை தான் விரும்பிய ஒருவருக்கு; செயலாளர் என்ற அதிகாரத்தின் கீழ் துரைராஜசிங்கம் வழங்கியிருந்தார்.

இதன் காரணமாக அவருக்கு எதிராகக் கட்சிக்குள் கடும் எதிர்ப்பு எழுந்தபோது அவர் தனது செயலாளர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டியதாயிற்று.

இதில் அவதானிக்கப்பட வேண்டியது என்னவெனில், மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மக்கள் பேரவை கிழக்கு மாகாணத்தில் முத்தமிழ் விழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களை ஒன்றுபடுத்துவது, வடக்கு – கிழக்கு தமிழ் உறவைக் கட்டியெழுப்புவது என்ற நோக்கில் தமிழ் மக்கள் பேரவை குறித்த முத்தமிழ் விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

எனினும் அந்த முத்தமிழ் விழாவுக்கு விருந்தினர்கள், பொதுமக்கள் செல்லக் கூடாது என துரைராஜசிங்கம் பெரும் பிரசாரம் செய்து தடுத்தார்.

தவிர, முத்தமிழ் விழாவுக்குப் பங்காற்றிய கிழக்கு மாகாணத்து அரச உத்தியோகத்தர்களுக்கு அப்போதிருந்த மாகாண சபை அரசாங்கத்தினூடாக இடமாற்றத்தையும் வழங்கியிருந்தார்.

உண்மையில், கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் பல்வேறு அவலங்களையும் அழுத்தங்களையும் சந்தித்து வருகின்றனர்.

கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. இந்நிலையில் கிழக்கு மாகாண மக்களை அணிதிரட்டுவதில் பங்காற்ற வேண்டிய துரைராஜசிங்கம் தனது சொந்த அரசியல் நலனுக்காக, தமிழ் மக்களிடையே ஒற்றுமை ஏற்படுவதைத் தடுத்தார்.

அதே மன இயல்போடு நடந்து கொண்ட அவர், இப்போது தமிழரசுக் கட்சிக்கும் ஈனத்தைத் தேடியுள்ளார்.

எனினும் காலம் கடந்தேனும் அவருக்கு இயற்கை பாடம் புகட்டியுள்ளது.

# நாட்டில் மீண்டுமொரு சர்வாதிகார ஆட்சிக்கு இடமளிக்கமாட்டோம்

## மக்கள் விடுதலை முன்னணி திட்டவட்டம்

**(கொழும்பு) நாட்டில் மீண்டுமொரு சர்வாதிகார ஆட்சிக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என மக்கள் விடுதலை முன்னணியின் மத்தியகுழு உறுப்பினர் நாமல் கருணாரட்ன தெரிவித்தார்.**

19 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டுமென அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிலர் தொடர்ந்து கூறி வருகின்றனர்.

இதற்கிடையில்ஏனைய பல கட்சிகள் 19 ஆவது திருத்தச் சட்டத்தை ஒருபோதும் நீக்கக்கூடாது எனவும் அதில் சிறுபான்மையினரின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையிலேயே நாமல் கருணாரட்ன, 19 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நிறைவேற்று அதிகார முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் என்றே நாட்டில் இதுவரையான காலமும் போராட்டங்கள் இடம்பெற்றன.

இதனால்தான் 19 ஆவது திருத்தச்சட்டம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் நல்லது கெட்டது என இரண்டும் உள்ளது.

இதிலுள்ள பிழைகளை நிவர்த்தி செய்து நாம் முன்னோக்கித்தான் செல்ல வேண்டும். ஆனால் இதனை விடுத்து மீண்டும் சர்வாதிகார ஆட்சிக்கு செல்லவே அரசாங்கம் முயற்சிக்கிறது. இதற்கு நாம் ஒருபோதும் இணங்க மாட்டோம்" என திட்டவட்டமாகத் தெரிவித்தார். (ஜ-4)

# மாகாண சபை தொடர்பில் கோட்டா- பசில் சமர் உக்கிரம்

## ஹக்கீம் தகவல்

(கொழும்பு)

"மாகாண சபை தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் அவரது சகோதரர் பசில் ராஜபக்ஷவுக்கும் இடையில் பெரும் சமர் ஆரம்பித்துள்ளது" என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் சுட்டிக் காட்டினார்.

மு.காவின் உயர்பீடக் கூட்டம் நேற்று முன்தினம் இரவு கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை ஒழித்து மாகாண சபை முறைமையை இல்லாமலாக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முயற்சி எடுக்கின்றார். இதனை முன்னெடுக்கும் பொறுப்பை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகரவுக்கு வழங்கியுள்ளார்.

இதனை ஜனாதிபதியின் சகோதரரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நிறுவுநருமான பசில் ராஜபக்ஷ விரும்பவில்லை.

மாகாண சபை முறைமையை ஒழிக்கக் கூடாது என்பதில் பஸில் உறுதியாக இருக்கின்றார். இந்த விடயத்தைக் கையாள அவரும் ஒருவரை நியமித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய இந்தியாவுக்கு எதிராகச் செயற்படுகின்றார். பசில் இந்தியாவுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றார்" எனச் சுட்டிக் காட்டினார். (ஜ-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல்5 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** நெளுக்குளத்திலிருந்து இராஜேந்திரகுளம் வரை, நித்தியநகர் ஆகிய பிரதேசங்களில், மின்சாரம் தடைப்படும்.

# 2 ஆம் தவணைப் பரீட்சைகள் 2 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)


வடமாகாண கல்வித் திணைக்களத்தின் தீர்மானத்திற்கமைய 2 ஆம் தவணைப் பரீட்சைகள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடத்தப்படவுள்ளன.

வடமாகாணத்தில் தரம் 2 இல் இருந்து தரம் 10 வரைக்குமான 2 ஆம் தவணைப் பரீட்சை வலய மட்டத்தில் இடம்பெறவுள்ளது.

மாணவர்களின் தற்போதைய நிலையை அறிவதற்கும் அவர்களை கற்றலில் உற்சாகப்படுத்துவதற்கும் ஏற்றவகையில் வினாத்தாள்கள் தயாரிக்கத் திட்டமிடப்படுகின்றன.

தரம் 11 இற்கு வினாத்தாள்கள் மாகாண மட்டப் பொதுப்பரீட்சையாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார். (5-8)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- நடக்க வேண்டிய வழியில் குழந்தையை பழக்கினால் வயதான பிறகும் அந்த வழியிலிருந்து விலகாமலிருப்பான்.
- பாலைக் கடைந்தால் வெண்ணெய் பிறக்கும். மூக்கைப் பிசைந்தால் ரத்தம் பிறக்கும். கோபத்தை வலியுறுத்தினால் சண்டை தான் பிறக்கும்.
- பாவம் செய்யாமல் கோபப்படுங்கள். உங்கள் கோபத்தின் மீது சூரியன் கீழே இறங்கி விடாதிருக்கட்டும்.
- கொலை செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச்சாட்சி சொல்லாதே, வஞ்சனை செய்யாதே உன் தந்தையையும் தாயையும் பெருமைப்படுத்து.
- சஞ்சலமுள்ளவன் காற்றடிக்கும் திசையெல்லாம் இழுத்து அலைக்கழிக்கப்படும் கடல் அலை போல இருக்கிறான்.
- சத்தியத்திற்குச் சாட்சியாகவே பிறந்தேன். அதற்காகவே உலகிற்கு வந்தேன். சத்தியத்தைக் கடைப்பிடிப்பவன் எவனும் என் குரலுக்குக் காது கொடுக்கிறான்.
- சச்சரவிலிருந்து விலகி நிற்பது மனிதனுக்கு மேன்மை. ஆனால், ஒவ்வொரு முட்டாளும் எந்தச் சண்டையிலும் தலையிட்டுக் கொண்டே யிருப்பான்.

# இங்கிலாந்தை வீழ்த்தியது ஆஸி



இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியா அணி 19 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

ஆரோன் பிஞ்ச் தலைமையிலான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது.

சர்வதேச இருபது-20 கிரிக்கெட் தொடரை 1-2 என்ற கணக்கில் இழந்த அவுஸ்திரேலியா, தற்போது இங்கிலாந்துக்கு எதிராக 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது.

இந்நிலையில், இங்கிலாந்து-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி மென்செஸ்டரில் நடைபெற்றது.

நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது.

இதையடுத்து, துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது அவுஸ்திரேலியா 50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கிளென் மெக்ஸ்வெல் 77 ஓட்டங்களையும், மிச்செல் மார்ஷ் 77 ஓட்டங்களையும், மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 43 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பில் மார்க்வூட், ஜோப்ரா ஆர்ச்சர் இருவரும் தலா 3 விக்கெட்டுக்களையும், ஆதில் ரஷீத் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதைத்தொடர்ந்து, 295 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது.

அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்து வீச்சால் இங்கிலாந்து அணியினர் ஓட்டங்கள் எடுக்கத் திணறினர். முன்னணி வீரர்கள் விரைவில் ஆட்டமிழந்தனர்.

ஆனாலும், ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஜொனி பெயார்ஸ்டோவ் பொறுப்புடன் விளையாடி அரைச் சதமடித்தார். அவர் 84 ஓட்டங்களில் வெளியேறினார்.

இளம் வீரரான சேம் பில்லிங்ஸ் தனி ஒருவராக போராடினார். கிடைத்த பந்துகளை ஓட்டங்களாக மாற்றினார். ஆனால் அவருக்கும் யாரும் ஒத்துழைப்பு தரவில்லை.

சிறப்பாக விளையாடிய சேம் பில்லிங்ஸ் சதமடித்து அசத்தினார். அவர் 100 பந்துகளில் 2 சிக்ஸர், 14 பௌண்டரி அடங்கலாக 118 ஓட்டங்களைக் குவித்து போட்டியின் இறுதி பந்தில் ஆட்டமிழந்தார்.

இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழந்து 275 ஓட்டங்களை பெற்று 19 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்து வீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் அடம் ஸாம்பா 4 விக்கெட்டுக்களையும், ஜோஷ் ஹேசில்வூட் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக ஹேசில்வூட் தெரிவானார். (4)

# கரையொதுங்கிய அரியவகை ஆமை



(கொழும்பு)

வில்பத்து தேசிய பூங்காவை அண்மித்த கடற்கரையோரத்தில் காயமடைந்த நிலையில் Green Sea Turtle (Chelonia Mydas) எனும் வகை இனத்தைச் சேர்ந்த ஆமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

நேற்று முன்தினம் கரையொதுங்கிய ஆமையின் கீழ்தாடையில் பலத்த காயங்கள் காணப்பட்டதாகவும்,

அதனையடுத்து முள்ளிக்குளம் வன விலங்கு பாதுகாப்பு அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று சுமார் இரண்டு மணித்தியாலயங்களுக்கும் மேலாக சிகிச்சை அளித்துள்ள போதிலும் அந்த ஆமை இறந்துள்ளதாக தெரிவித்துள்ளனர். (ஜ)

# ஆண் குழந்தைக்கு தந்தையானார் நாமல்



(கொழும்பு)

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ ஆண் குழந்தையொன்றுக்கு தந்தையாகியுள்ளார்.

ஒருவருட திருமணப் பூர்த்தியை நேற்று கொண்டாடும் நிலையில், அவர் ஆண் குழந்தையொன்றுக்கு தந்தையாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஆரோக்கிய வாழ்க்கைக்கு "வோக்டோக்" முறைமை அறிமுகம்

(கொழும்பு)

ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் நோக்கில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நடந்து செல்லும் போது கூட்டத்தை நடத்தும் புதிய வேலைத்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தினார்.



"வோக் டோக்" என அழைக்கப்படும் இந்த கூட்டம் நடத்தும் முறைமைக்கு அமைய அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுடன் இணைந்து முதல் கூட்டத்தை நேற்று முன்தினம் நடத்தினார்.

தொழிற்றுறையினர் மற்றும் ஆரம்ப நீண்டகால பதிவு மதிப்பீடுகளை ஊக்குவிப்பதற்காக இவர்களின் இரண்டு அமைச்சுக்களும் இணைந்து செயற்படும் பல முறைகள் தொடர்பாக அமைச்சர்கள் இருவரும் கலந்துரையாடினர். (ஜ-4)

# நொதேன் பிறீமியர் லீக்- 2 K 20

## கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிகள்




- கிங் கோப்ராஸ் ஜப்னா எதிர் நோர்த் சுப்பீரியர்ஸ்.
- கிங் கோப்ராஸ் ஜப்னா - 40/10.
- நோர்த் சுப்பீரியர்ஸ் - 34/8.
- கிங் கோப்ராஸ் 6 ஓட்டங்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - றோமன் காந்- 4 விக்கெட்டுக்கள்.



- வட ஸ்ரைக்கர்ஸ் எதிர் கொக்குவில் ஸ்ரார்ஸ்.
- கொக்குவில் ஸ்ரார்ஸ்- 90/6.
- வட ஸ்ரைக்கர்ஸ் - 76/5.
- கொக்குவில் ஸ்ரார்ஸ் 14 ஓட்டங்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - தர்சன்- 44 ஓட்டங்கள்.



- இனுவில் யுனைடெட் எதிர் கிங் கோப்ராஸ் ஜப்னா.
- இனுவில் யுனைடெட் - 75/10.
- கிங் கோப்ராஸ்- 63/10.
- இனுவில் யுனைடெட்-12 ஓட்டங்களால் வெற்றி.
- ஆட்ட நாயகன் - மோகன்ராஜ்- 24 ஓட்டங்கள்.

## சங்கிலி...

நேற்று சனிக்கிழமை மதியம் மோட்டார் சைக்கிளில் சென்ற திருடர்களால் அறுக்கப் பட்டது.

கெற்பேலிப் பகுதியில் இருந்து விடத்தற் பளை நோக்கி தனது வீட்டிற்கு செல்லும் வழியில் ஆள் நடமாட்டம் குறைவான இடத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்கள் சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் குறித்த ஆசிரியை கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஞா-30)

## தப்பிச் சென்றவர்...

ளிக்கிழமை இரவு தப்பியோடியுள்ள நிலையில் குறித்த நபர் நேற்று சனிக்கிழமை மாலை மன்னார் சௌத்பார் புகையிரத நிலைய பகுதியில் வைத்து சௌத்பார் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபரை மீண்டும் வவுனியா பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப் படுத்தல் நிலையத்திற்கு அழைத்துச் செல்ல இராணுவம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இது தொடர்பில் முன்னர் கிடைத்த செய்தி உள்ளே) (ஞா-285)

## அரசாங்கம்...

தற்கு மக்களிடம் அனுமதி பெறத் தேவையில்லை. மாறாக அதனை வலுவிழக்கச் செய்வதெனின் நிச்சயமாக மக்களிடம் அனுமதி கோர வேண்டும். 19ஆவது திருத்தம் மக்களின் இறையாண்மையை ஸ்திரமடையச் செய்தது.

ஆனால் அந்த வெற்றியை 20ஆவது திருத்தத்தின் ஊடாக மீண்டும் பின்நோக்கித் திருப்புவதாக இருந்தால் மக்கள் அபிப்பிராயம் கோரப்பட வேண்டியது இன்றியமையாததாகும் என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன வலியுறுத்தியிருக்கிறார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

அரசியலமைப்பின் 20ஆவது திருத்த யோசனை முன்மொழியப்பட்டிருக்கின்றது. அதுகுறித்து ஒரேயொரு வரியில் கூற வேண்டுமானால், அது 2010 - 2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு நாட்டை மீண்டும் கொண்டு செல்லும் என்பதேயாகும்.

இந்த 20ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமானால் 19ஆவது திருத்தத்தில் எஞ்சுபவை ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக் காலம் 5 வருடங்கள், ஜனாதிபதி பதவிக்கான வரையறை மற்றும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஆகியவை மாத்திரமேயாகும்.

ஜனநாயக ஆட்சிமுறை ஒன்றின் மீதும் மக்களின் இறையாண்மை மீதும் 20ஆவது திருத்தம் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை விளக்குவதுடன் அதுகுறித்து மக்கள் மத்தியில் விரிவான தர்க்கம் ஏற்படுவது அவசியம் என்பதை வலியுறுத்துவதே எனது நோக்கமாகும்.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தின் ஊடாக இலங்கையின் ஜனாதிபதி முறை உலகிலேயே மிகவும் பலம் வாய்ந்ததும் மிகமோசமானதுமான ஒன்றாக மாறியது.

இந்நிலையில் 19ஆவது திருத்தத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட அடைவுகள், வெற்றிகள் அனைத்தையும் இல்லாமல் செய்து மீண்டும் பின்நோக்கிச் செல்வதையே 20ஆவது திருத்த முன்மொழிவு இலக்காகக் கொண்டிருக்கின்றது.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று நிறைவேற்றதிகாரமுடைய ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்காமல் இருப்பதற்கு நல்லாட்சி அரசாங்கம் தீர்மானித்தமையாகும்.

அதேபோன்று பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்வதற்கான எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டமையும் குறைபாடுகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தன.

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டிருக்கும் 20ஆவது திருத்தத்தின் ஊடாக பாராளுமன்றம் முழுமையாக ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதேபோன்று ரணசிங்க பிரேமதாஸ பிரதமராக இருந்த காலத்தில் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் விளைவாக அவர் ஒரு பியூனாக (அலுவலக காரிய தரிசி) மாற்றப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார்.

எனினும் 19ஆவது திருத்தத்தின் மூலம் பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்ற பிரதமருக்கு அதிகளவான அதிகாரங்கள் கிடைத்தது.

ஆனால் 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் பிரதமர் மீண்டும் பியூனாகவே மாறவேண்டியிருக்கும். பிரதமரை எப்போது வேண்டுமானாலும் நீக்க முடியும். அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களை ஜனாதிபதி நியமிக்கும் போதும் நீக்கும் போதும் பிரதமரிடம் அபிப்பிராயம் கோரவேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்தார். (ஞா)

## வவுனியாவில்...

பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 420 மில்லிகிராம் மற்றும் 310 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், தேக்கவத்தை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 390 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 43,000 ரூபாய் பணம் என்பவற்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 3 பேரிடமும் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஞா-250)

## புதிய அரசியல...

கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் பயணத்தை மகிழ்ச்சியு டன் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் தேரர் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்று முக்கியத்துவமிக்க அநுராதபுரம் அட்டமஸ்தானவில் சமயக் கிரியைகளில் ஈடுபட்டு ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்ட ஜனாதிபதி, நேற்று முற்பகல் லங்காராமய, மிரிச வெட்டிய மற்றும் ஸ்ரீ சம்புத்த ஜயந்தி விகாரைகளுக்கு சென்ற வேளையிலேயே விகாராதிகாரி தேரர்கள் இதனைத் தெரிவித்தனர்.

லங்காராம விகாரைக்கு சென்ற ஜனாதிபதி, விகாராதிகாரி சங்கைக்குரிய ரலபனாவே தம்ம ஜோதி தேரரைச் சந்தித்து உரையாடினார்.

விகாரையின் பாதுகாப்பு நடவடிக்கைகளை பார்வையிட்ட ஜனாதிபதி, புனித பூமிக்கு வருகை தந்திருந்த பக்தர்களுடனும் உரையாடினார்.

ஜனாதிபதி மிரிசவெட்டிய விகாராதிகாரி சங்கைக்குரிய ஈத்தல வெட்டுனுவெவே ஞானதிலகக்க நாயக்க தேரரைச் சந்தித்து ஆசீர்வாதங்களை பெற்றுக் கொண்டார்.

ஸ்ரீ சம்புத்த ஜயந்தி விகாரைக்கு சென்ற ஜனாதிபதி, சங்கைக்குரிய நுகேதென்னே ஸ்ரீ பஞ்ஞானந்ததேரரை சந்தித்து உரையாடினார். (ஞா)

## யாழ்ப்...

பட்டனர்.

இதன்போது 10 கிராம் 450 மில்லி கிராம் கஞ்சா வைத்திருந்த ஒருவரும், 180 மில்லி கிராம் ஹெரோயின் வைத்திருந்த 4 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 8 பேரும், திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 3 பேரும் மது போதையில் வாகனம் செலுத்திய 4 பேரும் மற்றும் சந்தேகத்தின் பேரில் ஐவரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஞா-8)

## குடும்பப் பெண்...

இதில் மீசாலை வடக்கு, மீசாலையைச் சேர்ந்த 40 வயதான பவானி என்ற பெண் கை மற்றும் கால் பகுதிகளில் பலத்த காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (ஞா-30)

## 26 பேருக்கு...

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 3,195 ஆக அதிகரித்துள்ளது.

கட்டாரில் இருந்து வந்த 22 பேருக்கும் குவைத்தில் இருந்து வந்த 2 பேருக்கும் இந்தியாவில் இருந்து வந்த ஒருவருக்கும், ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து வந்த ஒருவருக்கும் இவ்வாறு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஞா)

### மெகா பவர்

திகதி 12/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0610
வெற்றி எழுத்து A | சுப்பர் இலக்கம் 26 | வெற்றி இலக்கங்கள் 10 59 62 64

### கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 12-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2538
ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கங்கள் 15 20 41 54
தேசிய லொத்தர் சபை

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 12-09-2020 | சீட்டிழுப்பு இலக்கம் 1054
வெற்றி இலக்கங்கள் 0 0 9 7 0 7 8
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2020/09/12
சீட்டிழுப்பு இலக்கம் 4243
ஆங்கில எழுத்து X | வெல்லப்பட்ட இலக்கங்கள் 3 0 5 3 0 9
தேசிய லொத்தர் சபை

### சுபிரி வாசனா

சீட்டிழுப்பு திகதி 2020/09/12 | சீட்டிழுப்பு இலக்கம் 1534
சுப்பர் இலக்கம் 07 | வெற்றி இலக்கங்கள் 21 40 43 44

### සංවර්ධන වාසනාව — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி வாரம் 366 | திகதி 12.09.2020 | வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கங்கள் 14 17 42 | விதி எண் 8
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,648,340
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1213 | நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 12.09.2020 | தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் A 43 51 62 73
55,704,904.40
SUPER 500 7 3 0 1

### அத கோடிபதி

சனிக்கிழமை | சீட்டிழுப்பு இல: 1039 | வர்ணம்: மஞ்சள் | சீட்டிழுப்பு திகதி: 2020.09.12
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 69,158,220/-
வெற்றி இலக்கங்கள் 07 13 23 66 | ஆங்கில எழுத்து W
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 2726
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 554
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

சனிக்கிழமை | சீட்டிழுப்பு திகதி: 2020.09.12 | சீட்டிழுப்பு இல.: 3369 | வர்ணம்: பச்சை
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 40,487,252.50
வெற்றி இலக்கங்கள் 21 30 51 62 | ஆங்கில எழுத்து H
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 6241
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

திகதி 12.09.2020 | வெற்றி வாரம் 2920 | வர்ணம் இளம்நீலம்
வெற்றி இலக்கங்கள் 26 31 44 59 | இடபம்
ரூ.500 பரிசுக்குரிய 9206
ரூ.100 பரிசுக்குரிய 149
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,428,880
தொ. பே.: 0112 333 546/47
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## தியாகி திலீபன்...

கண்டி - போகம்பரை சிறைச்சாலைக்கு நேற்று கண்காணிப்புப் பயணமொன்றை மேற்கொண்டிருந்த பாதுகாப்புச் செயலரிடம், பூஸா சிறைச்சாலையில் கைதிகள் சிலர் முன்னெடுத்துவரும் உண்ணா விரதப் போராட்டம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இந்த விடயத்தையும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

எமது நாட்டில் முன்னெடுக்கப்பட்ட சாகும்வரையான உண்ணா விரதப் போராட்டங்கள் தொடர்பில் குறிப்பிடுவதாக இருந்தால், அத்தகைய போராட்டத்தில் ஈடுபட்டு திலிபன் என்பவர் மட்டுமே உயிரிழந்துள்ளார். அவரும் உண்ணா நோம்பால் உயிரிழக்கவில்லை.

அவர் ஒரு நோயாளி. இதன்காரணமாகவே உண்ணா விரதப்போராட்டத்துக்கு செல்லுமாறு பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார். பட்டினி அதிகரிக்கும்போது உண்ணாவிரதப் போராட்டத்தை ஏதேனும்விதத்தில் கைவிட்டுவிடுவார் கள். போராட்டத்தில் ஈடுபட்ட கைதிகளில் 20 பேர்வரை

தற்போது உணவு உண்ணுகின்றனர். ஏனையோரும் இன்னும் ஓரிரு நாட்களில் வழமைக்கு திரும்புவார்கள். எனவே, அது பெரிய பிரச்சினையாக அமையாது என்றார். (ஞா-)

## வடமராட்சி...

ஈடுபட்டு வருகின்றனர். கரையில் இருந்து சுமார் ஒன்பது கடல் மைல் தூரத்தில் நின்று மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். தடை செய்யப்பட்ட றோலர் படகினைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வடமராட்சி மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கடலில் விடப்படும் பல இலட்சம் ரூபாய் பெறுமதியான வலைகளை அறுத்து நாசம் செய்து வருகின்றனர்.

கடந்த மூன்று நாட்களாக மிக அதிகளவில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் இடம்பெற்று வருகிறது. இதனைக் கண்டித்து வடமராட்சி மீனவர்கள், வாயை மூடிக் கட்டி மௌன கவனயீர்ப்பு ஊர்வலம் ஒன்றை நாளை முன்னெடுக்கவுள்ளனர்.

நல்லூர் முன்றலில் இருந்து காலை பத்து மணிக்கு ஆரம்பமாகும் குறித்த மௌன கவனயீர்ப்பு பேரணியானது, இந்தியத் தூதரகத்தைச் சென்றடைந்து அங்கு இந்தியத் துணைத் தூதரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்து, இந்திய மீனவர்களது அத்துமீறல் தொடர்பில் தெரியபடுத்தி, இதனால் தமது வாழ்வாதாரப் பாதிப்பு மற்றும் உடமைகள் சேதமாக்கப்படுவது தொடர்பில் எடுத்துக் கூறி எல்லை தாண்டுவதை தடுத்து நிறுத்துமாறு, துணைத் தூதுவரிடம் கோர வுள்ளனர்.

தொடர்ந்து நீரியல் வளத்துறை அமைச்சரின் அலுவலகத்திற்குச் சென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் ஒன்றையும் கையளிக்கவுள்ளனர். தொடர்ந்து நீரியல் வளத்துறை திணைக்களம், மாவட்டச்செயலகம் இறுதியாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்குச் சென்று ஆளுநருக்கு மகஜர் க்கையளித்து தமது போராட்டத்தை நிறைவு செய்யவுள்ளனர்.

வடமராட்சி வடக்கு மீனவ சங்கங்கள் நேற்று முன்தினம் ஒன்று கூடி நடத்திய கலந்துரையாடலிலேயே குறித்த முடிவு எட்டப்பட்டதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் வ.வர்ணகுலசிங்கம் தெரிவித்தார். (ஞா-06)

## நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக

# மோட்டார் சைக்கிளிலிருந்த பணம், தொலைபேசி திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் ஆலயத்திற்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்து தொலைபேசி, பணம் என்பன திருட்டு போயுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் (11) மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. ஆலயத்திற்கு வெளியே மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு, கோவிலுக்கு சென்று பின் திரும்பி வந்து பார்க்கும் போதே பணம், தொலைபேசி என்பன திருட்டு போயிருந்தது தெரிய வந்தது.

இதன் போது தொலைபேசி, 30 ஆயிரம் ரூபா பணம், வங்கி கடனட்டைகள் மற்றும் இதர ஆவணங்கள் என்பன திருடப்பட்டதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தைச் சூழ மக்கள் நடமாட்டம் இருந்த போதிலும் இந்த துணிகரச் செயல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா-08)


COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
வெளிநாடுகளில் கல்வி பயில/வேலை வாய்ப்புக்களை பெற தேவையான IELTS கற்கை நெறியானது மிகவும் அனுபவம்/தேர்ச்சி பெற்ற ஆசிரியரால் யாழ் நகரின் மத்தியில் கற்பிக்கப்படுகின்றது. (C-308)
IELTS English for International Opportunity
CIMS
0777-069-777

பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு
தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS (C-224)
எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்
- பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
- பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
- ஆரம்ப சம்பளம் -15'000/-
16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243
v2vacancies@gmail.com

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

### காணி தேவை
யாழ். நகரிலிருந்து 6 Km தூரத்திற்குள்ளாக 8 பரப்புக் காணி தேவை. அக்காணிக்குள் பழைய வீடுகள் இருந்தால் விரும்பத்தக்கது. (3860)
தொடர்புகளுக்கு : 077 735 4470

### அன்னா விரைவுப் பொதிகள் சேவை
11kg க்கு மேல் 1 கிலோவுக்கான கட்டணம்

| | |
|---|---|
| பிரான்ஸ் | - ரூ.1300 |
| ஜேர்மனி | - ரூ.1300 |
| டென்மார்க | - ரூ.1300 |
| கொலன்ட் | - ரூ.1300 |
| பெல்ஜியம் | - ரூ.1300 |
| இத்தாலி | - ரூ.1450 |
| லண்டன் | - ரூ.1150 |

இச் சேவையில் மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் கட்டணங்களும் வெளிநாட்டில் அறவிடப்படமாட்டாது.
5 - 8 வேலை நாட்கள் (C-305)
எம்முடன் இணைந்து பொதிகள்சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
கப்பல் ஊடாகவும் பொருட்கள் அனுப்ப முடியும் (குறைந்தது 100-200Kg)
லண்டன்-1050/= ,பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-1200/= கனடா- 1450/= சுவிஸ்- 1350/= அவுஸ்ரேலியா- 1750/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | நெல்லியடி சங்கானை | கிளிநொச்சி முல்லைத்தீவு | 077 888 9388 070 330 5500 | பளை மன்னார் கொழும்பு

SMART SCIENCE CENTER
நீராவியடி, யாழ்ப்பாணம்.
Tel : 077 653 1177
உயிரியல் - By. S. Thavaraj B.Sc (P.G.D.E) 076 831 6227
பௌதிகவியல் - By. T. K. Kajan B.Sc 077 653 1177
இணைந்த கணிதம் - By. T.S. Rankan B.Sc (P.G.D.E) 077 622 2298
இரசாயனவியல் - By. S. Ehan B.Sc (Spl. in chem.) 077 493 4210
இரசாயனவியல் - By. J. Uthayan M.Sc (P.G.D.E) 077 676 9576
(3870)

### சமையலாளர் தேவை
வவுனியாவில் உள்ள ஹோட்டல் ஒவியாவிற்கு இந்தியன், சைனீஸ் மற்றும் கொத்துரொட்டி தயாரிக்கக்கூடிய முன் அனுபவம் உள்ள சமையலாளர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்குமிடம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு (3860)
077 366 0828, 024 222 7959

### மருந்தாளர் தேவை
பிரபல்ய மருந்தகமான CITY MEDICALS - யாழ்ப்பாணம்
பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் உடனடியாகத் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழில் சார்ந்த நபர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
குறிப்பு :- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும் (C-298)
தொடர்புகளுக்கு
077 734 7578 / 021 221 7664
Monday - Saturday (9.00 am - 5.00 pm)
077 734 7578 (Sunday 9.00 am - 5.00 pm)

### விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- கிளிநொச்சி
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி
- மானிப்பாய்
DHL (C-112)
0768226240

### விதுஷா
கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
O/L பிரிவு 2 DAY CLASS
ஆரம்பம் : நாளை (14.09.2020) திங்கட்கிழமை
(8.00 a.m to 2.00 p.m)
- தனித்துவமான ஆசிரியர் குழாம்.
- கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்.
- அலகு ரீதியான மீட்டலுடன் மாதாந்தப் பரீட்சையும் நடைபெறும்.
- அனுமதிகள் வரையறுக்கப்பட்டதால் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
- முழுமையாக பாடத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படும். (C-286)
Tel : 076 482 4490

### வேலை வாய்ப்பு
யாழ். நகர் மத்தியில் உள்ள சன்றைஸ் மெடி கிளினிக் / யாழ். பேபி நீட்ஸ் நிறுவனங்களில் கீழ்காணும் வெற்றிடங்கள் உள்ளன.
- கணக்காளர் / கணக்குப்பதிவு இலிகிதர் (ஆண்/ பெண்) Accountant / Accounts Clerk ( Male/ Female)
- Baby Items விற்பனையாளர் (பெண்)
- மருந்தக விற்பனையாளர் ( பெண் ) ( Pharmacy Sales Girl )
- கிளினிக் மேற்பார்வையாளர் (40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் )
நேர்முகப் பரீட்சை : 13.09.2020 ஞாயிறு மதியம் 12.00
: 14.09.2020 திங்கள் மதியம் 12.00 (C-306)
இடம் :- சன்றைஸ் மெடி கிளினிக்
( யாழ். பஸ் நிலையம் முன்பாக )
இல. 388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 8013 / 021 222 6069


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

நாதம் 275

# வலம்புரி


சங்குநாதம்

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 13.09.2020 தொலைபேசி : 021 222 3378



# 13க்கு ஆபத்து இந்தியா காப்பாற்ற வேண்டும்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

## கட்டாயப் பயிற்சியிலும் நெகிழ்வுத்தன்மை வேண்டும்



வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

. இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் அவர்கள் எழுந்தார். சித்தங்கேணி ஞானபண்டிதக் குருக்கள் சபாரட்ண சர்மா அவர்களின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக்கூற, அனைவரும் எழுந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

ஆலடியில் சில நிமிடம் மௌனம் நிலவியது.மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

விதானையார்: இப்ப எங்கட மண்ணில தற்கொலையும் விபத்துக்களும் தானே மரணத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்குது. இதைத் தடுப்பாரும் இல்லை. தட்டிக் கேட்பாரும் இல்லை எண்டதாக நிலைமை வந்திட்டுது.

கங்காணி: விதானையார் சொல்லுறது நூறு விதம் உண்மைதான். அண்மையில கிளிநொச்சியில இளம் காதலர்கள் தற்கொலை செய்திருக்கினம். அதிலும் ஒரே கயிற்றில இருவரும் தூங்கி இறந்ததுதான் மிகப்பெரிய கொடுமையும் துன்பமும்.

இவ்வாறு கங்காணி கூறியதும் மீண்டும் ஆலடியில் நிசப்தம் நிலவியது.

சிறாப்பர்: ஒன்றாகத் தற்கொலை செய்த காதலர்கள் இருவரும் அரச உத்தியோகம் பார்க்கிறவர்கள். அதிலும் 28, 27 வயது வந்தவர்கள். இப்படிப் போய்த் தற்கொலை செய்யிறது எண்டால்...

மூப்பர்: என்ன இருந்தாலும் தற்கொலை மரணங்களுக்கு ஒரு முடிவு கட்டவேணும். இது தொடர்பில சில பொது அமைப்புக்கள் கவனம் செலுத்தவேணும் எண்டு ஆலடியில ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

இவ்வாறு மூப்பர் கூற, குறித்த தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

விதானையார்: அதுசரி, ஒரு இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டம் வடக்குக் கிழக்கிற்கு வந்து சேருமோ?

சாத்திரியார்: எங்கட பிள்ளைகளின்ர கிரக பலன் எப்படி எண்டு தெரியாது. ஆனால் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில வடக்கும் கிழக்கும் உள்வாங்கப்படுமெண்டு தான் சொல்லுகினம்.

பண்டிதர்: அதுசரி, நியமனம் கிடைத்த எங்கட பட்டதாரிப் பிள்ளைகள் பயிற்சி என்ற பெயரில வெயிலுக்க திரியிறதைப் பார்க்கப் பாவங்கள் போல இருக்குது.

வாத்தியார்: பண்டிதர் சொல்லத்தான் எனக்கு ஞாபகம் வருகுது. பட்டதாரிப் பயிலுநர்களுக்கான பயிற்சிகளில ஒரு பயிற்சி கிளிநொச்சியில நடக்கப் போகுதாம். ஆனால் நியமனம் கிடைத்த பட்டதாரி பயிலுநர்களில திருமணமான சில பெண்கள் கர்ப்பவதிகளாக இருக்கினம். இருந்தும் அவர்களையும் யாழ்ப்பாணத்தில இருந்து பஸ் ஏறி கிளிநொச்சிக் குப்போக வேணும் எண்டு கட்டாயப்படுத்துறதாகக் கேள்விப்பட்டன்.

கங்காணி: இதென்ன கரைச்சலாக் கிடக்குது. தாய்மை அடைந்திருக்கிற பெண்களை நீண்டதூரம் பயணிக்கச் சொல்லுறது எவ்வளவு பிழை.

இதுவிடயத்தில எங்கட யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தலையிட்டு மாற்று ஏற்பாடு ஒன்றைச் செய்யவேணும்.

இவ்வாறு வாத்தியார் கூறியதும் இப்படியான விடயங்களை அரச அதிகாரிகள் மனிதநேயத்தோட கையாளவேணும். இதை விட்டிட்டு கட்டாயப் பயிற்சி என்பற்காக, நெகிழ்வுத்தன்மை இல்லாமல் நடக்கக்கூடாது.

தாய்மை அடைந்துள்ள பெண்களை பஸ்ஸில போங்க, தூர இடத்துக்குப் போங்க எண்டெல்லாம் சொல்லாமல் அவர்களுக்கு ஏற்றாற்போன்ற பயிற்சி இடங்களை ஒழுங்கு செய்யவேணும்.

மூப்பர்: அதுசரி, மன்னார் திருக்கேதீச்சர நுழைவாயில் வளைவு விவகாரம் என்ன மாதிரியாக இருக்குதாம்.

சிறாப்பர்: அ முடிந்த விடயம். நிர்வாகத்தில இருக்கிற ஒரு சிலர், கத்தோலிக்க மதத்தவர் சிலரைத் தூண்டிவிட்டு வளைவை தள்ளி விழுத்தினதாகவல்லோ கதை அடிபடுகுது.

(சிறாப்பர் இவ்வாறு கூறியதும் வாத்தியார் வைத்திலிங்கத்திற்குக் கடும் கோபம் வந்தது)

இஞ்சே சிறாப்பர் இந்தக் கதையள் ஒண்டும் இஞ்ச தேவையில்லை. இனி நாங்கள் திருக்கேதீச்சர ஆலயத்தை மறந்திட்டம். முடிஞ்சால் திருக்கேதீஸ்வரப் பெருமான் பார்த்துக் கொள்ளட்டும்.

வாத்தியார் அதட்டலாகப் பேசியதும் ஆலடி மாநாடு அதிர்ந்து போனது. வாத்தியாரின் கோபத்திலும் நியாயம் இருக்கத்தான் செய்யிது.

திருக்கேதீச்சர ஆலய நிர்வாகம் கடந்த பொதுத் தேர்தலில ஒரு அரசியல் கட்சியை ஆதரித்து பேட்டி கொடுத்திருந்தது.

ஒரு பெரும் வரலாற்றுச் சிறப்புமிக்க சிவனாலய நிர்வாகம் இந்தளவு தூரம் கீழிறங்கினது என்பதற்கு என்ன காரணம் எண்டு ஒருத்தருக்கும் தெரியாமல் இருக்காது.

எங்கும் ஊழலும் இலஞ்சமும் தலைவிரித்தாடத் தொடங்கி விட்டுது. இனி மன்னார் திருக்கேதீச்சரத்தைப் பற்றி ஆலடியில் கதைக்கிறதில்லை எண்டொரு தீர்மானத்தை எடுத்தாக வேணும்.

பண்டிதர் பரமலிங்கம் கண்ணைத் துடைத்தபடி கூறினார்.

வாத்தியாரின் ஆதங்கத்தைப் புரிந்து கொண்ட மாநாட்டு உறுப்பினர்கள்; பண்டிதர் கொண்டு வந்த தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள, அதற்கு ஆலடிப் பிள்ளையாரும் அனுமதி வழங்குவதுபோல கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# இலங்கை யாப்பு புள்ளியும் இருபதாவது திருத்த முஸ்தீபும்


வரலாற்று ரீதியாக ஜனநாயகச் சிந்தனை கொண்டதொரு தேசமாக இலங்கைத்தீவு அடையாளப்படுத்தப் பட்டுள்ளது. இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு வருட பாரம்பரியத்தைப் பேணுகின்ற இலங்கையில் தமிழர், சிங்களவர் என இனத்துவ ரீதியாக பிரதேச ஆட்சிகள் தனித்தனியே மிக வும் சிறப்பாக இடம்பெற்ற தனிப்பெ ருமை பெற்ற தீவு என்பதும் சிறப்புக்கு ரியது. முடியாட்சி நிலவிய இத்தேசத் தில் 16 ஆம் நூற்றாண்டு தொடக்கம் இலங்கைக்கு வருகை தரத் தொடங் கிய ஐரோப்பிய இனத்தவர்களாலேயே பாராளுமன்ற ஆட்சி முறையும் அரசி யல் யாப்புக்களின் அடிப்படைகளும் பிரயோகங்களும் இங்கு கட்டியெழுப்பப்பட்டன.

குறிப்பாக இலங்கையில் 1796 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரித்தானியர்களுடைய ஆட்சியிலேயே முடியாட்சி முறை முழுமையாக நீக்கப்பட்டு மெல்ல மெல்ல பாராளுமன்ற ஆட்சி முறை யும் அரசியல் யாப்பு முறைகளும் வளர்ச்சி பெறத் தொடங்கியது.

## யாப்புக்களின் அறிமுகம்

அரசியல் யாப்பு என்பது ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டம் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. அதன் பிர யோக செல்நெறியிலேயே நாட்டின் அனைத்துச் செயற்பாடுகளும் ஒழுங்குபடுத்தப் பட்டு செயற்பட வேண்டியது அடிப்படையான விடயமாகும். இலங்கையைப் பொறுத்த வரையில் முடியாட்சி அல்லது மன்னராட்சிக் காலத்தில் அரசியல் யாப்பு என்பதற்கு அப்பால் நாட்டின் மரபுகள், சம்பிரதாயங்கள், வழக்காறுகள் என்பவற்றுக்கு அமைவாகவே அரசாட்சி இடம்பெற்றது. அரசியல் நகர்வும் அதன் வழியே நடைபெற்றது. இந்நிலையில் பிரித்தானியர்கள் 1815 ஆம் ஆண்டு இலங்கைத் தீவு முழுவதையும் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த பின்னர் ஏறத்தாழ இரு தசாப்தங்களுக்குள் இலங்கையின் முழுமையான நிர்வாகத்தையும் இணைக்கும் வகையில் அரசியல் யாப்பு என்பது அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது அதன் அறிமுகம் நிர்வாகச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதாக அமைந்த போதிலும் பின்னர் கால ஓட்டத்தில் பிரதான அடிப்படை அம்சமாக மாறத் தொடங்கியது.

முதலாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் அல்லது அரசியல் யாப்பின் அடிப்படை பொறிமுறை 1833 ஆம் ஆண்டு இலங்கைத்தீவில் வில்லியம் கோல்புறூக் என்பவரினால் அறிமுகப்படுத்தப் பட்டது. அதுவே இன்றைய பாராளுமன்ற ஆட்சிக்கான அடித்தளமாக அமைந்தது. தொடர்ந்து இலங்கை மக்களின் அப்போதைய கோரிக்கைகள், எதிர்ப்புக்கள், தேவைவலியுறுத்தல்களுக்கு அமைவாக யாப்புச் சீர்திருத்த அடிப்படைகள் கால ஓட்டத்தில் மாற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உட்பட்டு புதிய புதிய பெயர்களோடு யாப்புக்கள் அறிமுகமாகியது. 1910 ஆம் ஆண்டு குறுமக்கலம், 1920 ஆம் ஆண்டு வில்லியம் மனிங், 1931 ஆம் ஆண்டு டொனமூர், 1947 ஆம் ஆண்டு சோல்பரி என ஆங்கிலேயர் ஆட்சிக்கால அரசியல் யாப்புக்கள் இலங்



கையின் சமூக, பொருளாதார, அரசி யல் சார்ந்த விடயங்களில் புதிய மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் எட்டியது என்பதும் பதிவு செய்தது என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

## தேசிய யாப்புக்கள் அறிமுகம்

இந்நிலையில் இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னர் பிரித்தானிய ஆட்சியிலிருந்து முழுமையாக விடுபட்ட தேசமாக இலங்கையை உருவாக்கும் வகையில் குடியரசு யாப்புக்களின் பிரசவிப்பு இலங்கையில் நிகழ்ந்தமை ஒரு அரசியல் முதிர்ச்சியின் அடையாளமாகவே பார்க்கப்பட வேண்டும். அவ்வகையில் 1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றிக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஐக்கிய முன்னணி இலங்கைக்கான அரசியல் யாப்பான குடியரசு அரசியல் யாப்பினை அமரர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் 1972 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. இவ் யாப்பின் மூலம் இலங்கைக்கு "ஸ்ரீலங்கா" என்ற பெயர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதுடன் பாராளுமன்றம் என அழைக்கப்பட்ட சட்ட சபைக்கு புதியதோர் அடையாளப்படுத்தலாக ''தேசிய அரசுப் பேரவை'' என மொழியப்பட்டது. எனினும் முதலாம் குடியரசு அரசியல் யாப்பு அவ் ஆட்சியுடனேயே இல்லாமல் செய்யப்பட்டதென்பது இலங்கையின் அதிரடி அரசியல் வரலாறாகவே நோக்கப்படுகிறது. மேலும் ஆட்சிகள் மாறுகின்ற போதெல்லாம் தமது ஆட்சிக்கு ஏற்ற வகையில் யாப்புக்கள் மாற்றப்படும் என்கின்ற வினை அப்போதே ஆரம்பமாகியது என்பதும் ஓர் கசப்பான உண்மையாகவே பதிவாகியது. ஒரு ஆட்சியில் பல அரசியல் நிபுணர்களினால் ஆலோசிக்கப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு, கருத்தறியப்பட்டு, சுய விமர்சனப்படுத்தப்பட்டு அலசி ஆராய்ந்த யாப்புச் சீர்திருத்த அம்சங்கள் அடுத்த ஆட்சியில் எவ்வித கிலேசமும் இன்றி தூக்கி வீசுகின்ற அவலம் நாட்டுக்கு நல்லதான சமிக்ஞை அன்று.

இந்த அடிப்படைப் பின்னணிகளிலிருந்தே இன்றைய "இலங்கை தேசத்தின் நடைமுறையில் உள்ள இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியல் யாப்பு" 1978 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இதுவே இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு எனவும் அழைக்கப்படுகிறது. 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் தேசிய அரசுப் பேரவையின் 168 தொகுதிகளில் இடம் வாக்களிப்பில் 140 தொகுதிகளில் பெரு வெற்றி வாகை சூடிக்கொண்டது ஐக்கிய தேசியக் கட்சி. இன்று பொதுஜன பெரமுன பெற்ற வெற்றி போன்றே அன்று ஐக்கிய தேசியக் கட்சி மாபெரும் வரலாற்று வெற்றியை பதிவு செய்தது. இதன்மூலம் அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் அமரர் ஜே.ஆர். ஜெயவர்த்தன அவர்கள் புதிய அரசியல் யாப்பான இன்றைய அரசியல் யாப்பை 1978 இல் அறிமுகப்படுத்தினார்.

இவ் யாப்பு அறிமுகத்துக்குப் பின்னர் பெரும் அவலங்கள், பெரும் அழிவுகள், வரலாற்றுத் துயரங்கள் மற்றும் இலங்கைச் சமூகப் பிளவுகள் என காலத்திற்குக் காலம் பல விடயங்கள் அரங்கேறியது. ஐந்து வருடங்களுக்குள் ஓர் யாப்பை முழுமையாக தூக்கி வீசிய வரலாற்றை பதிவு செய்த நாம், 42 வருட கால முதிர்ச்சி கொண்ட அரசியல் யாப்பில் அவ்வப்போதும், ஆட்சி மாற்றம் இடம்பெற்ற போதும் திருத்தங்களையே மேற்கொள்கின்றோம் என்பது மட்டுமே நிதர்சனமாகியுள்ளது. இவ் யாப்பில் திருத்தம் மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்பது விதியல்ல. ஆனாலும் திருத்தங்களே இடம்பெறுகின்றன என்பது ஏன் என நோக்குமிடத்து 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பு ஆட்சி அதிகார வரம்பில் உயர்ந்த நிலைதன்மையை ஆட்சியாளர்களுக்கு மகோன்னதமாக வழங்கக்கூடிய ஓர் சவாரிக் குதிரை போன்றது. அதனால் ஒவ்வொரு ஆட்சியாளரும் அதில் சவாரி செய்ய வேண்டும் என்பதற்காகவே யாப்பில் அவ்வப்போது தமது ஆட்சி அதிகார வரம்பை மேலும் உயர்த்தும் வகையில் திருத்தங்களைச் செய்ய முனை கின்றனர் என்பதே உண்மையாகும்.

## இருபதில் இருபது

2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் உலகஅரக்கன் "கொரோனா" வைரஸ் இலங்கையை ஆக்கிரமித்து முழு நாட்டையும் முடக்கி ஒடுக்கி தந்த வேதனை சொல்லிமாளாது. தொடர்ந்து அதனை எதிர்த்து இரண்டாம் காலாண்டு வரை போராடி ஓரளவு வாழ்நிலையில் நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டு மூன்றாம் காலாண்டுக்குள் தேர்தலை சந்தித்து அதனையும் வெற்றிகரமாக தாண்டி பெருமூச்சு விடுகின்ற இக்கணத்தில் அரசியல் யாப்பில் இருபதாவது திருத்தம் பெரும் பேசுபொருளாகவும் முதன்மை விடயமாகவும் அரசியலை ஆக்கிரமித்து முழு அளவில் சூடு கிளப்பியிருக்கிறது என்றால் மிகையல்ல. நாட்டில் ஆட்சியாளர்கள் அரசியல் யாப்பில் இருபதாவது திருத்தத்தை ஏற்படுத்துவதில் குறியாக செயற்படுவதுடன் அதனை அவர்கள் நிறைவேற்றி வெற்றியடைவர் என்பதும் நடைமுறை சாத்தியமானதாகவே அரசியலில் தென்படுகிறது. அது தொடர்பில் அரச தரப்பு முழு வீச்சில் செயற்படுகிறது. இதேவேளை நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தங்கள் சக்திக்கு உட்பட்டு அதனை எதிர்ப்போம் என சூளுரைத்து நிற்கிறது. எதிர்க்கட்சியினரின் இவ்எதிர்ப்பு என்பது அவர்கள் சார்ந்த அரசியல் தேவைக்குரியதேயன்றி உண்மையாக நாட்டு மக்களின் நலனில் கொண்ட அக்கறைக்கான எதிர்ப்பாக தோன்றவில்லை என்பது அரசியல் அவதானிகளின் கருத்தாகவுள்ளது. மேலும் சிறுபான்மை கட்சிகளும் தமது எதிர்ப்பினை பலமாக பதிவு செய்து நிற்கின்றன என்பதும் அரசியல் சார்ந்த முக்கிய விடயமாகவுள்ளது.

ஏன் இருபதாவது திருத்தம் பூதாகரமாக வெளிவந்து கொண்டிருக்கின்றது என்பது இங்கு சீர்தூக்கி ஆராயப்பட வேண்டிய விடயமாகும். அரசியல் சாசன வல்லுநர்கள், இராஜதந்திரிகள், ஆய்வாளர்கள் போன்றோர் உண்மையில் இருபதாவது திருத்தம் நாட்டுக்கு ஆபத்தானது என பதிவிடுகின்றனர். மேலும் ஜனநாயகம் என்கின்ற மக்கள் ஆட்சியை தகர்த்து சர்வாதிகார ஆட்சியை நவீன வடிவத்தில் நடைமுறைக்கு கொண்டு வரும் என அச்சம் வெளியிடுகின்றனர். மேலும் நாட்டின் ஜனாதிபதிக்கு அதிகார வலுவை அதிகரிக்கும் அட்சய கிண்ணம் இருபதென அடித்துரைக்கின்றனர். அத்துடன் ஜனாதிபதிக்கான எல்லையற்ற அதிகாரம் இதனால் உறுதிப்படுத்தப்பட்டால் மக்களால் தெரிவான பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம் கேலிக்கூத்தாகிவிடும் என்ற சாரத்தில் கருத்துக்கள், விமர்சனங்கள் பதிவாகின்றன.

இக்கருத்துக்கள், விமர்சனங்களுக்கு அப்பால் இருபதாவது திருத்தம் அரசியல் யாப்பில் இடம்பெற்றால் சிறந்த தீர்மானங்களோடு பிணக்கின்றி அபிவிருத்தி மற்றும் வளர்ச்சிகளை அடைவதுசாத்தியமாகும்என்பது அதனை விரும்புகின்ற அல்லது அச்சீர்திருத்தத்தை கொண்டுவர முனைவோரின் கருத்தாக பதிவிடப்படுகிறது. மேலும் புதிய அரசியல் யாப்பு அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்கின்ற கருத்துக்களும் வெளியிடப்படுகின்றன. புதிய அரசியல் யாப்பு அறிமுகம் என்பது உறுதியான விடயம் எனின் ஏன் இருபதாவது திருத்தத்துக்கான அவசரமான முஸ்தீபு என்பதும் இங்கு ஆராயப்பட வேண்டிய விடயமாகவுள்ளது.

எனவே நாட்டிற்கும் மக்களுக்கும் நன்மை பயக்கும் திட்டங்களை, விடயங்களை மக்களால் தெரிவு செய்யப்பட்ட அனைத்து சமூக பிரதிநிதிகளின் ஒத்துழைப்புடனும் புத்திஜீவிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோரின் ஆலோசனைகளை மதிப்பீடுகளுடன் மேற்கொள்வது சாலச் சிறந்தது. அதுவே நீண்ட காலம் பொருந்தக்கூடியதுமாகும். நல்ல விடயங்கள் அரசியல் யாப்பு மாற்றங்களாக உருவாக வேண்டும். காலத்தின் தேவை அவசியம் உணர்ந்த சரத்துக்கள் சட்டங்களாக உருவாக்கப்பட வேண்டும். யாப்புக்களும் சட்டங்களும் நாட்டு மக்களின் நிம்மதியான, அமைதியான, ஐக்கியமான, சமத்துவமான, சகோதரத்துவமான, உரிமை பாதுகாப்புடனான மனித மேம்பட்ட வாழ்க்கைக்கு என்பதை அனைவரும் புரிந்து கொள்வதன் மூலமே நல்ல மாற்றங்கள் விளையும் என நம்புவோம்.

கோவையூர் ஜெயன்




# சோம்பேறிக் கழுதைக்கு கிடைத்த தண்டனை

ஒரு பண்ணையில் ஆண் கழுதையும், பெண் கழுதையும் வளர்ந்து வந்தன.

ஆண் கழுதை கடுமையாக உழைத்து பண்ணைக்குள் கொண்டு செல்ல வேண்டிய சரக்குகளை முதுகில் சுமந்து செல்லும். மாலையில் காய்ந்த புல்லை மேய்ந்து பசியாறும்.

பெண் கழுதை எந்த வேலையும் பார்க்காமல் பசுமையாகக் கிடைக்கும் புல்லைத் தின்றுவிட்டு, தொழுவத்தில் தூங்கிவிடும். இப்படியே வேலை பார்க்காமல் பொழுதை கழித்தது.

ஒருநாள் உழைத்த களைப்புடன் சோர்வாக ஆண் கழுதை வந்தது. ஆண் கழுதையைப் பார்த்து பெண் கழுதை உன்னைப் பார்க்கவே பாவமாக இருக்கிறது என கிண்டல் செய்தது.

என்ன செய்வது உழைத்தால் தான் முதலாளி விடுவார் என்றது ஆண் கழுதை. இதைக் கேட்டதும் பெண் கழுதை சிரித்தது.

ஏன் சிரிக்கிறாய்? அதற்கு பெண் கழுதை பண்ணையாள் வந்து உன் கயிற்றினை அவிழ்த்து விட்டதும், உடனே நீ வேலை செய்யப் போய் விடுவாய். நான் போகமாட்டேன். அப்படியே படுத்திருப்பேன்.

நான் எழவில்லை என்றதும் சாட்டையால் நான்கு அடி அடிப்பான். பிறகு என்னை விட்டு விட்டுச் சென்று விடுவான் நீயும் அதுபோல சண்டித்தனம் செய்து விடு.

உன்னையும் பண்ணையாள் விட்டுவிட்டுப் போய் விடுவான் என அறிவுரை வழங்கியது பெண் கழுதை.

காலைப் பொழுது வேலைக்குச் செல்லும் நேரம் ஆனதும், பண்ணையாள் வந்தான். வழக்கம் போல் ஆண் கழு தையைப் பிடித்துக் கொண்டு செல்ல முயன்றான்.

ஆனால், ஆண் கழுதை படுத்துக்கொண்டு சண்டித்தனம் செய்தது. பண்ணையாள் சாட்டை எடுத்து அடித்தும் பார்த்தான். ஆண் கழுதை எழவில்லை.



பண்ணையாள் முதலாளியிடம் சென்று, ஐயா இந்த ஆண் கழுதை இன்று சண்டித்தனம் செய்கிறது என்றான்.

சரி பரவாயில்லை. இன்றைக்கு ஆண் கழுதைக்கு ஓய்வு கொடுத்துவிடு. தினமும் நன்றாகச் சாப்பிட்டுக் கொழுத்து சும்மா இருக்கும், அந்தப் பெண் கழுதையை அடித்து இழுத்துப் போ என்றார்.

பண்ணையாளும் வந்து ஆண் கழுதை சாப்பிட பசும் புல்லை வைத்துவிட்டு பிறகு, பெண் கழுதையை இழுத்துச் சென்று வேலையில் ஈடுபடுத்தினான்.

கெட்டதை சொல்லிக் கொடுக்கப் போய் தன்னுடைய பிழைப்பே போய் விட்டது என்று வருந்தியது பெண் கழுதை.

**நீதி :**
**சோம்பேறியாக இருத்தல் கூடாது.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்

பொதுவாகக் கோபுரத்தை ஐந்து, பத்து அடுக்குகளாகக் கட்டுவார்கள். பெரிய கோயிலின் நுழைவாயில் கோபுரங்கள் அப்படித்தான் கட்டப்பட்டுள்ளன.

ஆனால் ஸ்ரீவிமானம் தலையிலிருந்து உச்சியிலிருந்து ஒரே சீராக இருக்கிறது. அதில் அடுக்குகளே கிடையாது. உள்ளே கோபுரம் கூடாக இருக்கும்.

கல் அடுக்குகள் எதுவும் பூசுப்பொருள்களால் இணைக்கப்படாமல் இயற்பியல் சமநிலைப் படித் தம் கனத்தைத் தாமே தாங்கியுள்ளன.

(இதே கட்டுமான முறையை ராஜேந்திர சோழன் கங்கைகொண்ட சோழபுரத்தில் பின்பற்றியிருக்கிறார். வேறு எங்கும் இதுபோல் கிடையாது).



கருவறையில் உள்ள மிகப்பெரிய சிவலிங்கம்

கோபுரத்தின் கல் அடுக்குகளைக் கூம்புவடிவத்தில் அடுக்கியதன் மூலமாக உள்ளே உள்ளீடற்ற கூம்பு போன்ற வெற்றிடம் உருவாகி இதனால் மேலே உள்ள அடுக்கின் கனம் குறைந்து உள்ளே காற்றுக்கான இடைவெளியால் சீரான தட்ப வெப்பம் நிலவியது.

கருவறைக்கு மேல், மகா மண்டபம் வழியாகப் படியேறிச் சென்றால் இரண்டாம் தளத்துக்குச் செல்லமுடியும்.

இந்த இடத்திலிருந்து விமானத் தின் உட்புறம் பிரமிட் வடிவில் குவிந்து 13 அடுக்குகளாக உயர்ந்து கடைசியாக 8.7 மீற்றர் பக்க அளவுடைய ஒரு சதுரத்தளத்தை உருவாக்கியிருக்கிறது. இந்தத் தளத்தில் எட்டு நந்திகள் உள்ளன.

விமானத்தினுள்ளே ஏராளமான ஓவியங்கள் உள்ளன. சிதம்பரம் கோயில் நடராஜர், தாடியோடு மாமன்னர் ராஜராஜன், இடுப்பில் பாவாடையும் மேல் போர்வையும் அணிந்த அரசிகள், சட்டை அணி ந்த தளபதிகள்,பூணூல் அணிந்த அந்தணர்கள், மாநிறம் கொண்ட தேவரடியார்கள் என்று அழைக்கப்பட்ட நடன மாதர்கள் என எல்லாமே உயிர் பெற்று எழுந்தது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளன.

பக்தர்கள், இந்தக் கோபுரத்தைத் தூரத்திலிருந்து வழிபடும்போது சதாசிவ லிங்கமாக எண்ணி வணங்குகிறார்கள்.

ஸ்ரீவிமானம் மேலே உள்ள சதுரத்தளம் ஒரே கல்லில் செய்யப்பட்டது என்றும் அது 80 தொன் எடை கொண்டது என்பதும் சாரப்பள்ளம் எனும் கிராமத்திலிருந்து சாரம் கட்டி கோபுர உச்சிக்கு 80 தொன் எடையுள்ள பிரமந்திரக்கல் ஏற்றப்பட்டது என்பன போன்ற தகவல்கள் எல்லாம் தவறானவை.

துண்டுக்கற்களால் கட்டப் பட்டதே ஸ்ரீவிமானம்.

(தொடரும்)








நகைச்சுவைக் கலைஞர் என்.எஸ். கிருஸ்ணருக்கும் இன்றைய நகைச்சுவை கலைஞர்களுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம்?

தேசிய கொள்கையில் தமிழரை விட சிங்களவர்கள் ஒற்றுமையாகச் செயற்படுகிறார்களே?

வெள்ளைக் கொடி விவகாரத்தில் எரிக் சொல்ஹெய்ம் வாய் திறப்பாரா?

**நிஜந்தன் — கொக்குவில்**

**அரச கட்சிகளுக்கு வாக்களித்த மக்கள் பற்றி தங்களது கருத்து?**

தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு காலம் காலமாக வாக்களித்து ஏமாந்தவர்களின் இயலாமையின் வெளிப்பாடே இது.

உமக்கு வாக்களித்த எமக்கு நீர் நம்பிக்கைத் துரோகம் இழைத்து விட்டீர். இதோ பார் உமக்கு செய்து காட்டுகிறோம் என்ற விரக்தியில் கூட அரச கட்சிகளுக்கு வாக்குகள் வீழ்ந்திருக்கலாம்.

அத்தோடு அபிவிருத்தி, வேலைவாய்ப்பு என்ற விடயங்களும் செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன.

வாக்களித்தவரின் நன்மை கருதி அரசியல்வாதிகள் நடப்பார்கள் எனின் தமிழர்களுக்கான தீர்வு எப்போதோ கிடைத்திருக்கும்.

**ஆகாஸ் — எழுதுமட்டுவாழ்**

**பாடசாலைகளில் தமிழ்மொழிக்கு எந்தளவு வகிபங்கு உண்டு?**

தமிழ் விழா கொண்டாடி நான்கு பட்டிமண்டபம் நடத்தி விட்டால் எல்லாம் சரி என்பதுடன் முடிகிறது அவர்களின் பணி.

இதில் தமக்குத்தாமே பட்டம் சூட்டி தமிழ் பணி செய்யும் பவுசுகளை நினைத்தால் சிரிப்புதான் வரும்.

கோயில்களில் கொன்றாக்ற் பேசி கொடுமை செய்து அதன்பின் அதற்கொரு பட்டம் கேட்கும் சிலர் உள்ளவரை தமிழும் தமிழனும் நிமிரமாட்டான். இதுவே நியதி.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**பாராளுமன்றத்தில் இனவாதம் பேசும் சிங்கள அரசியல்வாதிகளை என்ன செய்ய?**

ஒவ்வொரு அரசுகளிலும் காலத்துக்குக் காலம் இனவாதம் கக்கும் அரச நியமங்கள் வழங்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன.

அந்தவகையில் கெஹலிய ரம்புக்வெல, விமல் வீரவன்ச, சரத் வீரசேகர போன்றோரின் செயற்பாடுகளை உன்னிப்பாகக் கவனிக்கக்கூடியதாக உள்ளது.

ஒவ்வொரு காலகட்டத்தில் ஒவ்வொருவர் இனவாதப் பேச்சுக்களைக் கக்கிக் கொண்டேதான் இருக்கிறார்கள்.

அந்தவகையில் இப்போது அந்தப் பணியை சரத் வீரசேகர எடுத்துக்கொண்டார் போலும்.

தமிழருக்கு வரலாறு இல்லை என்று சொல்ல வீரசேகரவுக்கு என்ன உரிமை இருக்கிறது.

இதை நாம் சொன்னால் இனவாதம் என்று குமுறுவார்கள்.

**சதா — கிளிநொச்சி**

**ஒரே கயிற்றில் தூங்கி இறந்த காதலர்கள் பற்றி?**

காதல் புனிதமானது. அந்தப் புனிதக் காதலுக்கு எதிர்ப்பு வரும்போது அந்த எதிர்ப்பை மீறி எதிர்த்தவர்களுக்கு வாழ்ந்து காட்ட வேண்டுமே தவிர இறப்பது முடிவானது அல்ல.

அந்த இருவரும் இறந்து விட்டார்கள். அத்தோடு எல்லாம் முடிந்து விட்டது என நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. அந்த இருவரின் குடும்பங்களின் மனநிலையைக் கொஞ்சம் எண்ணிப்பாருங்கள்.

இந்த உலகம் இருக்கும் வரை அதன்வடு இருந்து கொண்டே இருக்கும்.

எதிர்ப்பென்று இறப்பது காதல் அல்ல. எதிர்ப்பை மீறி வாழ்ந்து காட்டுவதே காதல்.

**வியாசர் பதில்கள்**
**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**

**நேதாஜி — வதிரி**

**தேசிய கொள்கையில் தமிழரை விட சிங்களவர்கள் ஒற்றுமையாகச் செயற்படுகிறார்களே?**

ஒற்றுமை என்பது தமிழரிடத்திலும் பார்க்க சிங்களவர்களிடம் அதிகமாக உள்ளது.

பாராளுமன்றில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி நீ நான் என அடிபடுவார்கள்.

ஆனாலும் தமிழரே இந்த நாட்டின் மூத்த குடி என்பதைக் கேட்டதும் ஆளும், எதிர்கட்சி என்ற பேதம் மறந்து ஒன்று கூடி இனவாதம் பேசுகிறார்கள்.

இதில் மகிந்தவைத் தோற்கடிப்பதற்காய், தமிழர் நாம் விழுந்து விழுந்து வாக்களித்த பொன்சேகா ஒரு படி மேலே சென்று பிரபாகரனுக்கு நடந்ததை தமிழர்கள் மறக்கக்கூடாது எனக்கூறுகிறார் எனின் நாம் என்ன செய்ய முடியும் சொல்லுங்கள்?

**நிலா — சுழிபுரம்**

**நகைச்சுவைக் கலைஞர் என்.எஸ்.கிருஸ்ணருக்கும் இன்றைய நகைச்சுவை கலைஞர்களுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம்?**

என்.எஸ்.கிருஸ்ணன் கலைவாணர் என்ற பட்டத்தைப் பெற்றவர். அவர் அருகில் யாரும் நிற்க முடியாது.

நகைச்சுவை என்ற சொல்லின் அர்த்தத்தை உலகிற்குக் காட்டியவர் என்று கூட அவரைச் சொல்லலாம்.

அதன்பிறகு வந்த நாகேஸ், கவுண்டமணி, செந்தில், வடிவேல், விவேக், சந்தானம், யோகிபாபு போன்றவர்களை அவருடன் ஒப்பிட்டு விட முடியாது.

அப்பேர்ப்பட்ட உன்னத கலைஞன் கலைவாணர் என்.எஸ்.கிருஸ்ணன்.

**கேதீஸ் — கீரிமலை**

**உழைப்பிற்கு ஊதியம் கேட்பது தப்பா வியாசரே?**

உழைப்பாளியின் வியர்வை காயமுன்பு அவனின் உழைப்புக்கான ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

ஒருவேளை அவ்வாறு வழங்கவில்லை எனின் அங்கு முதலாளித்துவம் ஓங்கி நிற்கிறது என்றே பொருள்படும்.

என்னிடம் பணம் இருக்கிறது என்பதற்காய் மற்றவரிடமும் பணம் இருக்கும் என நினைப்பதும்,

எங்கள் வீட்டில் மிதமிஞ்சிய உணவு இருக்கிறது என்பதற்காய் அயல்வீட்டிலும் அடுப்பெரியும் என்று நினைப்பதும் முதலாளி வர்க்கத்திற்கே உரித்தானவை.

**சுதன் — குப்பிழான்**

**வெள்ளைக் கொடி விவகாரத்தில் எரிக் சொல்ஹெய்ம் வாய் திறப்பாரா?**

திருவாய் மலர்வர் என நீர்மட்டுமல்ல நானும் தான்.

ஏன் இந்த உலகே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

திறப்பார் காலம் கைகூடி வருகிறது போலத் தெரிகிறது.

வரட்டும் முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பார்களே. அதுதான் இது போலும்.

## வாழ்வில் முன்னேறு

பெரியவர்களை மதித்து அவரை நாடு
கல்வியை கற்றாய்ந்து முன்னேறு
சமூகத்தை நாடியே ஓடு
தேவைகள் என்னவென்று பாரு
கூட்டாக அவருடனே பாடு
தீமைகளை ஆராய்ந்து தேடு
தீயவரை கூசாமல் சாடு
கொல்லவந்தால் தருவாய் சூடு
சமயநெறி புகட்டும் ஏடு
ஆலயத்தில் தினந்தோறும் கூடு
தானதர்மங்கள் குறையாது போடு
அதன்வழி நின்றால் வாராது கேடு
பொய்மைக்கு போட்டிடுவாய் கோடு
நல்லபடி வாழ்ந்தால் பெறுவாய் வீடு

மாணஷ்தன், அல்வாய்

## பெண்

தரணியில் ஏதோ
தவிப்புடன் பேதையாக
உருவம் கொண்டு
பிரவேசமாகிறாய்
வாஞ்சை கொண்ட
நெஞ்சங்களை சகிப்போடும்
வஞ்சகம் கொண்ட
உறவுகளை பொறுமையோடும்
இலட்சியம் ஒருநாள்
உயிர்பெறும்- தன் இருள்
சூழ்ந்த வாழ்வில் விடியும்
காலை ஒருநாள் தனக்கு
விடிவுகாலமாக அமையும் என
நம்பிக்கையோடு
உணர்வுகளை தனக்குள்ளே
சிறைபிடித்து எல்லை கடந்த
துன்பத்தை சுமந்து செல்கிறாள்

ஆ.நிருஜினி, யா/ சு.ம.க.

## எம் இனத்தின் அழுகுரல்



எம் இனமே உன் விடிவை எதிர்பார்த்துக் காத்திருந்தோம்
உனக்கோர் விடியல் தோன்றுமெனக் காத்திருந்து விடியும் முன் போரகன்றோம்
தேசம் தெளிவு பெறும் என எண்ணி உறவுகளை விட்டுப் பிரிந்தோம்.
தாயக மண்ணில் முன்னுயிராய் இன்னுயிரை நாம் கொடுத்தோம்
இனமொழி ஓங்குமென போரகன்று எம்முயிரை மண்ணில் தொலைத்தோம்
தென்றலிட்ட தமிழ் அமுதம் தான் தோன்றும் என எண்ணி
தேன் சொரியும் தேம்பனையின் தோழமையை நாம் இழந்தோம்
வார்த்தைகள் இல்லை தாயகமே உன் துயர் கூற என்னிடம்

ந.விதுஷன், யா/ கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை

## மூத்தகுடி தமிழ்க்குடி

கவிதைச் சரம்

உலகத்து மூத்த குடி இலங்கையிலே பூத்தகுடி
பண்பாட்டை விதைத்த குடி வரலாற்றில் தளைத்தகுடி
உலகத்து மூத்தமொழி உயர்வான பேச்சுமொழி
உயிரான தமிழ்மொழி–என்றும் உணர்வான தமிழ்மொழி
தமிழ்க்குடியின் தொன்மை தனித்திருக்கும் தன்மை
சிங்களத்தின் வன்மை தமிழை அடிமையாக்கும் வாஞ்சை
சிறுபான்மை என்பதற்காய்– தமிழன் தன்மானம் இழக்க முடியாது
பெரும்பான்மை என்பதற்காய்–சிங்களம் வரலாற்றை மாற்ற முடியாது
ஆதிக்குடி தமிழ்க் குடியே ஆதிமொழியும் தமிழ்மொழியே
ஆணவம் கொள்ளும் எண்ணம் இல்லை அடங்கிப் போகும் வரலாறும் இல்லை
தமிழனாய் பிறந்ததற்காய் தலைகுனிந்து வாழ்வதுவோ
வரலாற்றில் வாழ்ந்த இனம் இலங்கையில் தாழ்ந்திடுமோ
ஆயுதத்துடன் இருந்தபோது அடங்கிப்போன சிங்களம்
நிராயுதபாணியான தமிழனை நிர்க்கதியாக்க முயலுவதோ
ஆண்ட இனம் மாண்டிடுமோ மீண்டும் தமிழ் ஆண்டிடுமோ
மாண்ட உயிர் தியாகத்தில் ஒற்றுமையாய் அணிவகுப்போம்

அராலியூர் ப. தர்மகுமாரன்

## இனமொன்று இருந்தது அதற்கு நீண்ட வரலாறு இருந்தது

ஆண்ட பரம்பரை
அழிவடைந்து
அந்நியர் காலில்
அகப்பட்டுக் கிடக்க
உமக்கு வரலாறு இல்லை
என எகத்தாளமிடுகிறது
பேரினவாதம்

விஜயன் வருகையை
விழாவாய்க் கொண்டாடுவார்கள்
வருகைக்கு முன் வரலாறு
எங்கிருந்தது என அறிவாரோ?

திரிக்கப்பட்ட வரலாறுகளை
திக்கெட்டும் பரப்பி
அருமை பெருமை பேசி
அதிகாரம் காட்டுவதா?
மனிதம், மனிதாபிதானம்!

இனங்களுக்கிடையில்
ஒற்றுமை வேண்டுமென்போர்
இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு
தீர்ப்பு வழங்குவார்களா?

இனமொன்று இருந்தது
அதற்கு நீண்ட வரலாறு இருந்தது
கொடும் போரால் அழிக்கப்பட்டது
அதனாலே இது விளைந்தது

மாவை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல்- 494



## நிகரேது பெண்மைக்கு

கன்னத்தின் ஓரம்
காண்பது கண்ணீரா– இல்லை
கயவரின் கருணையிலாச்
சீண்டலா சித்திரவதையா
சிந்திக்க இனும் மானுடர்க்கு
எண்ணமே எழவில்லையா
நிந்தனையா நித்திலத்தில்
நிகரேது பெண்மைக்கு
நீயுணர்வாய்

த.சிவகாமி
கொக்குவில்

## மௌனத்தின் தேடல் –495



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சாங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
/ எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## முடியாத கண்ணீர்

மகனை இழந்து
மனதினை மருக தவித்திடும்
இந்த தாய்மையின்
கண்ணீருக்கு தகுதியான பதில்
யார் தந்திடுவார்
பத்து மாதங்கள் சுமந்து
பரிவைக் கடந்து
பல வருடங்களாய்
பரிதவிக்கும் தாயின்
சொல்லி முடியாத கண்ணீருக்கு
யார் பதில் தருவார்?
மாற்றங்கள் ஏதுமின்றி
மரணத்தை நோக்கி
பாதைகள் நகர்ந்திடுமோ?

வி.டிலக்ஸன்
யா/ தும்பளை
சிவப்பிரகாச
மகா வித்தியாலயம்

## தாயின் கதறல்

நம் நாட்டில்
போரின் முடிவில்
காணாமலாக்கப்பட்ட
தன் அன்பு
உறவுகளை
எண்ணிக் கதறி
அழும் தாயே!
உன் கண்ணீருக்கு
என்றும்
முடிவில்லையா?
இறைவா– பாவம்
அவள் வாழ்வில்தான்
விடிவில்லையா?

சுப்பிரமணியம்
ஜெயரூபன்
பருத்தித்துறை

## உயிரும் உணர்வும்

ஒப்பற்ற உறவுகளை
ஒப்படைத்து ஆண்டுகள்
பத்துக் கடந்த போதும்
சொத்தென்று நினைத்தவர்களை
திரும்பித் தரக்கேட்டால்
திருப்தி தரும் பதிலில்லை
கண்ணீரும் குறையவில்லை
தண்ணீர் விட்டோ வளர்த்தோம்
சர்வேசா இப்பயிரை
கண்ணீரால் காத்தோம்
கருகத்திருவுளமோவென்றும்
கருத்துச்செறிந்த பாரதி பாடல்
இப்பெரும் துயருக்கும் பொருந்தும்

க.நாகராசா
நுணாவில்

## கண் + அவன் கணவன்

பெண் இல்லா எவ்வுயிரும்
பிறக்குமாமோ அவள்
கண் அவன்
கணவன் என
கருதுவானோ
வண்ணமுற உலகினையே
வாழ்விக்கும் தாயுமாமோ
ஆண் எண்ணத்தில்
ஏன் இனும்
பெண்மைக்கு
இக்கொடுரம்

வை.க.தவமணிதாசன்
நல்லூர்

## நின் வலிமைக்கு ஈடு ஏது?

காவேரி வைகை ஆறுகளாய்
காட்டும் பொறைக்கு
பூமியுமாய்
இவற்றைச் சீற்றத்தால்
எழுகின்ற சூறாவளியும்
இட்டுவைப்பர் பெண் பெயரே
ஏனோ நின்
வலிமைக்கு ஈடாக
விட்டுவைத்த
எதுவுமே இல
பட்டுணரா மானுடர்க்கு இனும்
பட்ட பின்பும்
புரிந்திடுமோ...

தணிகைவாசன்
தாவடி

# அவனின் தியாகம்

**அவளுக்கு வாழ்க்கை அமைத்துத்தர அவன் விலையாகக் கொடுத்த உடலுறுப்பைக் கீறி எடுத்ததனால் ஏற்பட்ட வடு தந்த வலியை மறந்தான். அவனையறியாமலே அவனது கை அந்த இடத்தைத் தடவியது.**

சிறுகதை



குழைத்த சீமெந்துக் கலவையை அள்ளி வாளிக்குள் நிரப்பிக் கொண்டிருந்தான் குமரன். அவனது வயிறு புகைந்து கொண்டிருந்ததால் மனம் அங்கலாய்க்கத் தொடங்கியிருந்தது.

"கடவுளே! இனி புதுக்கலவை போட முந்தி சாப்பாட்டுக்கு வழி விலக வேண் டும். இனியும் பசி வயிற்றோட என் னாலை வேலை செய்ய முடியாது"

கலவையை எடுத்துப்போய் பூச்சு வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மேசனுக்கு அருகிலிருந்த தட்டில் கொட்டி விட்டு நிமிர்ந்தான் குமரன். முதலா ளியின் குரல் கணீரென்று கேட்டது.

"சாப்பாடு வந்திட்டுது. எல்லோரும் வேலையை நிறுத்திப்போட்டு வந்து சாப்பிடுங்கோ"

தன்னையறியாமலே குமரனின் முகம் மலர்ந்தது. அவன் நாசூக்காக மேச னிடம் சாப்பிடுவதற்கு அனுமதி கோரி னான்.

"அண்ணை! குழைச்ச கலவையை பூசிப்போட்டு போய்ச்சாப்பிடுவம் என்ன!"

"அதெல்லாம் நான் பார்த்துப் பூசிப் போட்டு வாறன். நீ இஞ்சை வீணாய் நின்று மினக்கெடாமல் போய் கால் கையை அலம்பிக்கொண்டு வந்து சாப்பிடு. நான் பின்னாலை வாறன்"

தேனாய் இனித்த வார்த்தையை ஜீரணித்தவாறே அவன் அவசர அவசரமாக விரைந்து போய் தனக்குக் கிடைத்த உணவுப் பொதியுடன் ஒரு குந்தில் அமர்ந்து கொண்டான். பொதியைப் பிரிப்பதற்குள் அவனது பெருங் குடலும் சிறுகுடலும் மோதி ஒரே அமர்க்களப்படுத்தி அவனை உபாதைக் குள்ளாக்கிவிட்டன. மளமளவென்று சோற்றைக் குழைத்து வாய்க்குள் திணித்தபின்தான் அவனால் நிதான நிலைக்கு வரமுடிந்தது.

"வீட்டில் அம்மாவும் அக்காவும் என்ன சாப்பிடுவார்களோ. அடி மனதில் ஒரு ஏக்கம் தோன்றியது.

" இந்நேரத்துக்கு நிச்சயமாய் அக்கா சமைச்சிருப்பா. ஆனால் அம்மா சந்தையால வந்த பிறகுதான் சாப்பிடுவினம்" மனம் நினைத்துக்கொள்ள ஒரு அவிழ் மீதமில்லாமல் அவன் சாப்பிட்டு முடித் தான்.

அவனுடைய அம்மா சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்துதான் அவர்கள் இருவரையும் வளர்த்தவள். அப்பாவின் முகம் தெரியாமல் வளர்ந்த பிள்ளை அவன். ஏ.எல். வகுப்புவரை படித்த அவ னால் படிப்பைத் தொடர முடியவில்லை. அம்மாவின் சுமையைக் குறைப்பதற்காக கூலி வேலை செய்கிறான். முப்பது வயதைத் தொட்ட பின்னரும் அக்காவு க்கு ஒரு திருமணம் செய்து வைக்க முடியவில்லையே என்ற ஆற்றாமை அவனுக்கும் அவனது அம்மாவுக்கும் ஒரு நெருடலாகவே அமைந்து இம்சிக்கிறது. அந்தப் பரிதவிப்பின் வெளிப்பா டாக நீண்டதொரு பெருமூச்சு வெளியாகி அவனை ஆசுவாசப்படுத் தியபோது... அவனது கைகள் உண வுப்பொதி சுற்றி வந்த பத்திரிகையை எடுத்துப் பிரிக்க கண்களோ அதில் பொறித்திருந்த செய்திகளை மேய்கின்றன. திடீரென அவனது மனதுக்குள் ஒரு உராய்வு தோன்றி அவனை உசார்படுத்த மீண்டும் அந்த விளம்பரத்தை உற்றுப் பார்த்தான்.

"$O^+$ குருதியுடைய ஓர் இளைஞ னுக்கு அவசரமாக சிறுநீரகம் தேவைப் படுகிறது. தானமாக தர விரும்புவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். அவனதும் $O^+$ குருதிதான். எத்தனை முறை அந்த விளம்பரத்தை வாசித்தானோ... அவனது கண்கள் அந்த இடத்தை விட்டு விலக மறுத்தது. அதில் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண் ணும் பிரசுரமாகி இருந்தது.

"என்னடாப்பா குமரன் பேயறைஞ்ச மாதிரி பேப்பரையே பார்த்துக் கொண்டிருக்கிறாய். வா... வந்து கலவையைப் போடு"

மேசனின் குரல் அவனை உலுப்ப... அந்தப் பத்திரிகையை கவனமாக மடித்து தனது உடைமைகள் வைத்திருந்த இடத்தில் கொண்டுபோய் பத்திரப்படுத்தி விட்டு வந்து வேலையை கவனிக்கத் தொடங்கினான்.

அன்றைய தினம் அவன் வீடு திரும்பும்போது நேரமோ மாலை ஏழரை மணியைத் தாண்டிவிட்டது. அம்மாவும் அக்காவும் பதறிப்போனவர்களாய் வாசலிலேயே காத்திருந்தனர். அவனைக் கண்டதும் அம்மா புலம்பத் தொடங்கி விட்டாள்.

" ஏன் ராசா இவ்வளவு நேரம் செண்டது. நாங்கள் ஏங்கியே போயிட்டம்"

"அம்மா! இண்டைக்கு வேலை முடிய கொஞ்சம் நேரம் போயிட்டுது. அதுதான் சுணங்கிப் போச்சுது.

மனமறிந்து பொய் பேசிய மகனை சந்தேகத்தோடு நோக்கினாள் அன்னை.

அக்கா சுடச்சுட தேநீரைக் கொண்டு வந்து அவன் முன் நீட்டினாள்.

"தம்பி தேத்தண்ணியைக் குடிச்சிட்டு போய்க்குளிச்சிட்டு வா. அக்கா சுடச்சுட புட்டவிச்சு வைக்கிறன் சாப்பிடலாம்.

இப்படியாக அவர்கள் மூவருக்கு மிடையில் இருந்த பாசப்பிணைப்பு வார்த்தைகளாய் வருடிக் கொண்டிருந்தன.

நாட்கள் இரண்டு நகர்ந்து போயின. அன்று காலை வழமைக்கு மாறாக குமரன் வேலைக்குப் புறப்படவில்லை. அம்மா அவனிடம் விசாரித்தபோது அவன் தான் கொழும்பில் போய் வேலை செய்யப் போவதாகக் கூறினான்.

"அம்மா! எங்கட முதலாளி கொழும்பில ஒரு வீடு கட்டப் போறார். அங்கை போய் வேலை செய்தால் கூடின சம்பளம் கிடைக்கும். அதுதான் நான் இண்டைக்கு கொழும்புக்குப் புறப்படுறன்.

அம்மாவும் அக்காவும் விக்கித்து நின்றனர்.

" நீ அங்கை போய் என்னெண்டு சமாளிப்பாய்?"

ஆதங்கத்துடன் அம்மா கேட்டாள்.

"அம்மா நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காதையுங்கோ. எல்லாம் எங்கட முதலாளி பார்த்துக் கொள்ளுவார். நான் கொஞ்சம் கூட உழைச்சால்தான் இந்த வருசமாவது அக்காவுக்கு கலியாணம் செய்து வைக்கலாம்"

மகனின் உறுதி தாயின் கண்களில் நீரை வரவழைத்தது. அதேசமயம் அவனது பொறுப்புணர்ச்சியைக் கண்டு உள்ளம் பூரித்தது.

மகளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டுமென்ற அவாவும் அதேசம யம் ஆற்றாமையும் அவளை வாட்டி வதைப்பது உண்மைதான். சீட்டுப் போட்டு சில நகைகளை மகளுக்காகச் செய்து வைத்திருந்தாள். ஆனால் ரொக்கப் பணமில்லாமல் எந்த மாப்பிள்ளை தான் அவளது கழுத்தில் தாலி கட்டு வான்.

போனவருடம் ஒரு வரன் பொரு ந்தி வந்தது. சங்கக்கடையில் விற்ப னையாளரான அவனுக்குத் திருமணச் சந்தையில் விலையாக பத்து இலட்சம் கேட்டார்கள். அதனால் அந்தச் சம்பந்தம் கிட்டவில்லை. நீண்ட பெருமூச்சை வெளிப்படுத்தி தனது ஆற்றாமையை நொந்து கொள்வதைத் தவிர அவளுக்கு வேறு வழி தெரியவில்லை.

மாதம் ஒன்று உருண்டோடியது. கொழும்பில் இருந்து குமரன் இடையிடையே அலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அம்மாவினதும் அக்காவினதும் நலனை விசாரித்துக் கொள்ளுவான். "அக்காவுக்கு நாங்கள் முந்திப் பேசிய கலியாணத்தை நிச்சயம் செய்யுங்கோ. நான் வீட்டுக்கு வரும்போது காசோடு தான் வருவேன்" என போன வாரம் சொல்லியிருந்தான். அம்மாவும் அவர்களிடம் போய்ப் பேசினாள். எக்காரணத்தைக் கொண்டும் சீதனக் காசில் மாப்பிள்ளை வீட்டார் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை. முடிவாக பத்து இலட்சம் ரொக்கப் பணம் தருவதாக ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

அன்று காலை வீட்டின் முன் ஆட்டோ ஒன்று வந்து நின்றதும் தாயும் மகளும் திடுக்கிட்டவர்களாய் எட்டிப் பார்த்தனர். குமரன் தான் ஆட்டோவிலிருந்து இறங்கி வந்தான். உடல் நலிந்து சோர்ந்து போய் வந்த மகனைப் பார்த்து தாய் ஆதங்கப்பட்டாள்.

"என்ன ராசா! வேலை சரியான கஷ்டமோ? நல்லாய்இளைச்சுப் போய் வந்திருக்கிறாய்?"

"அம்மா! கஷ்டப்பட்டு உழைச்சால் தான் காசை சம்பாதிக்கலாம். இப்ப நான் காசோடதான் வந்திருக்கிறன். உடனே அக்காவுக்கு கலியாணம் செய்து வைக்க வேணும். இனியும் பிந்தக்கூடாது. அவ வுக்கு வயசும் ஏறிக்கொண்டே போகுது.

மகனது பொறுப்புணர்ச்சி கண்டு தாய் மனம் நெகிழ்ந்தாள். அக்கா, தம்பியின் நலிந்த உடலைக் கண்டு இரக்கத்துடன் அவனுக்கு முட்டைக் கோப்பி கொண்டு வந்து கொடுத்தாள்.

என்னதான் திடகாத்திரமான உணவுகளாக முட்டை, பால், சூப், ஈரல், சத்தான பால்மா வகைகள் என அவர்கள் எனக்குத் தந்தபோதிலும் வீட்டில வந்து குடிக் கிற இந்த முட்டைக் கோப்பியின் சுவைக்கு அது ஈடாகாது.

மனதில் நினைத்துக் கொண்டவன் ஆவலோடு கோப்பியை ரசித்துக் ருசித்துப் பருகினான். கரிசனையுடன் அக்கா சமைத்துப் போட்ட சாப்பாடு அவனது உடலுக்கு வலுச்சேர்க்க அவன் உடல் நிலை தேறினான்.

நல்லதொரு சுபமுகூர்த்தத்தில் அவனது அக்காவின் கழுத்தில் தாலி ஏறியது. அம்மாவும் குமரனும் கண்களைத் துடைத்துக்கொண்டனர். ஆனந்தக் கண்ணீர் கண்களை மறைக்க மாப்பிள்ளைத் தோழனாய் நின்றிருந்த குமரன் புதுமணத் தம்பதிகளை மனமார வாழ்த்தினான்.

**"ஈருடலும் ஒருயிருமாய் இனிதே இல்வாழ்வில் இணைந்து**
**பதினாறும் பெற்று பல்லாண்டு காலம் வாழவேண்டும்"**

பூரிப்பினால் அக்காவின் முகம் பிரகாசித்தது. அவளது முகமலர்வில் அவன் தன்னை மறந்தான். அவளுக்கு வாழ்க்கை அமைத்துத்தர அவன் விலையாகக் கொடுத்த உடலுறுப்பைக் கீறி எடுத்ததனால் ஏற்பட்ட வடு தந்த வலியை மறந்தான். அவனையறியாமலே அவனது கை அந்த இடத்தைத் தடவியது. இதமான நெருடலினால் இதயம் பூரித்துப் போனது.

**மலரன்னை**

# இன்றைய பார்வையில்...

# இந்திய - இலங்கை உடன்படிக்கை

-கேணல்.ஆர்.ஹரிகரன்-



> இந்திய பிரதமரான மோடி, தமிழர்கள் பிரச்சினைகளை 13 ஆவது சாசனத் திருத்தத்தின் அனுசரணையுடன் தீர்க்கத் தயார் என்பதில் தெளிவாய் இருக்கிறார். அதேசமயத்தில், தமிழ்த்தேசிய கூட்டணி வடமாகாணத்தில் ஆட்சி புரிய கிடைத்த வாய்ப்பை மக்களின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்யாமல் தவறியது இந்தியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கும் என்பது என் கணிப்பு.

இலங்கையில் புதிய அரசொன்றை வரைவதற்கான செயன்முறைகளில் ராஜபக்ஷ அரசாங்கம் இறங்கியிருக்கிறது. முழுமையான புதிய அரசியலமைப்பொன்றை கொண்டு வருவதற்கு முன்னதாக முன்னைய நல்லாட்சி அரசாங்கம் 2015 ஆம் ஆண்டில் கொண்டுவந்த 19 ஆவது திருத்தத்தை நீக்கிவிட்டு ஜனாதிபதிக்கு முழுமையான அதிகாரங்களை மீண்டும் வழங்குவதற்கு வகை செய்யக்கூடிய 20 ஆவது திருத்தச் சட்டமூலத்தை அரசாங்கம் முன்வைத்திருக்கிறது.

அதுபற்றிய அரசியல் வாதப்பிரதிவாதங்கள் இலங்கையில் தீவிரமாக மூண்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்நிலையில், இலங்கையில் மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு வழிவகுத்த அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் பெருமளவு மாற்றங்களை செய்வதற்கு அல்லது முற்றுமுழுதாக நீக்குவதற்கு ராஜபக்ஷாக்களின் அரசாங்கம் முயற்சிகளில் இறங்கக்கூடும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது. ஒற்றையாட்சியை கொண்ட இலங்கையில் இருக்கக்கூடிய அதிகாரப் பரவலாக்கலுக்கான ஒரேயொரு ஏற்பாடாக விளங்கும் மாகாண சபைகளை அரசாங்கம் சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளின் வலியுறுத்தல்களுக்கு இணங்கி, இல்லாமல் செய்துவிடக்கூடும் என்று தமிழர்கள் மத்தியிலும் தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியிலும் அச்சம் தோன்றியிருக்கிறது.

மாகாண சபைகள் இலங்கையில் அறிமுகப் படுத்தப்படுவதற்கு வழிவகுத்த 33 வருடங்களுக்கு முன்னரான 1987 இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் தற்போதைய நிலை குறித்து குறிப்பாக இந்தியா அதுபற்றி கொண்டிருக்கக்கூடிய இன்றைய நிலைப்பாடு குறித்து பரவலான கருத்துகள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு அரசியல் இணக்கத்தீர்வு ஒன்றை காணும் நோக்கில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட காரணத்தினால் 13 ஆவது திருத்தத்தில் ஏற்கனவே இருக்கும் அதிகாரங்கள் பலவற்றை குறைப்பதற்கு அல்லது அதை முற்றுமுழுதாக நீக்கி விடுவதற்கு ராஜபக்ஷாக்களினால் முன்வைக்கப்படக்கூடிய முயற்சிகளை டில்லி தடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பை இலங்கை பிரதான தமிழ் அரசியல் கட்சிகள் கொண்டிருக்கின்றன. இந்தியாவுக்கு இது விடயத்தில் தார்மீகக் கடப்பாடு இருப்பதாக வாதாடுகின்ற அந்தக் கட்சிகள், தமிழர்களுக்கு பாதகமான முறையில் அரசாங்கம் இது விடயத்தில் செயற்படுவதற்கு அனுமதிக்காது என்றும் நம்புகின்றனர்.

அதனால், ராஜீவ் காந்தியினால் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கை தொடர்பில் இன்றைய இந்தியப் பிரதமர் மோடி தலைமையிலான பாரதீய ஜனதாக் கட்சி அரசாங்கம் எத்தகைய நிலைப்பாட்டை கொண்டிருக்கிறது என்பதை அறிவது முக்கியமான ஒன்றாகும்.

ஈழத்தமிழர் இனப்பிரச்சினையில் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் அன்றைய - இன்றைய வகிபாகம் என்ற தொனிப்பொருளில் அண்மையில் கனேடிய தமிழர் மாமன்றம் இணையத்தளம் வழியாக நடத்திய கலந்துரையாடலில் பிரமுகர்களினால் வெளியிடப்பட்ட கருத்துகள் கவனத்தை ஈர்ப்பவையாக இருந்தன.

இலங்கையின் வடக்கு - கிழக்கில் இந்திய அமைதி காக்கும் படையினர் நிலைகொண்டிருந்த வேளையில், இந்திய இராணுவ புலனாய்வு அதிகாரியாக பணியாற்றிய கேணல் ரமணி ஹரிகரனும் அந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டு தனது கருத்துகளை முன்வைத்தார். அந்த கருத்துகள் கீழே தரப்படுகின்றன.

தெற்காசியாவில் காலனி ஆதிக்கம் முடிந்த பிறகு வளர்ந்து வரும் இந்திய-இலங்கை நாடுகளின் உறவில், 1987 ஜூலை 29 ஆம் திகதி கையெழுத்தான இந்திய - இலங்கை உடன்பாடு (ஆங்கிலச் சொல்லான **Accord** தமிழாக்கம் ஒப்பந்தம் அல்ல என்பது என் கருத்து), மிகப் பெரிய திருப்புமுனை என்று கூறலாம். அதற்கு எடுத்துக்காட்டு இந்த கலந்துரையாடலே ஆகும். ஏனெனில், அந்த உடன்பாடு கையொப்பமிட்ட 33 ஆண்டுகளுக்கு பிறகு, அது ஈழத் தமிழர் இனப் பிரச்சினையில் ஏற்படுத்திய தாக்கத்தை, இன்று நாம் கலந்துரையாட இருக்கிறோம்.

இதில் பேச, நான் ஏன் அழைக்கப்பட்டேன் என்பது எனக்கு புரியாத கேள்வியாய் இருக்கிறது. ஏற்கனவே கடந்த 16 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை - இந்திய உறவை பல கோணங்களில் விமர்சித்து வருகிறேன். அவற்றை 750விட அதிகமான பதிவுகள் கொண்ட எனது வலைத்தளத்தில் காணலாம். அவை, பெரும்பாலும் ஆங்கிலத்தில் உள்ளன. ஏனெனில், என் தமிழ்க் கட்டுரைகளை பிரசுரிக்க தமிழ் ஊடகங்கள் காட்டிய தயக்கமே காரணம்.

இந்திய - இலங்கை உடன்பாடு கையொப்பமான போது, உலக சூழ்நிலை சோவியத் - அமெரிக்க பனிப்போரின் முடிவை நெருங்கி இருந்தது. ஆகவே, பன்னாட்டு அரசியல், வெளியுறவு மற்றும் பாதுகாப்பு சூழ்நிலையின் அழுத்தத்தையும், இலங்கை தமிழ் மக்களுக்கும் ஈழப் போராளிகளுக்கும் இந்தியா அளித்த உதவியின் தாக்கத்தையும் அந்த உடன்பாட்டில் காணலாம்.

அந்த உடன்பாடு நீர்த்துப் போனதாக பலர் நினைக்கின்றனர். அதில் ஓரளவு உண்மை உள்ளது. ஏனெனில் கடந்த 33 ஆண்டுகளில், பசுபிக் - இந்தியப் பெருங்கடல் பகுதியில் வளர்ந்து வரும் சீனாவின் வலிமை, பாதுகாப்பு சூழ்நிலையில் பெரும் மாற்றங்களைத் தோற்றுவித்துள்ளது. இந்த பின்னணியில் நாம் அந்த உடன்பாட்டை இன்று விமர்சிக்கிறோம் என்பதை நினைவில் கொள்ள வேணும்.

மேலும் உடன்பாட்டுக்குப் பின்னர், சென்ற 33 ஆண்டுகளில் நமக்கு ஏற்பட்ட அனுபவங்களின் பின்னணியில் நாம் அந்த உடன்பாட்டை மதிப்பீடு செய்கிறோம். அந்த உடன்பாடு வெற்றியடைந்ததா? அல்லது தோல்வியடைந்ததா? என்று பல மேடைகளில் என்னிடம் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. வெளியுறவு உடன்பாடுகள் ஒரு கிரிக்கெட் விளையாட்டல்ல. அவற்றின் வெற்றியும் தோல்வியும் அந்நாட்டு மக்கள் அந்த உடன்பாட்டை தங்களது குறிக்கோள்களை அடைய எவ்வாறு உபயோகித்தார்கள் என்பதைப் பொருத்ததாகும்.

இந்திய-இலங்கை உடன்பாடு கையொப்பமான் தன் பின்னணி யாவருக்கும் தெரிந்ததே. இலங்கைத்தமிழர் தமது அடிப்படை கலாசார, மொழி, நெடுங்காலமாக வசித்துவந்த பிரதேசங்கள் மற்றும் குடியுரிமை ஆகியவற்றை இந்தியாவின் வேண்டுகோளுக்கு இணங்க இலங்கை அரசு நெறிப்படுத்த ஒப்புக்கொண்டதற்கு அந்த உடன்பாடே காரணமாகும்.

அவற்றில் சிலவற்றை, இலங்கை அரசு, 13 ஆவது அரசியல் சாசனத் திருத்தப்படி நிறுவப்பட்ட மாகாண சபைகள் மூலம் நிறைவேற்றியது. ஆனால், அவை இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. இதற்கு உடன்பாட்டின் குறைபாடுகளை விட அதை வழிநடத்திய அரசியல் ஆளுமையே காரணமாகும். ஆகவே, இன்றுவரை 13 ஆவது அரசியல் சாசனத்திருத்தம் ஒன்றே, ஈழத் தமிழருக்கு ஓரளவு சுய ஆட்சி உரிமையை அளித்துள்ளது.

(தொடர்ச்சி 15 பக்கம் பார்க்க...)

# இலங்கை அரசியலும் அரசியலமைப்புத் திருத்தங்களும்

**கடந்தவார தொடர்ச்சி...**

அண்மைக்காலமாக 20 ஆவது அரசியலமைப்புத் சீர்திருத்தம் பற்றி அதிகம் பேசப்பட்டுக்கொண்டிருக்கிறது. இவற்றுக்கு மேலதிகமாக கடந்த நல்லாட்சி அரசிலும் சரி இன்று. ஆட்சியமைத்துள்ள பொதுஜன பெரமுன அரசாங்கத்திலும் சரி புதிய அரசியல் திட்டமொன்றை உருவாக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன அல்லது மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தக் கட்டுரைத் தொடரிலே இலங்கையின் அரசியல் யாப்பில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களையும் அவற்றுக்கான பின்னணிகள், அவற்றில் காணப்படும் சாதக, பாதக விடயங்கள் மற்றும் புதிய திருத்தம் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைப் பண்புகளையும் பற்றி சுருக்கமாக பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

### ஏழாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் [04.10.1983]

ஆறாவது திருத்தம் மேற்கொள்ளப்பட்டு மிகக் குறுகியகால இடைவெளிக்குள்ளேயே அதாவது இரண்டுமாத காலப் பகுதிக்குள்ளேயே மீண்டுமொரு அரசியலமைப்புத் திருத்தத்தை அரசாங்கம் கொண்டுவந்தது. இலங்கையிலிருந்த 24 நிர்வாக மாவட்டங்களை இத் திருத்தம் 25 நிர்வாக மாவட்டங்களாக மாற்றியது. இதன்மூலம் 25 ஆவது புதிய நிர்வாக மாவட்டமாக கிளிநொச்சி சேர்த்துக் கொள்ளப்பட்டது.

### எட்டாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் [06.03.1984]

இந்த அரசியலமைப்புத் திருத்தமானது அரசியல் காரணங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு திருத்தமாகும். இதன் பிரதான நோக்கம் முன்பு அரச சட்டத்தரணிகளாக இடம்பெற்றுவந்த பதவிகளுக்கு ஜனாதிபதி சட்டத்தரணிகளை நியமிக்கும் நடைமுறை கொண்டுவரப்பட்டமையாகும்.

### ஒன்பதாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் [24.08.1984]

அரச ஊழியர்கள் மீதிருந்த வரையறைகள் இதன்மூலம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டன.

### பத்தாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் [06.08.1986]

இந்தத் திருத்தத்தின் மூலம் அவசரகால சட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதில் இருந்து வந்த தடைகள் நீக்கப்பட்டன. மேலும் நாட்டில் வளர்ச்சியடைந்து வந்த ஆயுத மோதல்களைக் கட்டுப்படுத்துவதில் அரசபடைகள் எதிர்நோக்கிய பல கஷ்டங்களை நீக்குவதே இந்தத் திருத்தத்தின் நோக்கமாகும். எவ்வாறாயினும் அவசரகாலச் சட்டத்தை அரசு ஆயுதக் குழுக்களை வேட்டையாடப் பயன்படுத்தியதாக பாரிய விமர்சனத்திற்கு அரசு முகம் கொடுத்தது.

### பதினொராவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் [06.05.1987]

இந்தத் திருத்தத்தின் மூலம் நாட்டினுடைய நீதிமன்றக் கட்டமைப்பில் பல மாற்றங்கள் செய்யப்பட்டன.

### பன்னிரெண்டாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

இந்தச் சீர்திருத்தம் முன்வைக்கப்பட்ட போதிலும் பாராளுமன்றத்தால் அது அனுமதிக்கப்படவில்லை.

### பதின்மூன்றாவது அரசியல் யாப்புச் சீர்திருத்தம் [14.11.1987]

இலங்கையின் அரசியல் வரலாறு என்பது ஒரு அமைதியான தெளிந்த நீரோடை போலல்லாமல் அது திடீர் அரசியல் திருப்பங்களும் ஆச்சரியங்களும் நிறைந்ததாகக் காணப்படுகின்றமை கண்கூடு. இவ்வாறான திருப்பங்களுக்கும் ஆச்சரியங்களுக்கும் காரணமாக அமைகின்ற மூலகாரணி இலங்கையில் நீண்ட காலமாக புரையோடிப் போய் இன்றுவரையும் தீர்க்கப்படாமல் காணப்படுகின்ற இனப்பிரச்சினை என்பது நிதர்சனமான ஒன்று. இலங்கையின் அரசியலமைப்பில் முன்வைக்கப்பட்ட 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் அவ்வாறானதொரு இனப்பிரச்சினைத் தீர்வாக முன்வைக்கப்பட்டதொன்றாகும். ஆயினும் அது எவ்வளவுதூரம் தனது குறிக்கோளை அடைந்தது என்பது ஒரு கேள்விக்குறியே.

இலங்கையின் நடைமுறையிலுள்ள அரசியல் திட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்களில் அதிகளவு முக்கியம் வாய்ந்ததும் அதிக விவாதத்திற்குட்படுத்தப்பட்ட திருத்தமாக 13ஆவது அரசியல் திட்டத் திருத்தம் அமைகின்றது. அத்துடன் நீண்டதொரு யாப்புச் சீர்திருத்தமாகவும் இத்திருத்தம் காணப்படுகின்றது. நாட்டினுடைய சகல தரப்பினராலும் குறைகூறப்பட்ட, குறைகூறப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு யாப்புச் சீர்திருத்தமாகவே இது நோக்கப்படுகின்றது. குறிப்பாக தமிழ்த் தரப்பினரைப் பொறுத்தளவில் ஒரு கையால் சிறிதளவு அதிகாரங்களைக் கிள்ளித் தெளித்து விட்டு மறுகையால் அதனைப் பறித்துக் கொள்ளும் ஒரு தந்திரோபாயப் பொறிமுறையுள்ள ஒரு யாப்புச் சீர்திருத்தமாகவே இத் திருத்தம் நோக்கப்பட்டது.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திற்கு முன்பிருந்தே இலங்கையின் இரண்டு பிரதான இனக்குழுக்களான சிங்களவர்-தமிழர்களுக்கிடையே நிலவிவந்த பிரச்சினைகளுக்குத் தீர்வாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் அவை தமிழர் தரப்பினரின் பிரச்சினைகளுக்கு ஒரு முழுமையான நிரந்தரத் தீர்வாக அமையாததால் அவை பயனற்றுப்போயின. அதிகாரப் பரவலாக்கல் மூலமே இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்று தமிழர் தரப்பின் திடமான நம்பிக்கையாக இருந்து வந்திருந்தபோதிலும் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்பட்ட தீர்வு முயற்சிகளில் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அதிகாரப் பரவலாக்கல் என்னும் விடயம் கையாளப்பட்டிருக்கவில்லை.

1931 இல் டொனமூர் குழுவினர் கச்சேரியின் கடமைகளை பரவலாக்குவதற்காக பிரதேச சபைகள் அமைக்கப்பட வேண்டுமென சிபார்சு செய்தனர். அத்துடன் அக்குழுவின் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகக் கடமைகள் சிலவற்றை இடமாற்றுவதற்கு ஒவ்வொரு மாகாணத்திற்கும் மாகாண சபை அமைக்கப்பட வேண்டுமென்ற ஆலோசனையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 1955 இல் சொக்ஸி ஆணைக்குழு பிரதேச சபைகள் அமைக்கப்பட வேண்டும் என்று சிபார்சு செய்தபோதிலும் அதுவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 1957 இல் பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் பிரதேச சபைகள் அமைக்கப்பட வேண்டுமென்ற சிபார்சும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. 1965 இல் டட்லி-செல்வா ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட மாவட்ட சபைகளும் நிறைவேற்றப்படவில்லை. 1977 இல் ஆட்சியமைத்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் 1980 இல் மாவட்ட சபைகளை உருவாக்கியபோதிலும் போதியளவு அதிகாரங்களும் நிதிவளமும் இன்மையால் அவை மிகவிரைவில் செயலற்றுப் போயின. அந்தவகையில் இலங்கையில் 1980களின் பின்னர் இலங்கையில் தமிழ் இளைஞர்களின் ஆயுத வழிப் போராட்டம் வலுவடையத் தொடங்கியது.



இந்தச் சூழ்நிலையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு இலங்கை அரசாங்கம் தமிழ் தலைவர்களுடனும் இந்திய அரசாங்கத்துடனும் 1984 ஆம் ஆண்டு தொடக்கம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாக முன்வைக்கப்பட்ட திட்டமே மாகாண சபைகள் அமைப்பாகும். 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி செய்துகொண்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் மாகாணசபைகள் மூலம் அதிகாரங்களைப் பகிரும் பொறிமுறை உருவாக்க முயற்சிக்கப்பட்டது.

இங்கு நாம் கவனிக்க வேண்டியது அதிகாரப் பகிர்வுக்கும் அதிகாரப் பரவலாக்கத்திற்குமிடையிலான வேறுபாட்டையாகும். அதிகாரப் பரவலாக்கல் என்பது மத்திய அரசாங்கத்திலிருந்து சில அதிகாரங்களை இடமாற்றம் செய்வதாகும். மறுபுறத்தில் அதிகாரப்பகிர்வு என்பது ஒரு உயர்ந்த அரசியல் அதிகாரத்திலிருந்து அதிகாரங்களை ஒரு அதிகாரசபைக்கு கையளித்தலைக் குறிக்கின்றது. இங்கு அதிகாரப்பகிர்வு என்பது ஒரு தற்காலிகமாக அதிகாரத்தை வழங்கும் ஒரு செயற்பாடேயாகும். ஏனெனில் அதிகாரத்தை வழங்கிய அதிகார சபை அல்லது நபர் அவ்வதிகாரத்தை மீளப் பெற்றுக் கொள்ள முடியுமாகின்றது. மாகாண சபைகளைப் பொறுத்தமட்டில் தமிழ்த் தரப்புக்கள் மாகாண சபைத் தமிழ் மக்களுக்கு சுயாட்சி அதிகாரங்களை வழங்கவில்லை என்ற அடிப்படையில் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் இயக்கங்களுள் பிரதான அமைப்பாகச் செயற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மாகாண சபைகளையும் இலங்கை- இந்திய சமாதான உடன்படிக்கையையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

### மாகாண சபை அமைப்பின் குறைபாடுகள்

மாகாண சபை பற்றிய விமர்சனங்களை முன்வைப்போர் அதுதொடர்பில் இரண்டு விதமான குறைபாடுகளை இனங்காணுகின்றனர்.

1. மாகாணசபைகளின் அலகு
2. அதிகாரங்கள்

13 ஆவது திருத்தச்சட்டமானது நடைமுறையிலுள்ள எல்லைகளே மாகாண சபை அதிகாரம் செலுத்தும் எல்லைகளாக அமைய வேண்டும் எனக்குறிப்பிடுகின்றது. ஆனால் தமிழர் தரப்புக்கள் வடக்கு-கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைத்து தனியொரு மொழிவாரி அலகாக மாற்றவேண்டுமென்ற நிலைப்பாட்டில் இருந்தன.

மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பொறுத்தளவில் அவ்வதிகாரங்கள் போதுமானவையல்ல என்பதே தமிழர் தரப்பின் நிலைப்பாடாக எப்போதும் இருந்து வந்துள்ளது. மாகாண சபை அதிகாரங்களைப் பொறுத்தவரை பின்வரும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

1. ஆளுநருக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்ட அதிகாரங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சருக்கும் அமைச்சர்கள் மற்றும் சபைக்குமே வழங்கப்பட வேண்டும்.
2. மாகாண சபைச் சட்டப்படி ஜனாதிபதி மாகாண சபைகளை இடைநிறுத்தம் செய்யவும் அல்லது அவற்றின் அதிகாரங்களை கையேற்கவும் முடியும். இவ்வதிகாரங்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்படக் கூடாது.
3. ஆளுநருடைய அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும்
4. மாகாண சபைகளுக்கு பூரண சட்டமாக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.
5. காணி பற்றிய கொள்கைகள் எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவையல்ல. 1988 ஆம்ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இந்திய அரசாங்கத்திற்கு பின்வரும் விடயங்களை தெரிவித்தது.

1. மாகாணசபைகளுக்கு அதிகளவு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.
2. வடக்கு-கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்பட வேண்டும்

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒற்றையாட்சி முறைக்குள் ஒரு தீர்வாகக் 13 ஆம் அரசியல் சட்டத் திருத்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறை ஒரு வெற்றிகரமானதொரு முறையாக அமையவில்லை என்பதே பலரது விமர்சனமாகும். இலங்கை அரசியல் திட்டத்தில் வெளிநாடு ஒன்றின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தமும் இதுவாகும். இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்கும் இந்த மாகாண சபை முறைமைக்கும் மக்கள் விடுதலை முன்னணி உட்பட பல சிங்களக் கட்சிகளும் அமைப்புக்களும் கடுமையான எதிர்ப்பினை வெளியிட்டன. மக்கள் விடுதலை முன்னணி மக்களை இந்திய உற்பத்திப் பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டாம் என மக்களை அறிவுறுத்தி தனது இந்திய எதிர்ப்பை வெளிவிட்டது. அந்தக் காலத்தில் தென்னிந்திய திரைப்படங்கள்கூட இலங்கையில் வெளிவருவதற்கு மக்கள் விடுதலை முன்னணி தனது எதிர்ப்பை வெளியிட்டமை வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். (தொடரும்...)

**பிரணவன்**







**“பூனையின் பற்களைப் பற்றிச் சுண்டெலியிடம் கேட்டால், ‘ஐயோ... அது எமனின் குடியிருப்பு’ என்று பயந்தபடி சொல்லும். அதே கேள்வியை ஒரு குட்டிப் பூனையிடம் கேட்டால், அவை எங்களைப் பாதுகாக்கிற கவசம்’ என்று சொல்லும்”**

ஏப்ரல் 12, 2015. அன்றைக்கு பாரிஸ் நகரில் நடந்த மாரத்தான் ஓட்டம் உலகின் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்து போனது. ஒவ்வோர் ஆண்டும் உலகின் பல மூலைகளில் மாரத்தான் பந்தயம் நிகழ்ந்து கொண்டு தானிருக்கிறது. பாரிஸில் நடந்த அந்தப் பந்தயம் மட்டும் உலகின் கவனத்தை ஈர்த்தது ஏன்? காரணம், அதில் கலந்து கொண்ட ஒரு பெண்.

அவர் பெயர் சியாபதோசானே (SiabatouSanneh), வயது 43. ஆபிரிக்கக் கண்டத்திலிருக்கும் காம்பியா நாட்டிலிருந்து வந்திருந்தார். சுமார் 42 கி.மீதூர மாரத்தான்... எல்லோரும் ஓடிக்கொண்டிருக்க, சியாபதோ மட்டும் நடந்து கொண்டிருந்தார். அவர் தலையில் ஒரு பிளாஸ்டிக் கேன். அதில் 22 லீற்றர் தண்ணீர் இருந்தது. அதுமட்டுமல்ல, அவர் கழுத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த அட்டையில் ஒரு வாசகம் எழுதப்பட்டிருந்தது... “ஆபிரிக் காவில் பெண்கள் தண்ணீருக்காக இவ்வளவு தூரம் நடக்க வேண்டியி ருக்கிறது. இந்த தூரத்தைக் குறைக்க எங்களுக்கு உதவுங்களேன்.’

அன்றைக்கு சியாபதோ மாரத்தான் போட்டியை முழுமையாக முடிக்கக் கூட இல்லை. சுமார் இரண்டு மணி நேரம் நடந்திருப்பார். அதற்கும் பத்திரிகையாளரிடம் காரணம் சொன்னார்... “இன்னிக்கி எடை கொஞ்சம் அதிகமா இருந்தது. அதான் நடக்க முடியலை.”

ஏழு வயதிலிருந்து தண்ணீருக்காக ஐந்து மைல்தூரம் நடப்பது சியாபதோவுக்குப் பழகிவிட்டிருந்தது. குடிப்பதற்கும் சமைப்பதற்கும் துணி துவைப்பதற்கும் தேவைப்படும் தண்ணீருக்காக ஒரு நாளில் ஒரு முறையல்ல... பலமுறை அவர் அத்தனை மைல் தூரம் நடக்க வேண்டியிருந்தது. “இதுதான் எங்கள் தினசரி வாழ்க்கை. தண்ணீர் எடுத்து வருவதைத் தான் நாள் முழுக்கச் செய்து கொண்டிருக்கிறோம். முக்கியமாகச் சொல்ல வேண்டுமென்றால், மழை நாள்கள் மோசமானவை. தண்ணீர் சுத்தமானதாக இருக்காது. அதனாலேயே குழந்தைகளுக்கு ஜுரம், வயிற்றுப் போக்கு என என்னென்னவோ வந்து விடும்” என்று மனம் வெதும்பிச் சொன்னார் சியாபதோ.

அன்றைக்கு அந்தப் பெண்மணி எடுத்த ‘முயற்சிக்குக் கிடைத்தது வெற்றி. உலகின் பல மூலைகளிலிருந்தும் நிதி உதவிகள் குவிந்தன. “வாட்டர்ஃபார் ஆபிரிக்கா” என்ற அமைப்பு நிதி திரட்டி, உதவ முன்வர, தண்ணீருக்கு வழி பிறந்தது. காம்பியாவிலிருக்கும் எத்தனையோ பெண்கள் சியாபதோவால் பலனடைந்தார்கள். சியாபதோவின் வீட்டிலிருந்து சில அடிகள் தூரத்திலேயே அடிகுழாய் வந்து விட்டிருந்தது.

தண்ணீர் அத்தியாவசியமானது என்று தெரிந்திருந்ததால் தான் அப்பர் பெருமான்‘ மூரிமுழங்கொலி நீரானான் கண்டாய்’ என்று பாடினார். அதாவது, இறைவனே இடியும் மின்னலும் மழையுமாக இருக்கிறார். மாணிக்கவாசகர் விண்ணிலும் மண்ணிலும் காற்றிலும் நீரிலும் நெருப்பிலும் இறைவனைப் பார்த்தார்.

**‘விசும்பின் துளிவீழின்**
**அல்லால் மற்றாங்கே**
**பசும்புல் தலை காண்பு அரிது’**

என்றார் திருவள்ளுவர். மழை பெய்யவில்லையென்றால் பூமியில் பசும்புல்லைக் கூடப்பார்க்க முடியாது. தானமும் தர்மமும் நடைபெறாது.

“உலகம் நல்லதா... கெட்டதா?” ஒரு ஞானியிடம் இந்தக் கேள்வியைக் கேட்டான் ஒருவன்.

ஞானி “பூனையின்பல் நல்லதா... கெட்டதா?” என எதிர்க்கேள்வி கேட்டார்.

உண்மை இதுதான். பூனையின் பற்களைப் பற்றிச் சுண்டெலியிடம் கேட்டால், ‘ஐயோ... அது எமனின் குடியிருப்பு’ என்று பயந்தபடி சொல்லும். அதே கேள்வியை ஒரு குட்டிப் பூனையிடம் கேட்டால், ‘பூனையின் பற்களா... அவை எங்களைப் பாதுகாக்கிற கவசம்’ என்று சொல்லும். தன் கூர்மையான பற்களால், பாதிப்பு ஏற்படாமல், மெதுவாகக் குட்டிப் பூனையை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குத் தூக்கிச் செல்வது தாய்ப் பூனையின் பாசம். உலகமும் இப்படித்தான். நன்மையே நடைபெற வேண்டும் என்றால், இயற்கையின் ஒத்திசைவு நமக்குத் தேவைப்படுகிறது.

தண்டியடிகள் என்ற நாயனார் திருவாரூர் கமலாலயத்தின் குளத்தைத் தூர்வாரினார். அவரை அந்தப் பணியைச் செய்யவிடாமல் தடுத்தார்கள் சிலர். தண்டியடிகளுக்குப் பார்வை இல்லை. அந்த அடியவர், திருக்குளத்தின் உள்ளே ஒரு கல்லை நட்டு அதில் ஒரு கயிற்றைக் கட்டி, கரையில் இன்னொரு நட்டகல்லோடு அதைப் பிணைத்திருப்பார். பிறகு, குளத்துக்குள் இறங்கி நடந்து சென்று தூர்வாரும் திருப்பணியைச் செய்தார்.

அவரை அந்தப் பணியைச் செய்யவிடாமல் தடுத்தார்கள் சில சமணர்கள். அவரைத் தள்ளிவிட்டார்கள் அவரின் மண்வெட்டியையும் கூடையையும் பறித்து எறிந்தார்கள், அவமானப்படுத்தினார்கள். தண்டியடிகள், ஆண்டவனிடம் மனம் நொந்து முறையிட்டார். அன்று இரவு இறைவன், நாயனாரின் கனவில் தோன்றினார். ‘அன்பனே, கவலையுறாதே. உன் கண்கள் ஒளி பெற அருள் செய்வோம்’ என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அதே நேரத்தில், சோழ மன்னனின் கனவிலும் தோன்றி, ‘அடியவர் செய்யும் திருப்பணிக்கு இடையூறு நேர்கிறது. அதைச் சரிசெய்க’ என்று ஆணையிட்டார். மறுநாள் மன்னன், தண்டியடிகளைச் சந்தித்தான். விபரம் கேட்டறிந்தான். சமணர்களை அழைத்து, ‘என்ன நடந்தது?’ என்று விசாரணை செய்தான். சமணர்கள், ‘இந்த அடியவர் பார்வை பெற்றால், நாங் கள் இந்த ஊரைவிட்டுப் போய் விடுகிறோம்’ என்று உறுதி கூறினார்கள்.

தண்டியடிகள் குளக்கரைக்குச் சென்றார். மன்னனும் உடன் சென்றான். மன்னன் கரையிலே நின்று, ‘தண்டியடிகளே, சிவனருளால் பார்வை பெறுதலைக் காட்டுக’ என்றான்.

நாயனார் மனமுருகி, ‘நான் சிவபெருமானுக்குத் தொண்டு செய்வது உண்மையாயின், இத் திருக் கோயிலின் திருத்தொண்டைச் செய்வது உண்மையாயின் பார்வை பெறுதல் வேண்டும்’ என்று வேண்டினார். அற்புதம் நிகழ்ந்தது. அவர் கண்ணொளி பெற்றார். தண்டியடிகள் திருவாரூர்த்திருக்குளத்தில் தம் திருத் தொண்டைத் தொடர்ந்தார்.

திருவாரூர்த் திருக் கோயில்... ‘கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி’ என்னும் பெருமைக்குரியது. இரு பெரிய ஆழித் தேர்கள் கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலம். 1992ஆம் ஆண்டு நம் மகா சந்நிதானம், திருவாரூர்த் தொழிலதிபர் மைதீன் கோவிந்தராசனைச் செயலராகக் கொண்டு, பொது மக்களின் ஆதரவோடு, இயந்திரங்கள் இன்றி, மனித உழைப்பை முழுமையாகப் பயன்படுத்தி, கமலாலயத்தில் தூர்வாரும் பணியைச் செய்தார்கள். பின்னர் தமிழக அரசின் நிதி உதவியும் அந்தத் தூர்வாரும் பணிக்குக் கிடைத்தது. நீர் ஆதாரங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்கிற அழுத்தமான நோக்கம் மட்டுமே நம் மகா சந்நிதானத்துக்கு இருந்தது.

வைகை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்ட போது, இறைவனே அதைத் தடுப்பதற்குத் தன்னார்வத் தொண்டராக, ஓர் ஏழைக் கிழவிக்குக் கூலியாளாகப் பணி செய்தார்.

இவையெல்லாம் நம் நீர் ஆதாரங்கள், சமய வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்திருந்தன என்பதற்கான அடையாளங்கள். குறிப்பாக, நம் நதிக்கரை நாகரிகங்கள் தமிழர் பண்பாட்டுத் தொட்டில்கள். காவிரி ஆற்றங்கரையிலிருக்கும் எண்ணற்ற ஆலயங்கள், நமக்கு ஆன்மீகத்தை, நாகரிகத்தை, வாழ்வியலைக் கற்றுத் தந்திருக்கின்றன.

ஒரு ஞானியிடம், “நாங்கள் தீர்த்த யாத்திரைக்குச் செல்கிறோம்” என்றார்கள் சீடர்கள். ஞானி, ஒரு பாகற்காயை அவர்களிடம் கொடுத்து, நீராடும் போது பாகற்காயையும் சேர்த்து நீராட்டி விட்டுத் தன்னிடம் கொண்டு வந்து சேர்க்கும் படி சொன்னார். சீடர்கள் எல்லாத் தீர்த்தங்களிலும் தங்களோடு, பாகற்காயையும் மூழ்கவைத்து எடுத்தார்கள். தீர்த்த யாத்திரை முடிந்து திரும்பினார்கள்.

“எல்லாத் தீர்த்தங்களிலும் இந்தப் பாகற்காய் நீராடியதா?” குருநாதர் கேட்டார். “ஆமாம்.”

குருநாதர் அந்தப் பாகற்காயைச் சமைக்கச் சொன்னார். அந்தப் பாகற்காய் எல்லோருக்கும் பரிமாறப்பட்டது. சீடர்களின் முகத்தில் கசப்பின் உணர்வு.

“எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடிய பிறகும், பாகற்காய் ஏன் இனிப்பாக மாறவில்லை?” ஞானி கேட்டார். சீடர்களிடம் பதிலில்லை.

இப்படித் தான், கசப்பைச் சுமந்து கொண்டிருக்கும் பாகற்காயைப் போல நாமும் மனதில் கசடுகளைச் சுமந்து கொண்டிருக்கிறோம். இதயத்தில் அன்பு ஒளியை ஏற்றிவைக்க முடியாதவர்களால், எல்லா இடங்களிலும் இறையருளை தரிசிக்க முடியாது.

இதயத்தில் அன்பு ஒளியை ஏற்றி வைத்தால், இதயத்துக்குள் இருக்கும் மாசுகள் அகன்றால், அது அன்புமயமாக இருந்தால் புனித நீராடிய மகத்துவத்தைப் பெறுவோம்

# கொரோனா

## தடுப்பூசிகளை விநியோகம் செய்ய 8000 விமானங்கள் தேவை



கொவிட்-19 தடுப்பூசி கண்டறியப்பட்டு, பொதுமக்கள் விநியோகத்துக்கான அனுமதி கிடைத்ததும் அனைத்து நாட்டு அரசுகளும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கவனத்துடன் திட்டமிட வேண்டும் என்றும் சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

கொவிட்-19 தொற்று நோய்க்கான தடுப்பூசி கண்டறியும் பணிகள் உலக நாடுகளில் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ரஷ்யா ஒரு கட்டம் நகர்ந்து அதன் ஸ்புட்னிக்வி தடுப்பூசியை அந்நாட்டு மக்களின் பயன்பாட்டுக்காக வழங்கிவிட்டது. இதற்கிடையில் மிகவும் நம்பிக்கையான ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் கோவிஷீல்டு தடுப்பூசி சோதனையில் தற்போது பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

ஒருவேளை தடுப்பூசி கண்டறியப்பட்டுவிட்டால் அதனை உலக நாடுகளுக்கு விமானத்தின் மூலம் விநியோகிப்பது பற்றிய கணக்கீட்டை சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் (IATA) வெளியிட்டுள்ளது. தடுப்பூசி இதுவரை பயன்பாட்டுக்கு வராத சூழலிலும் விமான நிறுவனங்கள், விமான நிலையங்கள், சர்வதேச சுகாதார அமைப்புகள் மற்றும் மருந்து தயாரிப்பு நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தடுப்பூசியை விமானத்தில் கொண்டு செல்வது தொடர்பான திட்டங்களைத் தீட்டி வருகிறது சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம்.

இதுபற்றி பேசியுள்ள சங்கத்தின் தலைமை செயல் அதிகாரி அலெக்ஸாண்ட்ரிடி ஜூனியாக், "தடுப்பூசிகளைப் பாதுகாப்பாக உலக நாடுகளுக்கு கொண்டு சேர்ப்பது என்பது இந்த நூற்றாண்டில் சர்வதேச விமான சரக்குப் போக்குவரத்துத் துறை சந்திக்கும் மிகப் பெரிய சவாலாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார். காரணம், தடுப்பூசிகளை அனைத்து வகை விமானங்களிலும் கொண்டு செல்ல முடியாது.

வெப்பநிலை 2 முதல் 8 செல்சியஸாகப் பராமரிக்கும் வகையான விமானங்களின் மூலம் மட்டுமே தடுப்பூசிகளைக் கொண்டு செல்ல முடியும். சில தடுப்பூசிகளுக்கு உறையும் வெப்பநிலை கூட தேவைப்படலாம். இந்த நிலை ஏற்பட்டால் தடுப்பூசியைக் கொண்டு செல்லும் விமானங்களின் எண்ணிக்கை மேலும் குறையக் கூடும். சங்கத்தின் கணக்கீட்டின்படி, உலகம் முழுவதும் தடுப்பூசி விநியோகிப்பதற்கு போயிங் 747 வகையைப் போன்ற பெரிய அளவு ஜம்போஜெட் விமானங்கள் 8,000 தேவைப்படுமாம்.

### ஆபிரிக்காவுக்கு முடியாது!

தென்கிழக்கு ஆசியா உள்ளிட்ட சேமிப்பு வசதிகளும் தடுப்பூசி உற்பத்தித் திறனும் இல்லாத நாடுகளுக்கு தடுப்பூசியைக் கொண்டு செல்வதிலும் சிரமம் ஏற்படும் என்று விமான நிறுவனங்கள் கணித்துள்ளன. குறிப்பாக ஆபிரிக்க நாட்டுக்குத் தடுப்பூசியை விநியோகிப்பது தற்போது இயலாத காரியம்.

அந்நாட்டில் சரக்குப் போக்குவரத்துத்திறன் குறைவாகக் காணப்படுவதோடு மட்டுமல்லாமல், நாட்டின் பரப்பளவு அதிகம் என்பதாலும், பல நாட்டு எல்லைகளைக் கடந்து ஆபிரிக்காவை அடைவதில் சிரமங்கள் ஏற்படும் என்பதாலும் அங்கு தடுப்பூசியை விநியோகிக்க முடியாது என்று சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் கருத்து தெரிவித்துள்ளது.

பெருந் தொற்று காலத்தில் தடுப்பூசி என்பது மிகவும் மதிப்பு மிக்க பொருளாகப் பார்க்கப்படுகிறது. அதனால் பாதுகாப்பான போக்குவரத்தோடு மட்டுமல்லாமல் திருட்டு, கடத்தல் போன்றவை நடைபெறாமல் தடுக்க வேண்டியதற்கான ஏற்பாடுகளிலும் கவனம் செலுத்த வேண்டும். தடுப்பூசி போக்குவரத்தானது கிட்டத்தட்ட இராணுவ கட்டுக்கோப்போடு நடைபெற வேண்டும். எனவே, கொவிட்-19 தடுப்பூசி கண்டறியப்பட்டு, பொதுமக்கள் விநியோகத்துக்கான அனுமதி கிடைத்ததும் அனைத்து நாட்டு அரசுகளும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கவனத்துடன் திட்டமிட வேண்டும் என்றும் சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் அறிவுறுத்தியுள்ளது.

# வேண்டாம் வீண் செலவு



உலக அளவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி காரணமாக உலகளவில் பல்லாயிரம் பேர் வேலை இழந்து வாடுகின்றனர். இந்த இக்கட்டான சூழலில் பொருட்களில் விலை ஒருபுறம் அதிகரித்து வருவதால் மக்களின் வாங்கும் திறன் குறைந்து கொண்டே வருகிறது. இந்த நேரத்தில் குடும்பத்துக்கான எதிர்கால சேமிப்புக்கு எப்படி திட்டமிட வேண்டும். குடும்ப பட்ஜெட்டை எப்படி நிர்வகிக்க வேண்டும் என்பது தொடர்பில் நாம் அவதானமாக இருக்க வேண்டும்.

## நிதி நிலை

வேலையிழப்பு, ஊதிய குறைப்பு ஏற்பட்டு, குடும்பங்கள் கடுமையான நிதி நெருக்கடியைச் சந்திக்கும் சூழல் உள்ளதால், சேமிப்பு பற்றி யோசிக்காமல், கையில் இருக்கும் பணத்தை மிக மிக அவசியத் தேவைகளுக்கு மட்டும் பயன்படுத்த வேண்டும் என்பதில் கவனமாக இருங்கள். வீட்டை விட்டு வெளியே செல்லாமல் இருப்பதால் போக்குவரத்து செலவுகள், வார விடுமுறை நாள் செலவுகள் போன்றவை இல்லாமல் இருக்கிறது. இந்தத் தொகையையெல்லாம் உங்களின் அன்றாடத் தேவை களுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். தற்போது பணியில் இருப்பவர்களுக்கும் எப்போது வேண்டு மானாலும் வேலையிழப்பு ஏற்படும் சூழல் உருவாகியுள்ளதால் வீண் செலவுகளைக் குறைத்து, அவசர கால வைப்பு நிதியை உருவாக்கத் திட்டமிடுவது அவசியம்.

## அவசர காலநிதி

உண்டியல் பணம், வங்கிகளில் சேமித்திருக்கும் தொகைகள் கூட, அவசரகால வைப்பு நிதிகளே. அவசரகால வைப்பு நிதி, சரியான திட்டமிடலின்படி இருந்தால், குடும்பத்துக்கு வரும் எந்த இடர்பாடு களையும் கடந்து விட இயலும். ஒரு குடும்பத்தின் அவசரகால நிதி என்பது குறைந்தபட்சம் குடும்பத் தின் மாதச் செலவைப் போல சுமார் மூன்று மடங்காவது இருக்க வேண்டும். உதாரணமாக வீட்டு வாடகை, மளிகை, மின் கட்டணம், இதர பிற அத்தியாவசிய செலவுகள் சேர்த்து, ஒரு குடும்பத்தின் மாதச் செலவு 20 ஆயிரம் ரூபாய் எனில் அந்தக் குடும்பம் 60 ஆயிரம் ரூபாவை அவசரகால வைப்பு நிதியாக வைத்திருக்க வேண்டும். அப்படி ஒரு சேமிப்பு இதுவரை இல்லையென்றாலும் மற்ற செலவு களைக் குறைத்துக் கொண்டு, அவசரகால வைப்பு நிதியை உருவாக்க திட்டமிடுங்கள். அவ்வாறு நீங்கள் உருவாக்கும் நிதியை வீட்டிலோ அல்லது வங்கி சேமிப்புக் கணக்கிலோ வைத்துக் கொள்ளலாம்

## இலக்குகளைத் தீர்மானியுங்கள்

உங்கள் குடும்பத்தின் மாத வருமானத் தொகையை, நேற்று இன்று, நாளை என்பதன் அடிப்படையில் 30, 40, 30 என்ற சத விகிதத்தின் மூன்று பாகங்களாகப் பிரித்துக் கொள்ளுங்கள். நேற்றைக்கான தொகை உங்களின் கடன் நிலுவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இன்றைக்கான பிரிவில் இருக்கும் தொகை உங்களின் அன்றாடத் தேவைக்களுக்கானது. நாளை க்கான பிரிவில் இருப்பது உங்களின் சேமிப்புக்கானது. சேமிப்புக்காகத் திட்டமிடுபவர்கள் சொந்த வீடு, குழந்தைகளின் உயர் கல்வி, திருமணம், ஓய்வுக்காலம் போன்ற உங்களின் இலக்குகளை நிர்ண யித்துக் கொள்ளுங்கள். இலக்குகளுக்கேற்பவே உங்களின் சேமிப்புத் திட்டமிடல் இருக்க வேண்டும்.

## எப்படிச் சேமிக்கலாம்?

குழந்தைகளின் கல்வி, திருமணம் போன்றவற்றுக்காக சேமிக்கிறீர்கள் எனில் ஐந்து வயதிலிருந்தே சேமிப்பைத் தொடங்கலாம். வட்டி குறைவாக இருந்தாலும் வங்கி, தபால் நிலையங்கள் மூலம் சேமிப்பைத் தொடங்குங்கள். பெண் குழந்தைகளை வைத்திருப்பவர்கள் 'சுகன்யாசம் ரிதியோஜனா' போன்ற அரசின் திட்டங்கள் மூலம் சேமிக்கலாம். பெரும்பாலான பெண்கள் தங்கத்தில் முதலீடு செய்வதை விருப்பமாகக் கொள்வார்கள். தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கங்களில் இருப்பதால் தங்கத்தில் முதலீடு செய்வதைக் கூடுமான வரை தவிர்க்கலாம். குழந்தைகளின் திருமணத்துக்காக சேமிப்பவர்கள் தங்களின் மொத்த சேமிப்பில் ஒரு பகுதியை தங்கத்தில் முதலீடு செய்யப் பயன்படுத்தலாம். தங்கமாக வாங்காமல் பேப்பர் கோல்டாக வாங்கினால், செலவு குறைவதுடன் பாதுகாப்பாகவும் இருக்கும்.

## இன்ஷூரன்ஸ் அவசியம்

எதிர்பாராத மருத்துவச் செலவுகள் ஏற்படும் போது, குடும்பத்தின் பொருளாதாரம் நிலை குலைந்து ஆட்டம் கண்டு விடும். இதைத் தடுக்க ஹெல்த் இன்ஷூரன்ஸ் பொலிசிகளை எடுத்துக் கொள்வது அவசியம். ஹெல்த் இன்ஷூரன்ஸ் பொலிசிகளைப் பொறுத்த வரை அவரவரின் பொருளாதாரச் சூழலுக் கேற்ப, பொலிசிகளை எடுத்துக் கொள்ளலாம்.

## கடன்களைத் தவிர்க்கலாம்

ஆடம்பர செலவுகளுக்காக கடன் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. அநாவசிய கடன்கள் உங்களுக்குத் தெரியாமலே வட்டி என்கிற பெயரில் உங்களின் எதிர்கால சேமிப்புக்கான பணத்தை காலி செய்து விடும். எனவே, ஆடம்பர செலவுகளுக்காக கிரெடிட் கார்டுகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும். குடும்பத்தின் அத்தியாவசியத் தேவைகளுக்காக ஒவ்வொரு மாதமும் கடன் வாங்குகிறீர்கள் என்றால் குடும்பத்தில் இருக்கும் வீண் செலவுகளைக் கண்டறிந்து குறைத்துக் கொள்வது நல்லது. சிக்கன செலவீனம் சேமிப்பை அதிகரித்து உங்கள் எதிர்காலத்தை மகிழ்ச்சியாக்கும் என்பதை நினைவில் கொண்டு செயற்படுங்கள்.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அண்ணன் ஒரு கோயில்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



மல்லிகை முல்லை பொன் மொழி கிள்ளை
அன்புக்கோர் எல்லை உன்னைப் போல் இல்லை
பொன் வண்ண ரதம் ஏறி இம் மண்ணில் எங்கும் ஓடி
பொன் வண்ண ரதம் ஏறி இம் மண்ணில் எங்கும் ஓடி
நல் அன்பு துணைத் தேடி நான் தருவேன்
மல்லிகை முல்லை

சூடிக் கொடுத்தாள் பாவை படித்தாள்
சுடராக எந்நாளும் தமிழ் வானில் ஜொலித்தாள்
கோதை ஆண்டாள் தமிழை ஆண்டாள்
கோதை ஆண்டாள் தமிழை ஆண்டாள்
கோபாலன் இல்லாமல் கல்யாணம் வேண்டாள்

கன்னித் தமிழ் தேவி மைக் கண்ணன் அவள் ஆவி
தன் காதல் மலர் சூடி மாலையிட்டாள்

தோகை மீனாள் பூவை ஆனாள்
சொக்கேசன் துணையோடு
ஊர்கோலம் போனாள்

தோகை மீனாள் பூவை ஆனாள்
சொக்கேசன் துணையோடு
ஊர்கோலம் போனாள்
மாலை கண்டாள் கோவில் கொண்டாள்
மாணிக்க மூக்குத்தி ஒளி வீச நின்றாள்

தென்றல் தொட்டு ஆட கண் சங்கத் தமிழ் பாட
தன் மக்கள் வெள்ளம் கூட காவல் கொண்டாள்
மல்லிகை முல்லை

மாலை சூடி வாழ்ந்த வேளை
வன வாசம் போனாலும் பிரியாத சீதை

மாலை சூடி வாழ்ந்த வேளை
வன வாசம் போனாலும் பிரியாத சீதை
ராம நாமம் தந்த ராகம்
லவனாக குசனாக உருவான கீதம்

மாமன் என்று சொல்ல
ஒரு.அண்ணன் இல்லை அங்கே
அந்த அண்ணன் உண்டு இங்கே அள்ளி வழங்க

மல்லிகை முல்லை பொன் மொழி கிள்ளை
அன்புக்கோர் எல்லை உன்னைப் போல் இல்லை
பொன் வண்ண ரதம் ஏறி இம் மண்ணில் எங்கும் ஓடி
நல் அன்பு துணைத் தேடி நான் தருவேன்

# ஈழத்தமிழர்களுடன் மலையகத் தமிழர்களை ஒப்பிடாதீர்கள்- ஜீவன் தொண்டமான்

இலங்கையின் அரசியல் வரலாற்றிலேயே 'மிகக் குறைந்த வயதில் அமைச்சரானவர்' என்ற பெருமையைப் பெற்றிருக்கிறார், 25 வயது தமிழரான ஜீவன்தொண்டமான். இலங்கை மலையகத்தில் வசிக்கும் இவர், தமிழ்நாட்டின் சிவகங்கையை பூர்வீகமாகக் கொண்டவர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் தமிழக அரசியல் தலைவர்களுடன் மிக நெருக்கமாக இருந்தவருமான ஆறுமுகன் தொண்டமானின் புதல்வர் ஜுனியர் விகடனுக்கு வழங்கிய செவ்வி.

**"இவ்வளவு சிறிய வயதில் எம்.பியாகவும் அமைச்சராகவும் ஆகியிருக்கிறீர்கள், எப்படி உணர்கிறீர்கள்?"**

"இலங்கைப் பாராளுமன்றத்துக்குள் தேசியப்பட்டியல் வழியாக (இந்தியாவின் ராஜ்ய சபா போல) இளைஞர்கள் பலர் எம்.பியாகியிருக்கிறார்கள். அதற்கு மாறாக, தேர்தலில் போட்டியிட்டு ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வாக்குகள் பெற்று இவ்வளவு இளம் வயதில் எம்.பியாகியிருப்பது மிகவும் பெருமையாக இருக்கிறது. அதேயளவு பொறுப்புகளும் எனக்கு இருக்கின்றன."

**"தெற்காசியாவிலேயே மிகப்பெரிய தொழிற்சங்கம், 'இலங்கை மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சங்கம்' ஆனால், அந்த மக்களின் நிலை இன்னும் அதளபாதாளத்தில் இருக்கிறதே?"**

"கடந்த 35 ஆண்டுகளாகத்தான் எங்களுக்கான உரிமைகளைப்பெற்று' வருகிறோம். அதுவரை, நாங்கள் கம்பனிகளின் (தேயிலைத்தோட்ட நிறுவனங்கள்) கட்டுப்பாட்டில்தான் முழுமையாக இருந்தோம். குடியுரிமை கிடைத்த பிறகுதான், எங்களுக்கான உரிமைகளுக்காகப் போராட ஆரம்பித்து, பல விடயங்களை அடைந்திருக்கிறோம். அதேவேளை, முழுமையான வளர்ச்சியை நாங்கள் அடையவில்லை என்பதும் உண்மை. இனிவரும் காலங்களில் மிக வேகமான வளர்ச்சியை நோக்கிச் செல்வோம்"

**"மலையக மக்களுக்காக எதுவுமே செய்யவில்லை" என உங்கள் தந்தையான, மறைந்த ஆறுமுகன் தொண்டமான் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை எப்படிப் பார்க்கிறீர்கள்?"**

"2003 ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட மூன்று இலட்சம் மக்களுக்கு பிரஜாவுரிமை வாங்கித் தந்தது என் தந்தைதான். மலையகத்திலுள்ள கலாசார நிலையம், ட்ரெயினிங் சென்டர், ஸ்போர்ட்ஸ்காம்ப்ளெக்ஸ் என அனைத்தும் அவர் கொண்டு வந்தவைதான். இன்று இலங்கை அரசு வேலைகளில் மலையக மக்கள் பணியாற்றி



வருவது, அவரின் முயற்சியால் நிகழ்ந்ததுதான்."

**"நாடாளுமன்றத்தில் உங்களின் கன்னி உரையின் போது, 'நாம் அடிமையாக இருக்கிறோம் என யாரும் பேசாதீர்கள்...நாம் இலங்கையர்கள் என்பதில் பெருமை கொள்வோம்' எனப் பேசியிருக்கிறீர்கள். வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் இன ரீதியாக ஒடுக்குமுறைக்கு ஆளாவது உங்களுக்குத் தெரியாதா?"**

"என் தந்தை மீள்குடியேற்ற அமைச்சராக இருந்த போது, அவருடன் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்குப் போயிருக்கிறேன். அரசியல் ரீதியாக அந்த மக்களுக்கு நடக்க வேண்டிய அபிவிருத்தி வேலைகள் எதுவுமே நடக்கவில்லை. மக்கள் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறார்கள். அரசியல் தீர்வுக்காகப் போராடுவது ஒரு பக்கம் இருந்தாலும், மக்களுக்குத் தேவையான விடயங்களையும் கொண்டு வரவேண்டும். கலாசார ரீதியாக நாங்கள் தமிழர்கள் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. அதை விட்டுக் கொடுக்கவும் முடியாது. ஆனால், சட்டரீதியாக நாங்கள் இலங்கையர்கள்தானே!"

**"வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு எந்த அதிகாரங்களும் இல்லாமல், இன ரீதியான ஒடுக்குமுறைக்கு ஆளானதால்தானே அந்த மக்கள் அரசியல் தீர்வுக்காகப் போராட ஆரம்பித்தார்கள், போராடுகிறார்கள்?"**

"வடக்கு-கிழக்கு மக்கள் தங்கள் அடிப்படை உரிமைகளுக்குப் போராடியது போல்தான் மலையக மக்களும் போராடினோம். அவர்கள் ஆயுதமேந்திப் போராடினார்கள். நாங்கள் அஹிம்சை வழியில் போராடினோம். அதனால்தான் எங்களுக்குக் குடியுரிமை கிடைத்தது. நாங்கள் தனிநாடு கேட்டுப் போராடவில்லை. சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருக்கும் நாட்டில், சிறுபான்மையாக இருந்து கொண்டு அவர்களுடன் சண்டைபோட்டு அடிப்படை உரிமைகளைப்பெற முடியாது."

**"மலையக மக்கள் இந்தியாவிலிருந்து சென்றவர்கள் என்கிற அடிப்படையில், உங்களுடைய போராட்டங்கள் சரி, ஆனால், வடக்கு-கிழக்கை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள் தங்களின் அரசியல் உரிமைக்காகப் போராடுவது தவறா?"**

"நீங்கள் கேட்பது நியாயமான கேள்விதான். ஆனால், வடக்கு-கிழக்கில் வாழும் மக்களுக்குத் தண்ணீர் வசதி, றோட் வசதி, வீட்டு வசதி என எந்த அடிப்படை வசதியும் இல்லை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மக்கள் நம்பி வாக்களித்தார்கள். ஆனால், அவர்கள் அந்த மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ மட்டுமல்ல, யார் ஜனாதிபதியாக வந்தாலும் வடக்கு-கிழக்கு மக்களை ஒடுக்கத்தான் செய்வார்கள். மகிந்த ராஜபக்ஷ போரை நடத்தியதால், அவரைக் கெட்டவர் எனச் சொல்கிறார்கள் அவர்ஆட்சியில்தான் அம்மக்களுக்கு அதிகமான அபிவிருத்தித்திட்டங்கள் நடந்திருக்கின்றன என்பதே உண்மை."

**"தமிழர்களை இனப் படுகொலை செய்த அரசில் உங்கள் தந்தையும் அமைச்சரவையில் இருந்தார். தற்போது நீங்களும் அவரின் அமைச்சரவையில் பங்கேற்றிருக்கிறீர்கள்..?"**

"ஆளும்தரப்புக்கு ஆதரவு கொடுத்ததால் மட்டுமே எங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ மொத்தம் 16 இலட்சம் வாக்குகள் வாங்கினார். எங்களுடைய வாக்கு வெறும் ஒரு இலட்சம் தான். இந்த வாக்கை வைத்துக் கொண்டு தனியாக எதுவும் செய்ய முடியாது. அதேவேளையில் அவர்களை ஆதரித்தால் எங்கள் மக்களுக்குத் தேவையான விடயங்களைச் செய்ய முடியும். எங்கள் மக்களின் பாதுகாப்புதான் எங்களுக்கு முதன்மையானது.

தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், எங்களை ஈழத் தமிழர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. ஈழத்தமிழர்கள், அரசாங்கச் சட்டதிட்டத்துக்குக் கட்டுப்பட்டால் போதும். நாங்களோ, அரசாங்கச் சட்டங்களைவிட கம்பனிகளின் சட்டதிட்டத்துக்குக் கட்டுப்பட்டு அடிமைச்சாசனத்துக்குக் கீழ்தான் வாழ்ந்து வருகிறோம். எங்களால் அரசாங்கத்தை எதிர்த்து நிற்க முடியாது. ஆளுங்கட்சி ஆதரவோடு மட்டுமே எங்களால் இங்கே வாழ முடியும். இந்தியாவிலுள்ள அரசியல் தலைவர்கள் எங்களுக்கு ஆதரவு தந்தால் மட்டுமே எங்களுடைய அடையாளங்களைத் தக்கவைத்துக்கொள்ள முடியும்.

ஜுனியர் விகடன்

# கர்ப்பமாக இருக்கிறார் சமந்தா



தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகையாக இருக்கும் சமந்தா, கர்ப்பம் குறித்த கேள்விக்கு சமூகவலைத்தளத்தில் கிண்டலாக பதிலளித்துள்ளார். நடிகை சமந்தா கோலிவுட், டொலிவுட் திரையுலகின் முன்னணி நடிகையாக இருப்பவர். இவர் தெலுங்கு நடிகர் நாகசைதன்யாவை கடந்த 2017ஆம் ஆண்டு காதலித்து திருமணம் செய்துகொண்டார். சமூக வலைத்தளங்களிலும் அக்டிவாக இருக்கும் சமந்தா, அவ்வப்போது ரசிகர்களுடன் உரையாடுவதையும் வழக்கமாக வைத்துள்ளார். அவ்வாறு உரையாடும் போது அவரிடம் பெரும்பாலானோர் கேட்கும் கேள்வி உங்களுக்கு எப்பொழுது குழந்தை பிறக்கும்? என்பது தான். இதற்காக ஒவ்வொரு முறையும் பதில் சொல்லி சலித்துப்போன சமந்தா, தற்போது இருந்து கர்ப்பமாக தான் உள்ளேன். ஏனோ தெரியவில்லை இந்த குழந்தை வெளியே வரமாட்டேன் என்று அடம் பிடிக்கிறது, என கிண்டலாக பதிலளித்துள்ளார்





# கொண்டாட்டத்தில் தளபதி ரசிகர்கள்



இளைய தளபதி விஜய் எப்போதும் தனது ரசிகர்களை ஏமாற்றவேமாட்டார். அவர்களை கொண்டாட வைக்கும் வகையில் வருடத்திற்கு வருடம் ஒரு படம் என கொடுத்துவிடுவார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் ரசிகர்களை நேரில் சந்தித்து புகைப்படங்களும் எடுத்துக் கொள்வார். இந்த வருடம் மாஸ்டர் படம் வெளிவர வேண்டியது, ஆனால் கொரோனா தடுத்துவிட்டது. இதனால் 2021இல் ரசிகர்களுக்கு டபுள் ட்ரீட் கொடுக்க முடிவு செய்துள்ளாராம் விஜய். அது என்னவென்றால் மாஸ்டர் படத்தை 2021 பொங்கலில் ரிலீஸ் செய்ய படக்குழுவிடம் பேசியுள்ளாராம். அதுபோக தனது 65ஆவது படக்குழுவினரிடம் ஸ்கிரிப்டை உடனே தயார் செய்ய சொல்லியுள்ளாராம். அதை அடுத்தடுத்து நடித்துக் கொடுத்து 2021 இலேயே ரிலீஸ் செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளாராம். இது மட்டும் நடந்தால் ரசிகர்களுக்கு செம கொண்டாட்டம் தான்.

# திருமண பந்தத்தில் இணைந்தார் ஆரவ்



பிக்பாஸ் நிகழ்ச்சி முதல் சீசன் டைட்டில் வின்னரான ஆரவ், சரண் இயக்கத்தில் வெளியான மார்க்கெட் ராஜா எம்.பி.பி.எஸ் படத்தின் மூலம் நாயகனாக அறிமுகமானார். ராஜபீமா உள்ளிட்ட சில படங்களில் ஹீரோவாக நடித்து வருகிறார். பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போது நடிகை ஓவியா, ஆரவ்வை ஒரு தலையாக காதலித்தார். நிகழ்ச்சி முடிந்த பிறகும் இருவரும் காதலித்து வருவதாக கிசுகிசுக்கப்பட்டது. இந்நிலையில் ஆரவ்விற்கும், ஜோஷ்வா படத்தில் நாயகியாக நடித்து வரும் ராஹிக்கும் சென்னையில் திருமணம் நடைபெற்றது. இருவருமே பல வருடங்களாகக் காதலித்து வந்த நிலையில், பெற்றோர் சம்மதத்துடன் இந்த திருமணம் நடந்துள்ளது. கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மட்டுமே திருமணத்தில் கலந்து கொண்டனர். இயக்குநர் கே.எஸ்.ரவிகுமார், சரண், விஜய், ரஞ்சித் ஜெயக்கொடி, வருண், ப்ரதீப் கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஆரவ்வுடன் பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் நேரில் வந்து மணமக்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தார்கள். இதர திரையுலகப் பிரபலங்கள் தங்களுடைய சமூக வலைத்தளம் மூலம் வாழ்த்துத் தெரிவித்து வருகிறார்கள்.

# அனைவரையும் சோகத்தில் ஆழ்த்திய வடிவேல் பாலாஜி மரணம்



சின்னத்திரை பிரபல நகைச்சுவை நடிகர் வடிவேல் பாலாஜி உடல்நலக்குறைவால் சென்னையில் காலமானார். அவரின் திடீர் மரணம் ரசிகர்களை சோகத்தில் ஆழ்த்தி உள்ளது. மதுரையை பூர்வீமாக கொண்ட பாலாஜி, மிமிக்கிரி ஆர்ட்டிஸ்ட்டாக தன் வாழ்க்கையை தொடங்கினார். விஜய் டிவியில் ஒளிப்பரப்பான கலக்கப்போவது யாரு நிகழ்ச்சி மூலம் பிரபலமானார். வடிவேலு பாணியில் இவர் செய்த நகைச்சுவைகள் பிரபலமானதால் வடிவேல் பாலாஜி என்றுஅழைக்கப்பட்டார். தொடர்ந்து அந்த டிவியின் நட்சத்திர ஆர்ட்டிஸ்ட்டாக வலம் வந்தார். பல்வேறு நிகழ்ச்சிகளிலும், மேடை நிகழ்ச்சிகளிலும் நடித்தவர், கோலமாவு கோகிலா உள்ளிட்ட படங்களிலும் நடித்தார். இந்நிலையில் கடந்த 15 நாட்களுக்கு முன்பு மாரடைப்பு ஏற்பட்டு அதனால் இரு கைகளும் பக்கவாதத்தால் முடங்கியது. இதையடுத்து சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த போதும் தொடர் போதிய பண வசதி இல்லாததால் இறுதியாக சென்னை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இவருக்கு ஒரு மகன், மகள் உள்ளனர். யதார்த்தமான பேச்சு மற்றும் நகைச் சுவையால் ரசிகர்களை கொள்ளை கொண்ட பாலாஜி, ரசிகர்களிடம் மட்டுமல்லாது வடிவேலுவிடமே பாராட்டை பெற்றவர்.
அவரின் திடீர் மறைவு ரசிகர்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தி உள்ளது





# மலிங்க இல்லாத மும்பை அணி

> “ஒவ்வொரு சீசனிலும், மும்பையின் வெற்றிக்குக் காரணமாய் இருக்கும் மலிங்கவின், மிகச்சிறந்த சீசன் என்றால் 2011 ஆம் ஆண்டு தான். அந்த ஆண்டுதான், 28 விக்கெட்டுகளை வீழ்த்தி ஒரே சீசனில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவராய் ஜொலித்தார்”

6 பந்தில் 9 ரன்கள் எடுக்க வேண்டும்... களத்தில் வொட்சன் இரத்தம் சிந்தி, உயிரைக் கொடுத்து ஆடிக் கொண்டிருக்கிறார். எப்படியும் போட்டியை வென்று கொடுத்து விடுவார் என்பது ரசிகர்களின் எண்ணமாய் இருந்தது. மறுமுனையில், மும்பை இந்தியன்ஸ் அணியின் பக்கமும், பயங்கர டென்ஷன்... யாரைப் பந்து வீசவைப்பது என முடிவெடுக்க முடியாத ரணகளசூழல்... புயல் வேக பும்ரா மற்றும் இறுதி ஓவர்களில் வேரியேஷன் காட்டும் மெக்லாசன் என இருவரின் ஓவரையும் முடித்தாகிவிட்ட நிலையில், கைவசம் இருபபதோ, இரு பௌலர்கள். ஒருவர், அனுபவம் குறைந்தவர். மற்றொருவரோ, அனுபவம் நிறைந்தவர். ஆனால், அன்றைய நாளில், அனுபவம் நிறைந்தவரின், முதல் 3 ஓவர்களில் சி.எஸ்.கே.வீரர்கள், 42 ரன்கள்ள எடுத்து விட்டனர். அதுவும், அவரின் 3ஆவது ஓவரை துவம்சம் செய்து, 20 ரன்களைக் குவித்து விட்டனர். இந் நிலையில், 9 ரன்களை மட்டுமே டிஃபெண்ட் செய்ய வேண்டிய நிலையில், அவரை நம்பி, எப்படி இறுதி ஓவரைக் கொடுப்பது?!


அவர் டிஃபெண்ட் செய்து விடுவாரா, வெற்றியைத் தேடிக் கொடுத்து விடுவாரா எனப்பல கேள்விகள் காத்திருக்க, கப்டன் ரோஹித் ஷர்மா, தைரியமாக, அவரின் கைகளில் பந்தைக் கொடுத்து வீசச் சொல்கிறார். பந்தை முத்தமிட்டுக் கொண்டே வீசிய அந்தக் கைகள், மும்பை இந்தியன்ஸ்'க்கு, நான்காவது ஐபிஎல் கோப்பையைப் பெற்றுக் கொடுத்தது. அந்தக் கைகள் வேறு யாருடையது மல்ல, மும்பை இந்தியன்ஸின் முதுகெலும்பான லசித் மலிங்கவுடையது.

நான்கு முறை ஐபிஎல் கோப்பை, இரண்டு முறை சம்பியன்ஸ் லீக் கோப்பைகளை வென்று அத்தனை அணிகளுக்கும், களத்தில், சிம்ம சொப்பனமாய்த் திகழ்கின்ற அணி மும்பை இந்தியன்ஸ். அத்தகைய பௌலிங் யூனிட்டின் முதுகெலும்பாய், ஒவ்வொரு சீசனிலும் திகழ்ந்து வருகின்ற வேகப்பந்து வித்தகன்தான் மலிங்க. அவர் இல்லாமலிருப்பது, மும்பை அணிக்கு பேரிழப்பு.

முதலில் சச்சின், பிறகு ரோஹித் என மும்பையின் பட்டிங்கிற்கான அடித்தளத்தை வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வெவ்வேறு நபர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருப்பினும், மும்பையின் பௌலிங் யூனிட் மொத்தமும் 2009 ஆம் ஆண்டிலிருந்து சவாரி செய்து வந்திருப்பது மலிங்கவின் தோள்களில்தான்.

மும்பையின் சார்பாக, 122 போட்டிகளில் 170 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார் மலிங்க. இவருக்கு அடுத்ததாய் மும்பை இந்தியன்ஸின் சார்பாக அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பௌலர் ஹர்பஜன் தான். அவர் 136 போட்டிகளில் 127 விக்கெட்டுகளை எடுத்திருக்கிறார். இவர்களுக்கு இடையேயான ஒப்பீடே சொல்லும் இவர் எந்த அளவுக்கு மும்பையின் ஒற்றை நம்பிக் கையாகத் திகழ்ந்து வந்திருக்கிறார் என்பதனை!

வேகப்பந்து வீச்சாளர்களிடம் இயல்பாகக் காணப்படும் ஒன்று, ஆக்ரோஷம். ஆனால், ஆக்ரோஷத்தின் அடையாளம் கொஞ்சமுமின்றி சிரித்த முகத்துடனே ஸ்டம்ப்புகளைச் சிதறச் செய்து, எதிரணியின் கூடாரத்தை சத்தமேயில்லாமல் காலி செய்யும் மந்திரக்காரர் தான் மலிங்க. தன்னுடைய ஸ்லிங் அக்ஷன் பௌலிங்கால், பட்ஸ்மேன்களின் நரம்பினைச் சில்லிடச் செய்யும் “ஸ்லிங்கா மலிங்க”, சராசரியாக ஒவ்வொரு போட்டியிலும் 1.39 விக்கெட்டுகளை வீழ்த்தி, 170 விக்கெட்டுகளுடன், ஐபிஎல் இல் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறார். அடுத்த இடத்தில் உள்ள டில்லி அணியின் அமித்மிஸ்ரா, 147 போட்டிகளில் 157 விக்கெட்டுகளை வீழ்த்தியிருக்க, மலிங்கவின் அருகில் கூட யாரும் வரமுடியாத சாதனையாக இதைப் பார்க்கலாம்.



குறிப்பாய், குறைந்த ரன்களைத்தன் அணி இலக்காய் நிர்ணயித்திருக்கும் சமயங்களில், அவருடைய தலையில் இரட்டைப் பொறுப்புகள் சுமத்தப்படும் விக்கெட்டை வீழ்த்துவது மற்றும் எதிரணியின் ரன்கள் எகிறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது. இதனைக் கேக்வோக் எனச் சொல்லப்படும் சொல்லாடல் போல மிக எளிதாய்ச் செய்து முடிப்பார்.

தனது ஐபிஎல் பயணத்தில் மொத்தமாய் 2827 பந்துகளை வீசியுள்ள மலிங்க அதில் 1155 பந்துகளை ரன் எதுவும் அளிக்காத டொட் போலாக வீசியுள்ளார் என்பதே இதற்குச்சான்று. அதிக டொட் போலாக வீசியுள்ளவர்கள் பட்டியலில், ஹர்பஜனுக்கு அடுத்ததாய் இரண்டாம் இடத்தில் உள்ளார் மலிங்க.

இவரின் யார்க்கர்களை சமாளித்து ஆடவே பிரம்மப் பிரயத்தனப்படும் அவர்கள், இதில் ரன் எடுப்பது என்பது இயலாத காரணம் என்பதாலேயே, இவரது பந்துகளைத் தொடாமல் அடுத்த பௌலரின் ஓவர்களுக்காகக் காத்திருக்கத் தொடங்கினர். இதனால் தான், இதுவரை 8 மெய்டன் ஓவர்களை வீசி, அதிக மெய்டன் ஓவர்களை வீசியவர்கள், பட்டியலில் நான்காம் இடத்தில் உள்ளார்.

டி-20, பட்ஸ்மேன்கள் ஆதிக்கம் செலுத்தும் கிரிக்கெட் போர்மட். அத்தகைய ஒரு போர்மட்டில், ஒரு பௌலரால் எண்ணற்ற மைல்கல்களை அடைய முடியுமென்றால், அவர் பௌலிங் வித்தையில் சகலமும் கற்ற சாணக்கியனாய்த் தான் இருக்க முடியும். அத்தகையவராய் மலிங்க இருந்ததற்கான இன்னொரு சான்று, ஐபிஎல் இல் அவரது எக்கனமி 7.14 என்பதே!

அதிலும் குறிப்பாய், 2017 மற்றும் 2019 என்ற இரண்டு ஆண்டுகளைத் தவிர, வேறு எப்போதும் அவருடைய எக்கனமி எட்டைத் தாண்டியதில்லை. அப்படி அவர் அறிந்த அத்தனை ஆட்ட நுணுக்கங்களையும், தனக்காய் வைத்துக் கொள்ளாது, துரோணராய் மும்பையின் அத்தனை வேகப்பந்து வீச்சாளர்களிடமும் அவர் எடுத்துப்போய் சேர்த்த தன் விளைவாய்த்தான், மும்பை இந்தியன்ஸ்'க்கு மட்டும் அல்ல இந்திய அணிக்கும் பும்ரா என்ற புயல் மனிதர் கிடைத்தார். யார்க்கர்பந்துகளை எப்படி வீசுவது என்பதை, மலிங்கவிடம் கற்றுக் கொண்டதாய் பும்ராவே குறிப்பிட்டுள்ளார்.

2008, 2009, 2016 மற்றும் 2018 ஆம் ஆண்டு என இந்த நான்கு ஆண்டுகள் மட்டும் தான் மும்பை இந்தியன்ஸ், லீக் சுற்றோடு வெளியேறியது. இதில் நான்கில் மூன்று முறை மலிங்க காயம் மற்றும் இதர காரணங்களால் ஐபிஎல் இல் ஆட முடியாமல் போக தோல்வியின் பள்ளத்தில் துவண்டு விழுந்தது மும்பை இந்தியன்ஸ். இந்த சீசன்களில், ப்ளே ஓபிற்கு முன்னேறாமல், முறையே 5,5,7,5 இடத்தோடு நிறைவு செய்தது. அதனால்தான் அவர் இல்லாததை, மும்பை இந்தியன்ஸ் எப்படி எதிர்கொள்ளப் போகிறது என்ற கவலை ரசிகர்களிடம் ஏற்பட்டுள்ளது.

2011 ஏப்ரலில் நடந்த, டில்லிடேர் டெவில்ஸ்க்கு எதிரான இந்தப் போட்டியில், 22 பந்துகளை வீசி, வெறும் 13 ரன்களைக் கொடுத்து, 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். முதலில் ஆடிய டில்லியை 95 ரன்களில் சுருட்டி, வெற்றியைத் தம்வசமாக்கிக் கொள்ள, மும்பைக்கு இந்த ஐந்து விக்கெட்டுகள் காரணமாய் அமைய, ஐபிஎல் இன் சிறந்த பௌலிங் பிகர்களில் இதுவும் இடம் பெற்றது. மலிங்கவின் மேலும் சில சிறந்த ஸ்பெல்களாய், 2010 ஆம் ஆண்டு பஞ்சாப்புக்கு எதிராக 4/22, 2012இல் டெக்கான் சார்ஜர்ஸ்'க்கு எதிராக 4/16 ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

2013, 2015, 2017, 2019 ஆகிய ஆண்டுகளில் இறுதிப் போட்டிக்கு முன்னேறி, கோப்பையை மும்பை இந்தியன்ஸ் வெல்ல, முக்கியமான பங்களிப்பை அளித்திருந்தார் மலிங்க. இந்த நான்கு இறுதிப் போட்டிகளில் மூன்று முறை சென்னையையும் ஒருமுறை புனேயையும் எதிர்கொண்டது, மும்பை. இதில் அத்தனை போட்டிகளிலும் எதிரணிக்கு இலக்கை நிர்ணயித்து இரண்டாவதாய் பௌலிங் செய்தது மும்பை. இதன் விளைவாக ஒட்டு மொத்த அழுத்தமும் பௌலர்களின் பக்கம் திரும்ப, அதனை அழகாய் எதிர்கொண்டு அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தனர் பௌலர்கள். இந்த பௌலிங் யூனிட்டின் தலைவனாய், இந்த நான்கு இறுதிப் போட்டிகளில் அவருடைய சராசரி வெறும் 7.31. இந்த நம்பரே எடுத்துரைக்கும் அணியின் வெற்றிக்கு எப்படி அவர் வித்திட்டார் என்று!

# இன்றைய பார்வையில்...

(8 ஆம் பக்க தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான இந்தியாவின் நிலைப்பாடு, 1990 இல் இருந்து செயல் அளவில் மாறுதல் அடைந்துள்ளது. அதற்கு இலங்கையில் இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்ட மோதலின் பின்பு இருநாட்டு உறவில் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் இந்திய - இலங்கை உடன்பாட்டை நிறைவேற்றிய ராஜீவ் காந்தியை தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டமிட்டு கொலை செய்ததும் முக்கிய காரணங்களாகும். அதன் விளைவாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் இருநாடுகளின் இடையே இருந்த அணுகுமுறைகளில் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தின.

உடன்பாட்டிலும் அதன் செயலாக்கத்திலும் பல குறைகள் எல்லோர் தரப்பிலும் இருந்தன. அந்த உடன்பாடு முழுமையாக நிறைவேறாமல் போனதற்கு இந்திய மற்றும் இலங்கை அரசியல் கட்சிகள் எடுத்த முடிவுகள் விடுதலைப் புலிகள் கை தவறவிட்ட சமரச முயற்சிகள் ஆகியவை அடங்கும். அவற்றைப் பற்றி நானும் மேலும் பலரும் விமர்சித்துள்ளோம். ஆகவே, உடன்பாட்டின் குறைபாடுகளை இன்னமும் விவாதித்துக் கொண்டிருப்பதில் ஒரு பயனும் இல்லை.

இன்று நாம் தொடரும் கலந்துரையாடல் பொருள் பொதிந்ததாக மக்களின் அடிப்படை அபிலாஷைகளை அடைய வழி காணுமானால், இது கலந்தாய்வாக மாறவேண்டும். அத்தகைய ஆய்வுக்கு நடுநிலையான புரிதல் வேண்டும். ஆனால் இந்தியாவிலும் இலங்கையிலும் இந்த உடன்பாட்டை, பலரும் இந்தியா என்ன செய்ய தவறியது என்ற பிரசாரத்துக்கு ஒரு பகடைக்காயாகவே உபயோகிக்கிறார்கள்.

அந்த உடன்பாட்டின் அடிப்படையே இந்தியா ஒருங்கிணைந்த இலங்கையை உறுதிப்படுத்தி பிரிவினைக்கு எதிராக எடுத்த நிலைப்பாடாகும். இன்று பேசவரும் அறிஞர்கள் சிலர், தனி ஈழ கோரிக்கையை கைவிடாமல், இந்த உடன்படிக்கையை விமர்சிப்பதிலோ அல்லது இந்தியாவுக்கு அறிவுரை கூறுவதிலோ என்ன பயன் என்பது எனக்கு விளங்கவில்லை.

இலங்கையில் வாழ்வாதாரமின்றி தவிக்கும் ஈழத்தமிழர்களுக்கு இரு நாடுகளிலும் உள்ள நல்ல உள்ளங்கள் உதவியோடு ஆக்கபூர்வமான திட்டம் வகுக்க வேண்டும் என்று நான் பலமுறை தமிழ் தொலைக்காட்சியில் அரசியல் தலைவர்களுடன் பங்குபற்றிய கலந்துரையாடல்களில் கூறிவந்துள்ளேன்.

ஆனால் தமிழ் தலைவர்களோ, அரசியல் காரணங்களால் அத்தகைய கூட்டு முயற்சிக்கு இன்று வரை ஈடுபடவில்லை. இதற்கு இருநாட்டு அரசுகளை குறை சொல்லி பயனில்லை. ஈழப் போரில் இரண்டு தலைமுறைகளை இழந்து நிற்கும் போது, நான் தமிழன் என்று மார்தட்டி வீரம் பேசினால் போதாது. விவேகத்துடன் செயற்பட்டு நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதே ஈழத்தமிழரின் வருங்காலத்தை நிர்ணயிக்கும்.

ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷ தேரவாத பௌத்த கலாசார அடிப்படையில் ஆட்சி புரிவோம் என்று வெளிப்படையாக அறிவித்துள்ளார். அவர் கூட்டணி வரும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு அங்கத்தினர் வெற்றிபெற பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அப்போதுதான் கோட்டாபயவின் ஒரு புதிய அரசியல் சாசனத்தை வரைய வேண்டும் என்ற குறிக்கோளை நிறைவேற்ற முடியும். அந்த புதிய சாசனத்தில் 19 ஆவது அரசியல் சாசனத் திருத்தத்தை விலக்கி, ஜனாதிபதியின் செயலாக்க உரிமைகள் முழுமையாக்கப்படும். மாகாண சபைகளை உருவாக்கிய 13 ஆவது சாசனத் திருத்தத்தை விலக்க, அல்லது அதில் காணும் மாகாண சபையின் அதிகாரப் பகிர்வுகளை குறைப்பதில் ஜனாதிபதி ஈடுபடுவார் என்பது என் கணிப்பு. ஆகவே தமிழ் அரசியலின் தற்போதைய மிகப்பெரிய சவால் கோட்டாபயவின் சிங்கள பெரும்பான்மை அரசுடன் தமிழர் இனப்பிரச்சினையைத் தீர்க்க என்ன செய்ய வேண்டும் என்பதாகும்.

தற்போதைய, தெற்காசிய பாதுகாப்பு சூழ்நிலையில் இலங்கையுடன் நல்லுறவை வளர்ப்பதில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி பெரும் ஈடுபாடு காட்டி வருகிறார். அவருக்கு ஜனாதிபதி கோட்டாபய மற்றும் பிரதமர் மகிந்த ஆகியோருடன் சுமுகமான உறவு நிலவுகிறது. வடமாகாணம் சென்ற முதல் இந்திய பிரதமரான மோடி, தமிழர்கள் பிரச்சினைகளை 13 ஆவது சாசனத் திருத்தத்தின் அனுசரணையுடன் தீர்க்கத் தயார் என்பதில் தெளிவாய் இருக்கிறார். அதேசமயத்தில், தமிழ்த்தேசிய கூட்டணி வடமாகாணத்தில் ஆட்சி புரிய கிடைத்த வாய்ப்பை மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யாமல் தவறியது இந்தியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தி இருக்கும் என்பது என் கணிப்பு.


ஆகவே, ஈழத்தமிழர் பிரச்சினையை இன்று மாறி வரும் இலங்கை அரசியல் சூழ்நிலையின் ஒரு அங்கமாக நாம் கருதவேண்டும். அதற்கு இந்தியா எவ்வாறு உதவலாம் என்ற கேள்விக்கு இலங்கையில் வாழும் தமிழ் அரசியல் தலைவர்கள் பங்கேற்காமல் நாம் எப்படி முடிவெடுக்க முடியும் என்பது எனக்கு விளங்கவில்லை.

சுருங்கச் சொன்னால், இந்திய - இலங்கை உடன்பாட்டின் விளைவாக தமிழர்களுக்கு ஓரளவு சுய உரிமை அளிக்கும் 13 ஆவது சாசனத்திருத்தமே பறிபோகும் சூழ்நிலை உருவாகி வருகிறது. ஆகவே பழையன கழித்து, புதியன புகுத்தல் என்ற முதுமொழிக்கு ஏற்ப, கடந்த காலத்து விவகாரங்களை விமர்சித்து அங்கலாய்க்கும் வழிமுறையை விட்டு விட்டு, ஆக்கபூர்வமாக செயற்பட அரசியல்வாதிகளுக்கு நாம் வழிமுறை காண வேண்டும். அதன் முதல் கட்டாமாக 13 ஆவது சாசனத் திருத்தத்தை பாதுகாக்க இந்தியா எவ்வாறு உதவலாம் என்பதை யோசிக்க வேண்டும்.

கேணல். ஆர். ஹரிகரன்

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2114

### சேயோன்



உன் கவலைகளை ஆண்டவனிடம் மட்டுமே சொல்லி அழு... ஏனெனில் அவர் மட்டும்தான் அதை யாரிடமும் சொல்லி சந்தோசப்படமாட்டார்...

### டினுசிகா

ஒரு நீண்ட மௌனம்
கண்ணீர் இல்லா அழுகைக்குச் சமம்.



### கௌசல்யா

தான் உற்பத்தி செய்யும் பொருட்கள் கெட்டுப் போகாமல் இருந்திருந்தால்...
உலக கோடீஸ்வரர்கள் பட்டியலில் விவசாயிகளே முதலிடமாக இருந்திருப்பார்கள்.



### ஜோன்சன்

உங்களிடம் எந்த தவறும் இல்லையெனில் எதிர்த்து பேசுங்கள்...



இல்லையேல் உங்கள் பக்கமும் ஒரு நியாயமும் இருக்கும் என்பதையே மறைத்து விடுவார்கள்!!!


### தரன்

தாங்கு தாங்குன்னு ஒட்டு மொத்த குடும்பத்தையும் அத்தனை இன்னல்களுக்கு மத்தியில் தாங்குபவள் அம்மா.



### தசீ

உதிர்ந்தால் நொறுங்கி விடக் கூடாது என்ற ஆசையில் உடலெல்லாம் தைத்துக் கொண்டதா இலைகள்!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 221

# பித்தவெடிப்புக்கான நிவாரணம்


**எனக்கு வயது 34. எனது இரண்டு குதிக்கால்களிலும் ஏற்பட்டுள்ள பித்த வெடிப்பால் ஏற்படும் வலியினால் எனது அன்றாட வேலைகளைச் செய்ய முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறேன். எனது பித்த வெடிப்புக் குறைவதற்கு ஏதாவது நிவாரணம் உள்ளதா?**

**முதலில் பித்த வெடிப்பு என்றால் என்ன? பித்த வெடிப்பு எவ்வாறு ஏற்படுகின்றது?**

என்பதை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். பித்த வெடிப்பானது பெரும்பாலும் கால்களில் பொதுவாகக் காணப்படும் பிரச்சினைகளில் ஒன்றாகும். பித்த வெடிப்புகள் கால்களின் அழகைக் குறைப்பது மட்டுமல்ல மிகுந்த வலியையும் ஏற்படுத்துகின்றன. எமது உடலின் நிறை எமது கால்களாலேயே தாங்கப்படுகிறது. தொடர்ச்சியாக நீண்ட நேரம் நிற்றல், நடத்தல் போன்றவற்றினால் பாதங்களின் சருமம் கடினமாகவும் தடிப்புத் தன்மையாகவும் மாறுகின்றது.

உடலின் நிறையினால் மேலிருந்து கீழாக அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது. இவ்வாறு அழுத்தம் பிரயோகிக்கப்படும் போது கால்களில் காணப்படும் தோலின் கொழுப்புப்படை விரிவடைகின்றது. இவ்வாறு விரிவடையும்தன்மை குறைவடையும் போது பாதங்களில் பித்த வெடிப்பு ஏற்படுகின்றது.

**பித்த வெடிப்பு ஏற்படக் காரணங்களாவன:** கால்களின் சருமத்தின் உலர்ந்த தன்மை (xerosis), குதிக்கால் தோல் தடித்துக் கடினமாகக் காணப்படுதல் (callus), உடல் நிறைச்சுட்டி அதிகரித்தல் (BMI), நீண்டநேரம் நிற்றல், நடத்தல், தோலின் வளையும் தன்மை குறைவாக இருத்தல், குதிக்கால் மூடப்படாத செருப்பு வகைகளை அணிதல், அருந்தும் நீரின் அளவு குறைதல், குளிரான காலநிலை, உங்கள் வீட்டினுள் வளியின் ஈரப்பதன் குறைவாக இருத்தல், முதிர்ச்சியடைதல், தைரொயிட் சுரப்பி நோய்கள் (Hypothyroidism), நீரிழிவு நோய் (DiabetiaAutno neuropathy),தோல் வியாதிகளான psoriasis , Eczema போன்றவை உங்கள் கால்களில் பித்த வெடிப்பை ஏற்படுத்தும் காரணிகளாகும்.



**பித்த வெடிப்பு ஏற்படும் போது கால்களின் சருமத்தில் காணப்படும் அறிகுறிகளாவன:-** தோல் சிவந்து நிறம் மாறுதல், வலி ஏற்படுதல், தோல் தடித்துக் கரடு முரடாகுதல், தோல் உரிதல், அரித்தல், இரத்தக் கசிவு ஏற்படுதல்.

பித்த வெடிப்பானது ஏற்படும் வகைகளைக் கொண்டு அவற்றைச் சிறியளவான, தற்காலிகமான பெரிய பித்த வெடிப்புகள் என வகைப்படுத்தலாம். சிறியளவான, தற்காலிகமான பித்த வெடிப்புகள் காலநிலை மாற்றங்களினாலும், உடலின் நீர்த்தன்மை பற்றாக் குறையினாலும் ஏற்படுகின்றது. இவ்விரு வகையான பித்த வெடிப்புகளும் தானாகவே மறைந்துவிடும் தன்மையுள்ளவை. வலியோ, இரத்தக் கசிவோ ஏற்படுவதில்லை.

இவ்வகையான பித்த வெடிப்புகள் வேறு எந்த பெரிய விளைவுகளையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் பெரிய பித்த வெடிப்புகள் நீண்ட நாட்களாக வலியையும் வேதனையையும் கொடுக்கும். அத்துடன் ஆழமான பித்த வெடிப்புகள் இரத்தக் கசிவை ஏந்படுத்துவதோடு கிருமித்தொற்றுதலுக்கும் உள்ளாகின்றன. (fungal infection) பித்த வெடிப்பைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது முற்றாக குணமாக்குவதற்கு நீங்கள் பாதணிகள் உங்கள் கால்களுக்கு மென்மைத் தன்மையை கொடுக்கக் கூடியதாகவும் கால்களை மூடக்கூடிய விதத்திலும் சரியாக அணிதல் வேண்டும். நாளாந்தம் அதிகளவு நீர் அருந்துதல் வேண்டும்.

உங்கள் கால்களைப் பற்தூரிகை கொண்டு சவர்க்கார நீரினால் கழுவி நன்றாகத் துடைத்து படுக்கைக்குப் போகுமுன் சிறிதளவு எண்ணெய் அல்லது ஈரப்பதன் தரக்கூடிய கிறீம் வகைகளைப் பூசி படுக்கைக்குச் செல்லவும். இவ்வாறு நாளாந்தம் செய்துவர பித்த வெடிப்புக்கள் குறைய வாய்ப்புண்டு. அதைத் தவிர நீங்கள் உங்கள் உடல் நிறைச் சுட்டியைவிடக் கூடுதலான உடல் நிறை உள்ளவர் எனின் உடல் நிறையைக் குறைக்கும் வழிமுறைகளைக் கைக்கொள்ளவும்.

நீங்கள் தைரொயிட்சுரப்பி நோய் (hypothyroidism), நீரிழிவு, தோல் சம்பந்தமான வியாதிகள் உள்ளவராயின் தோல் சிகிச்சை நிபுணரின் ஆலோசனைகளை நாடுங்கள்.

**மருத்துவர்.சி.கனிமொழி**

# நீரிழிவு உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டியவை

### உணவுக் கட்டுப்பாடு

நீரிழிவு நோயாளர்கள் உடல் நலத்துடன் ஆரோக்கியமாக வாழ வேண்டுமானால் உணவுக்கட்டுப்பாடு அவசியம் என்பது ஏற்கனவே வலியுறுத்தப்பட்டுள்ளது.

1. உணவில் கொழுப்பு 30 சதவீதமாகக் குறைக்கப்பட வேண்டும். எண்ணெயில் பொரித்த உணவுகள் வேண்டாம். கொழுப்புள்ள இறைச்சி வகைகள் தவிர்க்கப்பட வேண்டும்.

2. தவிட்டு அரிசி, தவிட்டுப்பாண், பழங்கள், மரக்கறி வகைகள், பருப்பு, கீரை ஆகியன உகந்த உணவுகள்.

3. மாமிசம் புசிப்பவர்கள் கொழுப்புக் குறைவுள்ள மீன் வகை, கோழி, வான்கோழி என்பன உபயோகிக்கலாம்.

4. இனிப்புள்ள பானங்கள், ஐஸ்கிறீம், சொக்லேட், லட்டு பலகாரங்கள் குறைக்கப்பட வேண்டும். தவிர்த்தல் நல்லது.

5. உப்பு குறைக்கப்பட வேண்டும். தகரத்திலடைத்த உணவுப் பண்டங்களில் உப்பு அதிகமாகையால் அவற்றைத் தவிர்க்கவும்.

6. தினசரி சரியான நேரத்திற்குச் சாப்பிட வேண்டும். பசிக்கவில்லை என்று பட்டினி இருப்பது ஆபத்து.

7. மது அருந்துவதை குறைப்பது நல்லது. தவிர்ப்பது மிகச் சிறந்தது.

### உடற்பயிற்சி

உடற்பயிற்சியானது நீரிழிவு நோய்க் கட்டுப்பாட்டின் முக்கியமானதோர் அம்சமாகும். பின்னேரங்களில் பூங்காக்களிலோ, திறந்த வெளிகளிலோ நடப்பது நல்லது. மெல்ல ஓடுவது, சைக்கிள் ஓட்டுவது, நீந்துவது, நடனமாடுவது என்பன தேவையான பயிற்சிகள். இக்காலத்தில் சன சமூக நிலையங்களில் குழுமப் பயிற்சி, யோகாசனப்பயிற்சி வகுப்புக்களில் பங்கெடுத்துக் கொள்வது அவசியம்.

### எடை குறைப்பு

நமது எடை நாம் உண்ணும் உணவு வகை, மேற்கொள்ளும் உடற்பயிற்சி என்பவற்றில் முக்கியமாக தங்கியிருக்கிறது. உணவிலும், உடற்பயிற்சியிலும் முக்கிய கவனம் செலுத்தினால் எடையைக் சுலபமாகக் குறைக்கலாம்.

நீரிழிவு நோயாளர்களின் எடை கூடும் போது இன்சுலின் தொழிற்பாடு ஒழுங்கு மீறிப் போகிறது. இன்சுலின் சீரான வேலை செய்வதற்கு நமது உயரத்திற்கேற்ற எடையை நிர்வகிப்பது அவசியம்.

### பிரயாண ஒழுங்குகள்

1. நீரிழிவு நோயாளர்கள் நீண்ட பிரயாணத்தை மேற்கொள்ளும் போது தேவையான மருந்துகள், இன்சுலின், இரத்தப் பரிசோதைனைக் கருவிகள் ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும்.

2. தேவையான உணவும், தண்ணீரும் கைவசம் வைத்திருப்பது உபயோகமாக இருக்கும்.

3. நீரிழிவு நோயாளர்களை தொற்று நோய்கள் சுலபமாகத் தாக்குகிறது. எனவே வெளிநாட்டுப் பிரயாணங்களை மேற்கொள்ளும் முன் தேவையான தடையூசிகள், குடல் காய்ச்சல் (Typhoid), மலேரியா எதிர்ப்பு மருந்துகள் ஆகியவை பற்றி கவனமெடுக்க வேண்டும்.

4. நீங்கள் ஒரு நீரிழிவு நோயாளி என்பதையும், நீங்கள் எடுக்கும் மருந்துகளின் விபரங்களையும் கொண்ட ஓர் அடையாள அட்டையை கைப்பையில் வைத்திருப்பது உபயோகமானது.

### நீரிழிவு நோயாளர்கள்

1. கண்டிப்பான உணவுக் கட்டுப்பாட்டையும்

2. கட்டாய உடற்பயிற்சிகளையும்

3. ஒழுங்கான இரத்தப் பரிசோதனைகளையும், அதற்கேற்ப தவறாது மருந்துகள் எடுப்பதையும் தொடர்ந்து மேற்கொண்டு வருவார்களேயானால் நீரிழிவானால் ஏற்படக் கூடிய சிக்கல் நிலையைத் தவிர்த்து உற்சாகமாகவும் ஆரோக்கியமாகவும் நீண்ட நாட்கள் வாழ முடியும்.

**வைத்திய கலாநிதி சிவதியாகராஜா**
**(B.Sc., M.B.B.S , PH.d)**
**லண்டன்.**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**